# தமிழரசு

16-7-1984 75 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2015

ரக்தாக்ஷி — ஆடி 1









# தமிழகத்தில் நிறுவப்பட்டுவரும் முதல் பருத்தி விவசாயிகள் ஆலை

# தேனி கூட்டுறவு நூற்பாலை லிமிடெட்.

**தேனி–626531, மதுரை மாவட்டம்.**

பருத்தி விவசாயிகளே!

ஆலையில் பங்கு மூலதனம் எடுத்துப் பருத்தி விவசாய மேம்பாட்டிற்கும், விற்பனைக்கும், புதுப்பாதை அமைத் திடுவீர்!

சமூக-பொருளாதார தொழில் ரீதி யாகப் பின் தங்கியுள்ள ஆண்டி பட்டிப் பகுதியின் கூட்டுறவுத் தொழில் வளர்ச்சிக்குக் கூடித் துணை நிற்பீர்!

**கி. ராஜமாணிக்கம் எம்.ஏ.,**
மாவட்ட வருவாய் அலுவலர்/நிர்வாக இயக்குநர்

**வி. சந்திரலேகா, இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சியர்/தலைவர்.



# புதிய மாவட்டங்கள் மலருகின்றன!

அலை சொல்லும் செய்தி

"மாவட்ட நிர்வாகத்தை மேலும் பயனுள்ளதாக்குவதற்கென மாநிலத்தில் உள்ள சில பெரிய மாவட்டங்களைப் படிப்படியே பிரிக்கும் முடிவை அரசு எடுத்துள்ளது. இதன்படி இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட இராமநாதபுர மாவட்டம் என்றும், சிவகங்கையைத் தலைமையிடமாகக் கொண்ட பசும்பொன் முத்துராமலிங்கர் மாவட்டம் என்றும், விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்ட காமராஜர் மாவட்டம் என்றும் பிரிக்கப்படும்'' என்று மேதகு ஆளுநர் திரு எஸ்.எல்.குரானா அவர்கள் சட்டமன்றக் கூட்டு அவையில் 13.2.1984ல் ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்கள்.





திருநெல்வேலி, மதுரை, தஞ்சை வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, திருச்சி ஆகிய மாவட்டங்களும் நிருவாகவசதிகளை முன்னிட்டுப் பிரிக்கப் பெறும் என்றும், புதிய மாவட்டங்களின் பரப்பளவு, உள்ளடங்கும் வட்டங்கள், அங்கு ஏற்படுத்தப்பட வேண்டிய வசதிகள் ஆகியவற்றைக் குறித்து வல்லுநர் குழு ஆராய்ந்து அறிந்து அரசிற்குப் பரிந்துரைகள் செய்யுமென்றும், அதன் பின்னர் அரசு தக்கபடி ஆராய்ந்து ஏற்ற வகையில் முடிவெடுத்து அந்த முடிவுகளைப் படிப்படியாக நிறைவேற்றும் என்றும் அந்த உரையில் மேதகு ஆளுநர் தெரிவித்தார்.

ஆளுநர் உரைக்குப் பின்னர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தக் கருத்தை வலியுறுத்திச் சட்டமன்றத்தில் உரையாற்றினார்.

தமிழக அரசின் இரண்டாவது செயலாளர் திரு டி.வி. அந்தோணி அவர்களைத் தலைவராகவும், திரு ஏ.பத்மநாபன், இ.ஆ.ப. திரு என். ஹரிபாஸ்கர், இ.ஆ.ப. ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு, மார்ச் 30 ஆம் நாளன்று இராமநாத புரம், சிவகங்கை ஆகிய ஊர்களுக்கும் 31 ஆம் நாளன்று விருதுநகருக்கும் சென்று ஆய்வு நடத்தித் தனது அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்தது.

1910 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய வட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு சிவகங்கை, இராமநாதபுரம் ஜமீன் பகுதிகளுடன் சேர்க்கப்பட்டு, பழைய மதுரை மாவட்டத்தின் ஒரு பகுதியாகத் தற்போதைய இராமநாதபுரம்மாவட்டம் இருந்தது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து சுலபமாகத் தொடர்பு கொள்ளக்கூடிய மத்திய பகுதி போன்ற அம்சங்களை ஆய்ந்து பார்த்து மதுரை நகரமே, இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகரமாக அந்நாளில் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மக்களுக்கு சிறந்த நன்மைகள் சீக்கிரம் கிடைத்திட, நிருவாக வசதிகளை முன்னிட்டு- 'இந்த இராமநாதபுரம் மாவட்டம் மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்படுகிறது.

மேதகு ஆளுநர் அவர்கள் அறிவித்ததுபோல் விருதுநகரைத் தலைமையிடமாகக்கொண்ட காமராஜர் மாவட்டம், சிவகங்கையைத் தலைமையிடமாகக் கொண்ட பசும்பொன் முத்துராமலிங்கர் மாவட்டம், இராமநாதபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட இராமநாதபுரம் மாவட்டம் ஆகியவை ஜூலை 15,16,17 ஆகிய நாட்களில் மலர்கின்றன.

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2015
ரக்தாக்ஷி — ஆடி 1
மலர் : 15 16-7-1984 இதழ் : 2




புதிதாக அமைக்கப்படும் 3 மாவட்டங்களையும் காட்டும் படம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆறு வட்டங்கள் கொண்ட இரு கோட்டங்கள் இருக்கும்.

விருதுநகர், அருப்புக்கோட்டை, திருச்சுழி ஆகிய பகுதிகள் கொண்ட அருப்புக்கோட்டைக் கோட்டம், சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், இராஜபாளையம் ஆகிய பகுதிகள் கொண்ட சிவகாசிக்கோட்டம் காமராஜர் மாவட்டத்தில் அடங்கும்.

இராமநாதபுரம், இராமேஸ்வரம், திருவாடானை ஆகிய பகுதிகள் கொண்ட இராமநாதபுரம் கோட்டம், பரமக்குடி, முதுகுளத்தூர், கமுதி ஆகிய பகுதிகள் கொண்ட பரமக்குடிக் கோட்டம் இராமநாதபுரமாவட்டத்தில் அடங்கும்.

சிவகங்கை, இளையான்குடி, மானா மதுரை ஆகிய பகுதிகளைக் கொண்ட சிவகங்கைக் கோட்டம், தேவகோட்டை, திருப்பத்தூர், காரைக்குடி ஆகிய பகுதிகளைக் கொண்ட தேவகோட்டைக் கோட்டம் பசும்பொன் முத்துராமலிங்கர் மாவட்டத்தில் அடங்கும்.

காமராஜர் மாவட்டத்தின் பரப்பளவு 4223 சதுர கிலோ மீட்டர், மக்கள் தொகை 13.40 இலட்சம். பசும்பொன் முத்துராமலிங்கர் மாவட்டத்தின் பரப்பளவு 4,136 சதுர கிலோ மீட்டர்: மக்கள் தொகை 9.73 இலட்சம். இராமநாதபுர மாவட்டத்தின் பரப்பளவு 4,216 சதுர கிலோ மீட்டர்; மக்கள் தொகை 10.19 லட்சம்.

புதிதாக உருவாகும் காமராஜர் மாவட்டத்தின் அமைப்புக்கான தனி அலுவலராகத் திரு எல்.என்.விஜயராகவன், இ.ஆ.ப., பசும்பொன் முத்துராமலிங்கர் மாவட்டம் அமைப்புக்கான தனி அலுவலராகத் திரு நரேஷ் குப்தா, இ.ஆ.ப. நியமிக்கப்பட்டுள்ளனர்.

மூன்று மாவட்டங்களிலும் குடியிருப்பு வசதித் திட்டம், குடிநீர் வினியோகத் திட்டம் ஆகியவை மேற்கொள்ளப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்திற்குத் தலைநகரம் இல்லாதிருந்த குறை, இந்தப் புதிய மாவட்ட அமைப்பினால் போக்கப்படுவதுடன், புதிய உத்வேகத்துடன் வளர்ச்சிப் பணிகள் நடைபெற வழியேற்பட்டுள்ளது என்பதில் ஐயமில்லை.

## புதிய மாவட்டங்கள்
### சில தகவல்கள்—

* இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இதுபோன்று ஒரு மாவட்டத்தின் தலைநகரம் வேறொரு மாவட்டத்தில் அமைந்திருக்கும் நிலை இருந்திருக்க முடியாது.
* மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இராமநாதபுரம் மாவட்டம் இருந்ததால், அது நல்ல முறையில் வளர்ச்சி பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் தற்போது அது மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்படுகிறது.
* 1984-85 நிதி ஆண்டுக்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
* ஹட்கோ, எல்.ஐ.சி. போன்ற நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெற்று வீட்டு வசதி வாரியப் பணிகளுக்காக காமராஜர் மாவட்டத்திற்கு ரூ. 80 லட்சம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திற்கு ரூ. 194 லட்சம், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 83 லட்சம் செலவிடப்படும்.
* குடிநீர் வசதிக்காகப் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திற்கு ரூ. 40.6 லட்சம், காமராஜர் மாவட்டத்திற்கு ரூ. 25 லட்சம், ஒதுக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பெரிய கண்மாயின் கொள்ளளவை அதிகப்படுத்தி தண்ணீர் வசதி செய்வதற்கு ரூ. 1.17 லட்சம் செலவிடப்படுகிறது.
* புதிய மாவட்ட அமைப்பினை ஒட்டி இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி புதிய வருவாய்க் கோட்டமாக அமைகிறது.
* மூன்று மாவட்டத்திற்கும் உரிய தனி அலுவலர்களின் அலுவலகங்கள் மதுரையில் சிறிது காலத்திற்கு இயங்கும்; ஓராண்டுக் காலத்திற்குள் அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள் இயங்கும்.
* இரண்டாண்டுக் காலத்திற்குள் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகக் கட்டடங்கள் முழுமையாகக் கட்டி முடிக்கப்பெறும்.
* மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள் அமைப்பதற்காக கரமராஜர் மாவட்டத்திற்கு ஏறக்குறைய 40 ஏக்கர் நிலத்தையும், இராமநாதபுர மாவட்டத்திற்கு 50 ஏக்கர் நிலத்தையும், பசும்பொன் முத்துராமலிங்கம மாவட்டத்திற்கு 135 ஏக்கர் நிலத்தையும் அரசு வழங்கியுள்ளது.



# காமராஜர் பெற்ற மகிழ்ச்சி

மு. நமசிவாயம்

**மு**தலமைச்சராகக் காமராஜ் கோலோச்சி வந்த காலம்.

**கடைக்காரர்கள் தூது**

தமிழ்நாடு குடியிருப்பு மற்றும் வாடகைக் கட்டுப்பாடு (திருத்த) மசோதா செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு விடப்படுகிறது.

செலக்ட் கமிட்டி சிபாரிசுகள் சட்டசபையில் அறிவிக்கப்படுகின்றன. வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்திலிருந்து கடைகளுக்கு ''விலக்கு'' அளிக்கப்படும் என்பதும் திருத்த மசோதாவில் ஒரு ஷரத்து; செலக்ட் கமிட்டியின் சிபாரிசு!

கடைகளுக்கு வாடகைக்கட்டுப்பாடு இல்லை, கடை உரிமையாளர் தமது இஷ்டம்போல் வாடகையை நிர்ணயிக்கவும் காலி செய்யவும் உரிமை பெறுகிறார்கள். திருத்த மசோதாவின் விளைவு இது.

கடைக்காரர்கள் அதிர்ச்சி அடைகின்றனர். 'திடும்' எனக் கடையைக் காலி செய்யச் சொன்னால், வாடகையை உயர்த்தினால் என்ன ஆகும்?

கடைக்காரர்கள் வர்த்தக சபையினர் பலரும் ஒன்று கூடுகின்றனர். அழுகும் பொருள் வியாபாரிகள் சங்கத் தலைவர், எஸ். சூரியநாராயணன் தலைமையில் ஒரு தூதுக்குழு, முதலமைச்சர் காமராஜரைச் சந்திக்கிறது.



கடைக்காரர்களது அச்சத்தைப் புரிந்து கொள்கிறார் காமராஜ்.

''சரி! மொத்தமாக எல்லாக் கடைகளுக்கும் கட்டுப்பாடு போடறது சரியில்லே. மாதம் ரூபாய் இருநூறு வாடகையும் அதற்கும் கீழ் உள்ள கடைகளுக்கு சட்டப்படி பாதுகாப்பு கொடுத்திடறேன். ரூபாய் இருநூறுக்கு மேற்பட்ட பெரிய கடைகளுக்கு விதிவிலக்கு கொடுக்கலாம், திருப்திதானே!'' கேட்கிறார், காமராஜ்.

''ரொம்பத் திருப்தி! மசோதா நாளைக் காலல சட்டசபையில் விவாதத்திற்கு வருகிறது. நாளைக்கே சட்டம் ஆயிடுமே?'' —தூதுக்குழுவினர், கவலையைத் தெரிவிக்கின்றனர்

'' அது தெரியும்ங்கறேன். நாளைக்கு வரட்டும். இருநூறு ரூபாய் வரையிலுள்ள கடைகளுக்கு, கட்டுப்பாடு உண்டு. அதற்கும் மேலேதான் விலக்கு உண்டுன்னு ஒரு திருத்தம் — சர்க்கார் தரப்பிலிருந்து திருத்தம் சேர்த்துட்டாப் போச்சு! கவலைப் படாதீங்க! நான் பார்த்துக்கறேன்''.

நன்றி தெரிவித்துவிட்டு தூதுக்குழுவினர் எழுந்து விடைபெற்றுச் செல்ல முனைகின்றனர்.

**கண்ட்ரோலை எதிர்ப்பதா ?**

''கொஞ்சம் உட்காருங்க! 'கண்ட்ரோல் கூடாது. கட்டுப்பாடு வேண்டாம்' என்று கூப்பாடு போட்டீங்களே! இப்ப உங்களுக்கே, 'கண்ட்ரோல்

கட்டுப்பாடு' அவசியம்னு புரியுது இல்லே! சரி, போயிட்டு வாங்க!''

கரம் கூப்பி விடை கொடுக்கிறார் காமராஜ்.

காமராஜரின் அனுபவ அறிவுக் கூர்மையைக் கண்டு, வியாபாரிகள் தூதுக்குழுவினர் பிரமித்துப் போகின்றனர்.

## குமுறும் இளைஞன்

காமராஜரது வாழ்வில் மற்றுமோர் நிகழ்ச்சி! முதலமைச்சராகத் தாம் பதவி ஏற்றது குறித்து அவரே சந்தோஷப்பட்டுக் கொண்ட நிகழ்ச்சி.

ஒரு நாள், கோட்டையில் நிருபர்கள், முதலமைச்சர் காமராஜரைச் சந்தித்துவிட்டு வெளியே வருகிறோம்.

அப்போது, வெளியில் ஓர் இளைஞன், முகத்தைக் கைகளினால்தாங்கியபடியே, குமுறிக்கொண்டு இருப்பதைக் காண்கிறேன்.

''என்ன? ஏன்'' என்று கேட்கிறேன்.

அந்த வாலிபன் கூறியதைக் கேட்டதும் பதைப்புடன் முதலமைச்சர் காமராஜ் அறைக்குள் ஓடுகிறேன், வாலிபனையும் பிடித்து இழுத்துக் கொண்டு!

''என்ன?'' கனிவுடன் கேட்கிறார்.
உடன் வந்த வாலிபனைப் பார்த்து ''என்ன, விஷயம், எந்த ஊரு? என்ன பேரு? என்ன படிக்கிறே?'' என்கிறார்

வாலிபன் கதறி விடுகிறான்.

''அழாதேப்பா? என்ன சங்கதி சொல்லு! எதுவானாலும் சொல்லு'' —தட்டிக் கொடுக்கிறார் காமராஜ்.

**ஸ்காலர்ஷிப் ரத்து**

இளைஞனது வாய் குளறுகிறது. கோவையாக வார்த்தைகள் வெளிப்படவில்லை.

இளைஞனது 'இக்கட்டு' என்ன என்பதை விளக்குகிறேன்.
அந்த இளைஞன், ஒரு கல்லூரியில் பி.எஸ்ஸி. பட்டப்படிப்பு— முதலாண்டு படிக்கிறான். பிற்பட்டோர் ஸ்காலர்ஷிப் கிடைத்தது. இப்போது முதலாண்டு இறுதித்தேர்வு நடக்கப்போகிறது. ஹால் டிக்கட்டுகள் கொடுக்கப்பட்டு விட்டன. இந்தச் சமயம், இந்த இளைஞனது ஸ்காலர்ஷிப் ரத்து செய்யப்பட்டு விட்டது. காரணம், ''அவன் ஜாதி பிற்பட்ட வகுப்பு இல்லை'' என்று கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதாம். எனவே, ஏற்கெனவே சர்க்கார் கொடுத்த இரண்டு டெர்ம் சம்பள உதவித் தொகையைத் திருப்பித் தர வேண்டும்.
அதோடு டெர்ம் சம்பளத்தையும் அந்த மாணவனே கட்டியாக வேண்டும். அப்போதுதான் பரீட்சை எழுத ஹால் டிக்கட் கொடுக்கப்படும். இந்த இளைஞனிடம் பணம் ஏதுமில்லை. பரீட்சை எழுத முடியாது மேலும் படிக்கவே இயலாது.

இந்த நிலையிலிருந்து விடுபட வேண்டும். பரீட்சை எழுத வேண்டும். மேலே தொடர்ந்து படிக்க வேண்டும். முதலமைச்சர் காமராஜ் அவனைக் காப்பாற்ற வேண்டும்.

இதுதான் அந்த இளைஞனது இக்கட்டு! கஷ்டம்!

பொறுமையாகக் கேட்டுக் கொள்கிறார் காமராஜ். துடிப்புடன் நிமிர்ந்து உட்காருகிறார்.



அன்னையுடன் காமராஜர்

**அது எப்படி முடியும்?**

டெலிபோனை எடுக்கிறார் ''கிருஷ்ணையா (தனி உதவியாளர்) உடனே, இங்கே வாங்கோ!.. வேண்டாம்.. உடனே எஜுகேஷன் செக்ரட்டரியையும், ஹரிஜன் வெல்பேர் டைரக்டரையும் இங்கே வரச் சொல்லுங்க! உடனே வந்தாகணும்!''

காமராஜ் அழைப்பிற்கிணங்க அதிகாரிகள் வந்து விட்டனர்.

''இந்தப் பையனுக்குப் படித்தாகணும், ஹால் டிக்கட் கொடுக்கச் சொல்லுங்க!''

கட்டளையிடுகிறார், காமராஜ்.

'அந்தப் பையனுடைய ஜாதி பிற்பட்டோர் பட்டியலில் இல்லிங்க.ஸ்காலர்ஷிப்கொடுப்பதற்கு வழியே இல்லையே''-அதிகாரிகள் தங்களது இயலாமையைத் தெரிவிக்கின்றனர்.

''சட்டப்படி முடியாதென்று சொல்றீங்க! அப்படித்தானே? சரி! முதல்லே இந்தப் பையனுக்கு எப்படி ஸ்காலர்ஷிப் கொடுத்தீங்க? அது எந்தச் சட்டப்படி?''

''ஜாதிப் பெயரில் ஒரு எழுத்து மயக்கம். அதனாலே அவனும் பிற்பட்ட ஜாதின்னு தப்பாக

நினைச்சு ஸ்காலர்ஷிப் சாங்க்ஷன் ஆயிட்டுது. இப்பத் திப்பைக் கண்டு புடிச்சிட்டோம்!''

''தப்பாக நினைச்சு கொடுத்திட்டிங்க! தப்பைக் கண்டு பிடிச்சு நிறுத்திவிட்டீங்க. படிப்பு நடுவிலே அந்தப் பையன் என்ன செய்வான்? எங்கே பணம் புரட்டுவான்? தப்புன்னு அவனிடம் பணத்தைத் திருப்பிக் கேட்கறீங்க? நீங்கள் தப்பாகக் கொடுத்ததற்கு என்ன பரிகாரம் செய்வது?

''சரி சொல்றேன் கேட்டுக்குங்க! இந்தப் பையனுக்கு உடனே ஹால் டிக்கட் கிடைக்க ஏற்பாடு பண்ணுங்க!''—காமராஜ் கண்டிப்பு இது.

''அதெப்படி முடியும் இந்தப் பையனைப் போலவே பலபேர் இருக்கிறார்களே?'' - அதிகாரிகள் திகைக்கின்றனர்.

**சட்டத்தை மாற்றி விடுவோம்!**

''அப்படியா? இந்தப் பையன் ஒருத்தன் என்னைப் பார்த்துச் சொன்னான். அதனால் அவனைப் போலத் திண்டாடும் எல்லாப் பசங்களுக்கும் நன்மையாகப் போச்சுது...

''முடியாதா? சட்டத்தை மாற்றி விடுவோம்! இந்தப் பையனைப் போல பாதிக்கப் பட்ட எல்லாப் பையன்களுக்கும் ஹால் டிக்கெட் கொடுக்கச் சொல்லுங்க! உதவிச் சம்பளம்--அதான் ஸ்காலர்ஷிப் கொடுக்கக் கூடாது என்று நீங்க கண்டு பிடிச்ச தப்பைப் பத்திக் கவலைப்படாதீங்க, C.M's oral order படி ஸ்காலர்ஷிப் தொடரட்டும்! File அனுப்புங்க. Ratify செய்து (முன் தேதியிலிருந்து ஸ்காலர்ஷிப் கிடைப்பதற்கான) ஆர்டர் பொட்டுடறேன்.''

அதிகாரிகள் விடைபெற எழுந்து விட்டனர்.

''உட்காருங்க! வெள்ளைக்காரன் காலத்தில் பியூராக்ரசி (அதிகாரவர்க்கம்) இட்டதே சட்டம். அதற்கு மேல் கேட்ககவோ, முறையிடவோ முடியாது. ஆனால் இப்போது நடப்பது நம்ம சர்க்கார், சுதந்திர சர்க்கார். இது டெமாக்ரசி (ஜனநாயக ஆட்சி). ஜனங்களைப் பொதுவாகப்பாதிக்கும் இப்படிப பட்ட விஷயங்களை எங்களை—சுதந்திர சர்க்கார் மந்திரிகளைக் கலந்து முடிவு செய்யுங்க. ஜனங்களுக்கு ஏற்றபடி சட்டம் இருக்கணும், அப்படியில்லே மாத்திடலாம். மாத்தியாக வேண்டும். இதுதான் டெமாக்ரசி! இதை மனசில வைச்சுகிட்டு நிர்வாகம் பண்ணுங்க!''—விடை கொடுக்கிறார் காமராஜ்.

''தம்பி! கவலைப்படாதே! ஹால் டிக்கட் வந்துடும். நன்றாகப்படி.''

மகிழ்ச்சிப் பூரிப்பில் திளைந்திருந்த மாணவனைத் தட்டிக் கொடுத்து அனுப்புகிறார் காமராஜ்.

''சுதந்திரம் வந்தாச்சு! சில பேர் மந்திரியாக வாய்ப்பு கிடைச்சுது. நானும் முதலமைச்சராக ஆயிட்டேன்! ஏண்டா இப்படி பதவி வகிக்கிறோம்னு சிலநேரம் தோணுது. பதவின்னு இருக்கிறதால்தானே இந்தமாதிரி ஏழைப் பையனுக்குப் படிக்க வழி செய்ய முடிகிறது. பதவி வகிப்பதிலும் சந்தோஷம்தான்! நல்லது செய்ய முடிகிறதே!''

தமக்குத்தாமே கூறிச் சந்தோஷப்பட்டுக் கொள்கிறார் முதலமைச்சர் காமராஜர்.

ரஷ்யாவில் குழந்தைகளுடன் காமராஜர்



**செயல் அரசு :**

அதிகம் படிக்காத காமராஜ் ஆட்சியில் மிக அதிகம்பேர் படிக்கும் வாய்ப்புக் கிட்டியது.

மக்களுக்கு வசதியாக, சட்டம் இயங்க வேண்டும் என்று மக்களுக்கு ஏற்றபடி சட்டங்களைத் திருத்தினார். புதிய சட்டங்களையும் போட்டார் காமராஜர்.

பெருந்தலைவர் காமராஜ் வழியில், மக்கள் திலகம், புரட்சித் தலைவர் முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். ஆட்சித் தேரினை நடாத்திச் செல்கிறார்.

காமராஜ் பிறந்த நாளினை ஆண்டுதோறும் அரசாங்க விழாவாகக் கொண்டாடும் தமிழக அரசு காமராஜரின் நல்ல எண்ணங்களையும் செயல்படுத்திடும் செயலரசாக விளங்குகிறது மகிழ்ச்சிக்கு உரியதாகும்.

# பாராட்டுக்குரிய பசும்பொன்னார்



தேவருக்கு நாம் செய்யும் ஒரே கடமை அவருடைய ஆத்மா சாந்தி அடைய நாம் எடுத்துக் கொள்ளும் ஒரே பணி-தேவருடைய புனிதமான உள்ளத்தில் உறைந்து கிடந்த எண்ணங்களை நிறைவேற்றுவது தான்.

—பேரறிஞர் அண்ணா



தந்தை பெரியார் அவர்களால் பெரியார் என்று பாராட்டப்பட்டவர் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் ஆவார். பி.கே. மூக்கையாத்தேவர் பொன்விழா மலரில், தந்தை பெரியார் அவர்கள் எழுதியுள்ள கட்டுரையில், "பெருமைமிக்க பெரியார் முத்துராமலிங்கத்தேவர்" என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

* * * *



"பசும்பொன் தேவர் பேசினால், தமிழ் அன்னையே பேசுவதாக நான் நம்புகிறேன். தேவரின் திருவாயில் அமர்ந்து கொண்டு என் தமிழ் அன்னை பேசுகிறாள்" என்று சொல்லித் தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்கள் தேவரைக் கட்டித் தழுவிக் கொள்வது உண்டு.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் தம்முடைய நிலங்களை எல்லாம், அவற்றைக் குத்தகைக்கு எடுத்துப் பயிரிட்டுக் கொண்டிருந்த விவசாயிகளுக்கே கொடுத்து விட்டார். பசும்பொன் தேவர் மறைந்ததும் திரு. மூக்கையாத்தேவர் தம் தலைவரின் பெயரால், அவர் நினைவாகக் கல்லூரிகளைக் கட்ட முன்வந்தார். அப்போது அந்த விவசாயிகளை அணுகி "தேவர் நினைவாகக் கல்லூரிகளைத் தொடங்க ஏதாவது உதவி செய்ய இயலுமா?'' என்று கேட்டார். அந்த விவசாயிகள் தாங்கள் பெற்றிருந்த நிலங்களை எல்லாம் அவர் ஆரம்பிக்க நினைத்த கல்லூரிக்கே அளித்துவிட முன்வந்தார்கள்.





# இளைஞர்களின் மறுமலர்ச்சித் திட்டம்!

**டி. பி. எஸ். சுந்தரநாதன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**_இராமநாதபுரம் மாவட்டம்**

**வே**லையின்மை என்ற ஏக்கத்தை மாற்றி - சுயபலத்தில் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு- படித்த - வேலையில்லாத இளைஞர்களுக்கு - அரசின் சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள் பெரிதும் பயன்படுகின்றன. இந்த வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பல இளைஞர்கள் வரலாறு படைக்க முன்வருகிறார்கள். இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தினால், தான் பயன்பெறுவதைப் பேட்டியின்போது பெருமையுடன் கூறினார்.

''உங்கள் பெயர்?''

''ஆர்.பாஸ்கரன்''.

''உங்கள் சொந்த ஊர்?''

''சிவகாசி''

''நீங்கள் எதுவரை படித்திருக்கிறீர்கள் ?''

''நான் ஒரு பி.ஏ.பட்டதாரி, எனது வயது 23''.

''எந்த ஆண்டு படிப்பை முடித்தீர்கள்?''

''1981ஆம் ஆண்டு.''

''இதுவரை வேலை எதற்கும் முயற்சி செய்யவில்லையா?''

''படித்து முடித்ததிலிருந்து வேலைக்கு முயற்சி செய்து வந்தேன். வேலை எதுவும் கிடைக்கவில்லை.''

"சுயமாகத் தொழில் தொடங்கலாம் என்ற முடிவுக்கு நீங்கள் எப்படி வந்தீர்கள்?''

''வேலை தேடிக் கிடைக்காததால், ஏதாவது சுயமாகத் தொழில் செய்து முன்னேறலாம் என்ற முடிவுக்கு வந்தேன். அதன் விவரங்களை அறிந்து தொழில் தொடங்க அப்ளிகேஷன் போடலாம் என்று தீர்மானித்து, கடந்த ஆண்டு நவம்பர் 11ஆம் நாள் மதுரையிலுள்ள இராமநாதபுர மாவட்டத் தொழில் மையத்திற்குச் சென்றேன். அங்கு பொது மேலாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களை நேரில் சந்தித்து எனது முடிவைத் தெரிவித்து உதவுமாறு கேட்டபோதுதான், இந்தியப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத்திட்டம் பற்றிய விவரங்களும், தமிழக அரசின் தொழில் துறையின் மூலமாக இத்திட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகள் செய்யப்படுவதும், தெரியவந்தது. அதன்பின் உடனடியாக அங்கேயே ஒரு விண்ணப்பத்தை எழுதிப் பொதுமேலாளரிடம் கொடுத்து விட்டு வந்தேன்''.

''உங்கள் விண்ணப்டத்தின் மீது நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டுக் கடன் வழங்கப்பட்டதா?''

''நான் விண்ணப்பம் செய்து சரியாக 15 தினங்கள் கழித்து. நவம்பர் 25ஆம் தேதியன்று நேர் முகத்தேர்வு நடந்தது. எனது தொழிற்கூடம் பற்றிய விவரங்கள் சரியாகப்பட்டதால், அடுத்த 15 தினங்களில் அதாவது டிசம்பர் 9-ந் தேதி எனக்கு சிவகாசி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலமாக ரூ. 25,000 கடன் தொகை வழங்கப்பட்டது. நான் விண்ணப்பித்த ஒரு மாதக்காலத்திற்குள் எனக்குத் தேவையான கடன் தொகை வழங்கப்பட்டது."

''கடன் உதவிபெற்று நீங்கள் என்ன தொழிலைத் தொடங்கினீர்கள்?''

''நான் வண்ணப் புகைப்படம் எடுக்கும் தொழிற்கூடம் துவங்கியுள்ளேன்.

''இந்தத்தொழிலில் உங்களுக்கு ஆர்வம் எப்படி வந்தது?''

''சிவகாசியில் வண்ண அச்சுத் தொழிற்கூடங்கள் அதிகமான அளவில் உள்ளன. தயாரிப்பாளர்களின் பொருட்களுக்கான வடிவமைப்புகளுக்கு இதுவரை ஓவியர்கள் வண்ண ஓவியங்களையே வரைந்து வந்தார்கள். தற்போதுள்ள நவீன முன்னேற்றத்தில், வண்ண ஓவியங்களுக்குப் பதில் வண்ணப் புகைப்படங்களைத் தங்கள் ஓவியங்களில் இணைத்து விரைவாகவும், நல்லமுறையில்

எழுதித் தருகிறார்கள். இது போன்ற தேவைகளுக்கு வண்ணப் புகைப்படப் பிரதிகள் அதிக அளவில் தினமும் தேவைப்படுகின்றன என்பதை அறிந்து கொண்டேன். மேலும் எனது தந்தையார் திரு. கே.ரவீந்திரன் அவர்கள் ஒரு ஓவியர். அவரது ஓவியச்சாலையைப் பார்த்து வந்தபோது எனக்குப் புகைப்படக்கலையில் ஆர்வம் வந்தது. அதோடு அவரிடமும் சிறிதுகாலம் பயிற்சி பெற்றுச் சென்னையிலும் இதற்கெனத் தனிப்பயிற்சி பெற்றேன். இந்த அடிப்படையில்தான் நான் இந்த வண்ணப் புகைப்படத் தொழில் கூடத்தைத் துவங்கியுள்ளேன்''.

''உங்களைத் தவிர இத்தொழிற்கூடத்தில் இன்னும் எத்தனைப் பேர் வேலை செய்கின்றனர்?''

''3 பேர்கள் வேலை செய்கின்றார்கள். இரண்டு மூன்று ஆண்டுகளில் தொழில் வளர்ச்சி அடைந்ததும், 10 பேர்களுக்கு மேல் என்னால் வேலைவாய்ப்புத் தரமுடியும் என்று நம்புகிறேன்.''

''இதில் மாதமொன்றுக்கு வருமானம் எவ்வளவு கிடைக்கும்?''

''மாதத்திற்குச் சுமார் ரூ.1000 வரை கிடைக்கும். தொழில் விரிவானதும் வருவாயும் அதிகரிக்கும்.''

சிவகாசி பாஸ்கரனிடம் உரையாடியபோது அந்த வாலிபரிடம் தன்னம்பிக்கை இழையோடி நிற்பதை அறிய முடிந்தது. வேலை கிடைக்காததால் மனம் தளராது சுயமாக வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொண்ட அவரது முயற்சி பெருமைக்குரியது. இராமநாதபுரம் மாவட்டத்தில் இவரைப்போன்ற பல இளைஞர்கள் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தில் பயன்பெற்று முன்னேறி வருகிறார்கள்.

படித்த வேலையில்லாத இளைஞர்களின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் 2,000 இளைஞர்களுக்கு உதவி புரிய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆர்வமுள்ள 15,157 நபர்கள் விண்ணப்பம் செய்திருந்ததில் 6,676 பேர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 2,056 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்கு ரூ. 2,41,25,500 கடன் தொகை வழங்க, வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. மேற்கண்ட தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் 1137 பேர்களுக்கு 31.3.84 வரை வங்கிகளால் ரூ.1,42,57,000 கடனாக ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**சிவம் எழுதிய நாடகங்கள்:**

சிவாஜி.
தேசிங்கு ராஜன்.
ஜனின சுந்தரி (அ) நாகரீகத்தின் கூடபுடல்.
ஸ்ரீ திலகர் காந்தி தரிசனம்.

**நடத்திய பத்திரிகைகள்**

ஞான பாநு.
பிரபஞ்ச மித்திரன்.
இந்திய தேசாந்திரி.



## வ. உ. சியும் - சிவாவும்.

வ.உ.சிதம்பரம் பிள்ளையும், சுப்பிரமணிய சிவாவும் முதலில் திருச்சிச் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டனர், சில காலத்திற்குப் பின் வ. உ. சி. கோயமுத்தூர் சிறைக்கு மாற்றப் பட்டார். அங்கு செக்கு இழுக்கும் வேலைகள் உள்பட பல கடினமான வேலைகள் செய்தார்! சிவம் திருச்சிச் சிறையில் கம்பளி ரோமம் வெட்டியும், கேழ்வரகு மாவு அரைத்தும் பல கஷ்டமான வேலைகளில் ஈடுபட்டார். இதனால் இவருக்கு உடம்பில் பெரு வியாதி பீடித்தது. திருச்சிச் சிறையில் 8வது பிளாக்கில் ஓர் அரசும்-வேம்பும் சேர்ந்து நட்டார். அது பெரிய விருட்சமாகி வளர்ந்திருந்தது. அந்த ஜோடி மரங்கள் இப்போது அங்கில்லையாம். வியாதியின் காரணமாக சிவம் சேலம் சிறைக்கு மாற்றப்பட்டார். சேலம் சிறையிலிருந்த போது தான் இவர் ''சச்சிதானந்த சிவம்'' என்ற நூலை எழுதி முடித்தார்.

## சிவாவின் இறுதி ரயில் பயணம்

தொழுநோயின் காரணமாக சுப்பிரமணிய சிவாவை ரயிலில் பிரயாணம் செய்யத் தடை செய்து இதற்கான உத்தரவு 1824 ஜனவரியில் பிறப்பித்தது ஆங்கில அரசு. அது முதல் சிவம் தனது குதிரை வண்டியிலும், மாட்டு வண்டியிலும் பிரயாணம் செய்தார். மதுரையில் தங்கியிருந்தபோது சிவத்திற்கு உடம்பு 1925 ஜூலை 21ஆம் தேதி மோசமாக இருக்கவே, அவர் பாப்பாரபட்டிக்கு அடுத்த பாரதபுரம் செல்லத் துணிந்து விட்டார். தனது ஆப்த நண்பரான ஸ்ரீ சுந்தர பாரதியிடம் ஏதோ ரகசியம் சொல்ல, இருவருமே பிரயாணத்திற்குத் தயாரானினர். 22-ஆம் தேதி மதுரை பாலம் ஸ்டேஷனுக்கு இரு வரும் வந்துபிளாட்பாரத்தில் காத்திருந்தனர். வண்டி அங்கு ஓரிரு நிமிடங்கள் தான் நிற்கும். வண்டியும் வந்தது. சிவத்தால் வண்டியில் ஏற முடியவில்லை. நண்பர் சுந்தரபாரதியிடம் ஏதோ சொல்ல அவர் சிவாவை குண்டுக் கட்டாகத் தூக்கி ரயில் பெட்டிக்குள் போட்டார். சிரமப்பட்டு சுந்தரபாரதியின் உதவியுடன் பாப்பாரபட்டிக்கு வந்து சேர்ந்து விட்டார். மறுநாள் ஜூலை 23-ஆம் தேதி அதிகாலை மறைவெய்தினார்.

—ரகமி



# திருஞான சம்பந்தர் இசை விழா

பழம்பெரும் சமயமாகிய சைவமும் பழம்பெரும் தமிழ் மொழியும் வேறு வேறு அல்ல. தமிழர் பண்பாடு இசைத் தமிழையும், இயற்றமிழையும், நாடகத் தமிழையும் போற்றி வளர்த்தது. திராவிட நாகரிகமும் தமிழர் பண்பாடும் சரித்திர எல்லைக்கு அப்பாற்பட்டதாக 'இப்பண்பாடு என்று பிறந்ததோ' என்று எவரும் அறிய முடியாத பழம் பெருமையைக் கொண்டுள்ளதாக இருக்கிறது.

இதனை விளக்கிடும் வகையில் திருஞானசம்பந்தர் இசை விழா திருக்கழுக்குன்றத்தில் 15-6-'84 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவைத் துவக்கி வைத்த மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பேசுகையில்,

''திருக்கழுக்குன்றத்தில் இசை விழா நடப்பது மிகவும் பொருத்தமானது. நால்வரைப் பற்றி எத்தனை பேருக்குத் தெரியும்? நால்வரைப் பாராட்டிப் பேசுபவர்களுக்கே அவர்கள் பற்றித் தெரியவில்லை. அவருடைய இசை பல ஆண்டுகளுக்கு முன்னரே பாராட்டப்பட்டது.

''திருமறைகள்தான் தமிழைப் பாதுகாக்கின்றன. தமிழை அடைமொழியோடு அழைத்தது திருஞானசம்பந்தர் காலத்தில்தான். பழங்கால இலக்கியங்களை நாம் பாதுகாக்கவில்லை. தமிழ் இசை மேடையிலே முழங்க வேண்டும். புதிய உணர்வோடு புதிய ஆராய்ச்சியில் நாம் ஈடுபட வேண்டும். தேவாரம், திருவாசகம் மக்கள் மத்தியில் பரவ வேண்டும். ஆன்மீக அடிப்படையில் சொல்லப்பட்ட கருத்துக்கள் சாகாவரம் பெற்றவை, பழமை என்று பலவற்றை நாம் புறக்கணித்து விட்டோம். ஆன்மீகம், பண்பாளனாகவும் சிறந்த மனிதனாகவும் உருவாக உதவுகிறது.

''இரண்டு தாளத்துடன் 16 வயது வரை நாடு முழுவதும் சுற்றித் தமிழையும்சமயத்தையும் வளர்த்தவர் திருஞானசம்பந்தர். அரவது விழா தமிழ்ச் சமுதாய விழாவாக அமைய வேண்டும்'' என்று கூறினார்.

சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் குறிப்பிட்டதாவது :

''நால்வர் பாடிய இந்தத் திருத்தலத்தில் கலந்து கொண்டு உரையாற்றுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இசை அறிஞர்கள் தமிழ்ப்பாட்டைப் பாடி அதன் மூலம் தமிழை வளர்க்க வேண்டும். பள்ளிகளில் தேவாரப் பாடல்களைச் சொல்லித் தர வேண்டும். இசை மையங்கள் ஏற்படுத்த வேண்டும்''

விழாவிற்கு, அறநிலையத் துறை ஆணையாளர் திரு. கு. ஆளுடையப்பிள்ளை, இ. ஆ. ப., தலைமை வகித்தார்.

கலைமாமணிகள் செம்பனார் கோவில் சகோதரர்கள் திரு முத்துக்குமாரசாமி, திரு வைத்தியநாதன் ஆகியோரின் நாதசுர இசை நிகழ்ச்சியுடன் விழா தொடங்கிற்று.

செங்கற்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திரு ஆனூர் கோ. செகதீசன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழா குறித்த அறிக்கையை டாக்டர் சேலம் எஸ். செயலட்சுமி படித்தார். மாம்பாக்கம் திருக்குறள் பீடம் சிவத்திரு குரு பழனி அடிகளார், இயல், இசை, நாடக மன்றச் செயலர் நடிகமணி டி. வி. நாராயணசாமி, சென்னை நகர செரீப் திருமதி சரோஜினி வரதப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

நால்வர் விழாக்கள் நடந்தாலும், திருஞானசம்பந்தர் விழா இசை விழாவாகச் சிறப்பாக நடைபெற்றது, திருக்கழுக்குன்றத்திற்கு ஒரு தனிச் சிறப்பைத் தந்தது என்றால் மிகையாகாது.

—அ. மருதவிநாயகம்



# தாயகம் திரும்புவோரும் அவர்களது மறுவாழ்வும்

இந்திய மக்கள் அதிலும் குறிப்பாக நம் தமிழக மக்கள் நம்முடைய அண்டைய நாடுகளான பர்மா மற்றும் வியட்நாமில் பல ஆண்டுகளுக்கு முன்பாக வியாபாரம மற்றும் தொழில் காரணமாகக் குடியமர்ந்து நல்ல செல்வாக்கான நிலையில் வாழ்ந்து வந்தனர். பின்னர் 1963 -ல் பர்மா அரசின் திட்டத்தின் கீழ், பர்மாவில் குடியேறிய தமிழர்கள் நம் நாட்டிற்குத் திரும்பி வந்தனர். மேலும் வியட்நாமில் போர்மூண்டு, பின்பு வியட்நாமிய அரசின் ஆணைப்படி வியட்நாமியரல்லாத மற்ற அனைவரும் வெளியேற்றப் பட்டனர். இவ்வாறு பர்மா மற்றும் வியட்நாமிலிருந்து இந்தியர்கள் திரும்பி வந்து கொண்டிருக்கும் போது, இந்தியாவிலிருந்து இலங்கையில் தோட்டத் தொழிலில் வேலை செய்யச் சென்ற ஏராளமான தமிழர்களையும் வெளியேற்ற இலங்கை அரசு தீர்மானித்தது. எனவே பர்மா, வியட்நாம் மற்றும் இலங்கையிலிருந்து இந்தியா திரும்பிய அனைத்து மக்களுக்கும் மறுவாழ்வு அளிப்பது இந்திய அரசின் இன்றியமையாத கடமையாகி விட்டது. பர்மாவிலிருந்து இதுவரை, தமிழ்நாட்டிற்கு 1,44,283 நபர்கள் திரும்பியுள்ளனர். மேலும் வியட்நாமிலிருந்து 2055 நபர்களைக் கொண்ட 501 குடும்பங்கள் திரும்பி வந்துள்ளன. பர்மா மற்றும் வியட்நாமிலிருந்து திரும்பியோருக்கு 30-11-83 முடிய, அரசு கீழ்க் குறிப்பிட்டவாறு மறுவாழ்வு வசதி செய்து கொடுத்துள்ளது.

பர்மா

| திட்டங்கள் | குடும்பங்கள் |
|---|---|
| வணிகக் கடன் ... | 42,721 |
| நிலக்காலனித் திட்டம் | 375 |
| கூட்டுறவு நூற்பாலைகள் | 134 |
| வேலைவாய்ப்பு நிறுவனம் மூலம் வேலைவாய்ப்புப் பெற்றவர் ... | 5,505 |
| முதியோர் உதவித்தொகை | 182 |
| மொத்தம் | 48,917 |
| வீட்டுக்கடன் | 19,520 |

வியட்நாம்

| | |
|---|---|
| வணிகக்கடன் ... | 416 |
| வீட்டுக்கடன் | 25 |

இலங்கையில் நாடற்ற இந்தியர்கள் 9.75 இலட்சம் பேரின் வருங்கால குடியுரிமைப் பிரச்சினை குறித்து, இந்தியா-இலங்கை பிரதமஅமைச்சர்கள்1964-ஆம் ஆண்டு அக்



திருச்சிராப்பள்ளியில் உள்ள தாற்காலிக முகாமில் இலங்கையிலிருந்து திரும்பியோர்களுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

டோபர் மாதத்தில் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டனர். குடும்பத்தில் இயல்பாக ஏற்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கையின் அதிகரிப்புடன் 5.25 இலட்சம் பேர்களை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு இந்தியா குடியுரிமை வழங்கவும், குடும்பத்தில் இயல்பாக ஏற்படும் அதிகரிப்புடன் 3 இலட்சம் பேர்களைத் தன்னிடமே வைத்துக் கொண்டு ஸ்ரீலங்கா குடியுரிமை இலங்கை அரசு வழங்கவும் வேண்டுமென அதில் முடிவு செய்யப்பட்டது. சாஸ்திரி-சிரிமாவோ ஒப்பந்தம் எனப்படுகிற 1964-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் எஞ்சிய 1.50 இலட்சம் பேர்கள் எதிர்காலத்தில் எங்கு வசிக்க வேண்டுமென்பதைப் பின்னால் ஒரு தேதியில் முடிவு செய்வதென விட்டு வைக்கப்பட்டது.

இந்த 1.50 இலட்சம் பேர்களுக்கு இந்தியாவும், ஸ்ரீலங்காவும் முறையே 75,000 பேர்கள் வீதம் குடியுரிமை வழங்குவதற்கு வகை செய்கின்ற இரண்டாவது ஒப்பந்தம் ஒன்றில் 1974, ஜூன் திங்களில் இந்தியா, ஸ்ரீலங்கா பிரதம அமைச்சர்கள் இருவரும் கையெழுத்திட்டனர். ஆக மொத்தம் 6 இலட்சம் பேர்கள் இரண்டு ஒப்பந்தங்களிலும் கணக்கிடப்பட்டவர்கள் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட வேண்டியவர்கள் ஆவர். இந்த 6 இலட்சம் பேர்களும் இந்தியா வந்து சேரும் முன் இவர்கள் குடும்பத்தில் இயல்பாக ஏற்படும் அதிகரிப்புடன் சேர்த்து ஆக மொத்தம் தாயகம் திரும்புவோர்களின் எண்ணிக்கை சுமார் 8 இலட்சம் அளவில் இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு 1964 லிருந்து இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர்கள் தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரத்திற்குக் கப்பல் மூலம் வந்து சேருகிறார்கள். தற்சமயம் அமலிலுள்ள நாணயமாற்று விதிப்படி அவர்களுடைய சொத்துக்களையும், பொதுச் சேமநல நிதியையும் ஓய்வு நிதிப்பணத்தையும் அவர்கள் இந்தியாவிற்குக் கொண்டு வரலாம். இவ்வாறு தாயகம் திரும்பியவர்களில் பெரும்பான்மையோர் பற்றுக் கோடற்றவர்களாகவும் ஆதரவற்ற நிலையில் இருப்பதாலும் இவர்களை இடைக்கால முகாமில் தங்க வைப்பது அவசியமாகிறது. கும்மிடிபூண்டியில் இடைக்கால முகாம் ஒன்று பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோருக்காக 1964 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டு 18 ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்தது. சமீபத்தில் பர்மாவிலிருந்து தாயகம் திரும்புவோர் எவரும் இல்லாததால் இம்முகாம் அரசின் ஆணைப்படி மூடப்பட்டு விட்டது. இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோரைத் திட்ட மையங்கள் அல்லது தொழில் மையங்களுக்கு அனுப்பப்படும் வரை தங்க வைப்பதற்காக இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மண்டபம் என்ற இடத்தில் ஒருமுகாமும், திருச்சிராப்பள்ளியில் கொட்டப்பட்டு என்ற இடத்தில் ஒரு முகாமும் செயல்பட்டு வருகின்றன. இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர் ரூ. 10,000-க்கு மேற்படாமல் சொத்துடைமைகளைக் கொண்டு வருபவர்கள் இந்த முகாம்களில் அனுமதிக்கப்படுகின்றனர். மண்டபம் முகாமில் 639 தங்கும் இடங்களும் கொட்டப்பட்டு முகாமில் 360 தங்கும் இடங்களும் உள்ளன. இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோருக்கு கண்டியிலுள்ள இந்திய உதவித் தூதுவர் அவரவர்கள் குடும்ப அட்டையில் பரிந்துரை செய்துள்ளதற்கிணங்கப் பல்வேறு தொழில்களுக்கு அனுப்பப்படுகின்றனர். அல்லது வணிகக்கடன் அளிக்கப்படுகிறார்கள்.

மேலும் இலங்கையிலிருந்து 5,000 ரூபாய்க்கு மேற்படாத மதிப்புடைய சொத்துடைமைகளைக் கொண்டு வருபவர்களுக்கு இடைத்தங்கல் முகாம்களில் அவர்களின் குடும்ப அங்கத்தினர் எண்ணிக்கையைப் பொறுத்து ரொக்கப்படியும், மலிவு விலையில் கிலோ 57 காசு வீதம் அரிசியும் வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் ரொக்கப்படி தமிழக அரசினால் சமீபத்தில் உயர்த்தப்பட்டு மாதம் ஒன்றிற்கு ரூ. 110 முதல், குடும்ப அங்கத்தினர்கள் எண்ணிக்கையைப்பொறுத்து வழங்கப்படுகிறது. 5அங்கத்தினர்கள்கொண்ட குடும்பத்திற்கு ரூ. 357.50 வழங்கப்படுகிறது. ஐந்து அங்கத்தினர்களுக்கு மேற்பட்ட குடும்பத்திற்குக் கூடுதலாக உள்ள ஒவ்வொரு வயது வந்தவரும், சிறுவரும் (12 வயதிற்குட்பட்டவர்கள்) ரூ. 82.50 மற்றும் ரூ. 27.50 முறையே மாதந்தோறும் பெறத் தகுதியுள்ளவர்கள்.

இலங்கையிலிருந்து திரும்பியோர் இராமேஸ்வரம் துறைமுகத்தில் வந்து சேருகின்றனர்.



**வணிகக்கடன் திட்டம்**

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புபவர்களில் தகுதியானவர்களுக்கு முதல் தவணையாக 3,000 ரூபாயும், இரண்டாவது தவணையாக 2,000 ரூபாயும் மொத்தம் ரூ. 5,000 சிறு வியாபாரம் செய்து சம்பாதிக்க வணிகக் கடனாக வழங்கப்படுகிறது. முதல் தவணையாக வழங்கப்பட்ட ரூ. 3,000 வணிகக்கடனை தக்க முறையில் பயன்படுத்தியோருக்கு மட்டுமே ரூ. 2,000 இரண்டாவது தவணையாக வழங்கப்படுகிறது. கடன் வழங்கப்பட்ட நான்காவது ஆண்டிலிருந்து 12 ஆண்டுகள் சம அளவில் இக்கடனைத் திரும்பச் செலுத்துதல் வேண்டும். 30-11-83 முடிய 70,269 குடும்பங்களுக்கு வணிகக்கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 119.93 இலட்சம் அரசு செலவு செய்துள்ளது.

**வீட்டுக்கடன் திட்டம் (அம்சம் 10)**

வணிகக்கடன் உதவி தவிர, தாயகம் திரும்பியோருக்கு வீடுகள் கட்டிக்கொள்ளக் கடன் வழங்கப்படுகிறது. நகர்ப்புறங்களில் வீடுகள் கட்டிக்கொள்ள 8,000 ரூபாயும், கிராமப்புறங்களில் வீடுகள் கட்டிக் கொள்ள 4000 ரூபாயும் கடனாக மூன்று தவணைகளில் வழங்கப்படுகிறது. 30-11-83 முடிய இவ்வாறு வீட்டுக்கடன் 30,425 குடும்பங்கட்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்காக அரசு இதுவரை ரூ. 82.84 இலட்சம் செலவிட்டுள்ளது.



**தாயகம் திரும்பியோருக்குச் சலுகை விலையில் அரிசிவழங்கப்படுகிறது.**



**கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஆரல்வாய்மொழியில் உள்ள கூட்டுறவு நூற்பாலையில் இலங்கையிலிருந்து திரும்பியோர் பணியாற்றுகின்றனர்.**

**விவசாயக் குடியிருப்புத் திட்டம்**

தாயகம் திரும்புபவர்களில் உழைக்கக் கூடிய - வேளாண்மையில் அனுபவம் உள்ள இந்தியாவில் சொந்தமாக நிலம் இல்லாத குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் குடியமர்த்தப்படுகின்றனர். இவ்வாறு குடியமர்த்தப்படும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 3 ஏக்கர் நிலம் இனாமாக வழங்கப்படுகிறது. நிலத்தைப் பண்படுத்தவும், பாசனக்கிணறு வெட்டவும், மாடு விதை மற்றும் உபகரணங்கள் வாங்கவும், பயிரிடவும் ரூ. 6,850 வரை விவசாயக் கடன் அளிக்கப்படுகிறது. கடன் வாங்கிய மூன்றாவது ஆண்டிலிருந்து எட்டு ஆண்டுகளில் சம அளவாகக் கடனைத் திரும்பக் கொடுக்க வேண்டும். இதுவரை 30-11-83 முடிய 2,161 குடும்பங்கட்கு இவ்வித உதவி அளிக்கப்பட்டுள்ளது.

**தாயகம் திரும்புவோர் கூட்டுறவு மற்றும் அபிவிருத்தி வங்கித் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் தாயகம் திரும்பியோரை வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் நிறுவனங்களுக்கு அவ்வாறு வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் குடும்பம் ஒன்றுக்கு ரூ. 25,000 வரை கடனாக வழங்கப்படுகிறது. இத்தொகை 10 சதவிகித வட்டியில் ஆறு ஆண்டுகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும். இவ்வாறு வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆறுமாத காலம் பயிற்சி பெற வேண்டும். பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றிற்கு ரூ. 82.50 உதவிப்பணமாக வழங்கப்படும். அவர்கள் குடும்பத்திலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்துக் காப்பு நிதி ரூ. 40 முதல் ரூ. 150 வரை 7 நபர்கள் கொண்ட குடும்பத்திற்கும், 7 நபர்கட்கு மேல் உள்ள குடும்பங்களில் 7 நபர்கட்கு மேல் ஒவ்வொரு நபருக்கும் தலா ரூ. 10 வீதமும் வழங்கப்படுகிறது. அவர்களுக்குத் தற்காலிக இடவசதிக்காகக் குடிசைப்பணம் ரூ. 500 மலிவு விலையில் அரிசி கிலோ 57 காசு வீதமும் அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலம் முடிந்தவுடன் வங்கியுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படியான ஊதியத்தில் நிரந்தரமாக்கப்படுகிறார்கள். ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே இவ்வாறு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது.



ஸ்ரீவில்லிபுத்தூர் நூற்பாலையில் இலங்கையிலிருந்து திரும்பியோர் பணியாற்றுகின்றனர்.

**கூட்டுறவு நூற்பாலை**

இத்தொழில் திட்டத்தின்கீழ் தாயகம் திரும்பியோருக்குத் தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. கைத்தறித் திட்ட இயக்குநரால் நிர்ணயிக்கப்பட்டபடி ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே வேலை அளிக்கப்படுகிறது. நூற்பாலையில் வேலைக்கு அமர்த்தப்படும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மத்திய அரசு ரூ. 20,000 கடனுதவி அளிக்கிறது. அவர்களுக்கு ஆறுமாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் இவர்களுக்கு உதவிப்பணம், படிப்பணம் மற்றும் மலிவு விலையில் அரிசி வழங்குதல் போன்ற மத்திய அரசின் உதவிகள் அனைத்தும் வழங்கப்படுகின்றன. பயிற்சி முடிவுற்றவுடன் அவர்கள் பணிபுரியும் ஆலைகளில் உள்ள சம்பள விகிதத்தில் நிரந்தரமாக்கப்படுகிறார்கள்.

**சுயவேலைவாய்ப்பு திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் குடியமர்த்தப்படும் தாயகம் திரும்பியோருக்கு வணிகக்கடனாக அளிக்கப்படும் ரூ. 5,000 ஒரே தவணையில் அனுமதிக்கப்பட்டு, தேசிய மயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியில் வைப்புநிதியாக ஏழு ஆண்டுகளுக்குச் செலுத்தப்படுகிறது. அதை ஏழு ஆண்டுகள் கழித்து 10,000 ரூபாயாகப் பெறலாம். அந்த வங்கி தாயகம் திரும்பியவருக்கு, நலிவுற்றோருக்குவழங்கும்கடனுக்குரிய 4.5 சதவீத வட்டியில் ஆறுமாத இடைவெளியில் மூன்று கறவை மாடுகள் ரூ. 7,500-க்கு வாங்க ஆவன செய்யப்படும். அந்தக் கடனை ஐந்து ஆண்டுகளில் திரும்பச் செலுத்தவேண்டும். கடன் தொகையில் மூன்றில் ஒருபங்கு தொகை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தீவிர கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அரசு மானியமாக வழங்கப்படும். ஏழு ஆண்டு கழித்து ரூபாய் 10,000 ரொக்கமாகக் கிடைப்பதுடன் மூன்று மாடுகளும் சொந்தமாகும்.

**வேலைவாய்ப்பு நிறுவனங்கள் மூலம் வேலைவாய்ப்புகள்**

வேலைவாய்ப்பு நிறுவனங்கள் மூலம் அமர்த்தப்படும் வேலைகளுக்குத் தாயகம் திரும்பியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. நிரந்தரமான ப்ணிகளில் தேவையான இடங்களில் தாயகம் திரும்பியோருக்குக் கல்வித் தகுதியில் விதி தளர்த்தப்படுகிறது.

மாநிலத்தில் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பணிகளுக்கு மனுச் செய்வதற்காகப் பணம் செலுத்துவதிலிருந்தும் தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டியதிலிருந்தும் விலக்கு அளிக்கப்படுகிறது. தாயகம் திரும்பியோரது குழந்தைகள் எட்டாவது வரை கல்விபெற்று தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர விரும்பினால் முன் தொழிற்பயிற்சி நிலையங்களில் கட்டணம் ஏதும் பெறாமல் பயிற்சி அளிக்கப்படுகிறது. முன்பயிற்சி முடிந்தவுடன் மாநிலத்திலுள்ள பல்வேறு தொழிற்பயிற்சி நிலையங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்கள் தகுதிக்கேற்பப் பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு வழங்கப்பட்டுள்ள சாகுபடி நிலங்கள்.



30-11-83 முடிய தாயகம் திரும்பிய 87,957 குடும்பங்களுக்குக் கீழ்க்கண்டவாறு மறுவாழ்வு உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன:

| | திட்டங்கள் | குடியமர்த்தப் பட்ட குடும்பங்கள் |
|---|---|---|
| 1. | நீலகிரி தேயிலைத் தோட்டம் | 2,326 |
| 2. | கன்னியாகுமரி ரப்பர்த் தோட்டம் | 285 |
| 3. | ஆனைமலை சின்கோனாத் திட்டம் | 125 |
| 4. | நிலக்குடியிருப்புத் திட்டம் | 2,161 |
| 5. | மாநிலப் பண்ணைக் கழகம் | 791 |
| 6. | சொந்த நிலம் வாங்கி வேளாண்மைசெய்யும் திட்டம் | 149 |
| 7. | கொடைக்கானல் வேளாண்மைத்திட்டம் | 117 |
| 8. | கூட்டுறவு நூற்பாலைகள் | 2,668 |
| 9. | தாயகம் திரும்புவோர் கூட்டுறவு மற்றும் அபிவிருத்தி வங்கித் திட்டம் ... | 4,236 |
| 10. | வணிகக்கடன் | 70,269 |
| 11. | சுயவேலைவாய்ப்புத் திட்டம் தேசிய நூற் பாலைக்கழகம்மற்றும் பால்பண்ணை | 260 |
| 12. | பிறமாநிலங்களிலுள்ள திட்டங்கள் | 4,570 |
| | மொத்தம் | 87,957 |

தாயகம் பெயர்ந்தோருக்காக அமைக்கப்பட்டுள்ள வியாசர்பாடி வீட்டுவசதித் திட்டம்.



இவ்வாறு இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்குப் பல திட்டங்களில் மறுவாழ்வு அளிக்கப்பட்டதைத் தவிர தற்போது மேலும் பல புதிய திட்டங்களை அமல் படுத்த மைய அரசு அனுமதி அளித்துள்ளது. சில திட்டங்கள் தமிழக அரசு மற்றும் மைய அரசின் பரிசீலனையில் உள்ளன. அவை வருமாறு :

**பால்பண்ணைத் திட்டம்**

சேலம் மாவட்டத்திலுள்ள தம்மநாயக் கன்பட்டி, இராமநாதபுரம் மாவட்டத்தி லுள்ள சாத்தூர் மற்றும் குன்றக்குடி ஆகிய இடங்களில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோரைக் குடியமர்த்தி, அவர்களுக்குப் பால்பண்ணைத் திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பளித்து நிரந்தரமான மாத வருமானம் கிடைக்கச் செய்வதே இத்திட்டத்தின் குறிக் கோளாகும். இத்திட்டத்திற்கு மைய அரசு அனுமதி அளித்துள்ளது.

தம்மநாயக்கன்பட்டியில் 100 குடும்பங் களும், சாத்தூரில் 100 குடும்பங்களும் குன்றக் குடியில் 50 குடும்பங்களும் குடியமர்த்தப் பட்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 5,000 வணிகக்கடனாக வழங்கப்படும். இத்தொகை தேசியமயமாக்கப்பட்ட ஏதாவதொரு வங்கி யில் வைப்புத் தொகையாகச் செலுத்தப் பட்டு மேலும் அதிகத்தொகை வங்கி மூலம் கடனாக வழங்கப்பட்டு, ஒவ்வொரு குடும் பத்திற்கும் அரையாண்டு இடைவெளிக்கு ஒருமுறை 3 கறவைமாடுகள் வீதம் வழங்கப் பட்டு, நிரந்தர வேலைவாய்ப்பும் வருமான மும் கிடைக்க வழி வகுக்கப்படுகிறது.

இத்துறை மற்றும் வங்கி மூலம் வழங்கப் படும் கடன்தொகை சுலபத் தவணைகளில் அவர்களிடமிருந்து வசூலிக்கப்படும். கடன் தொகை முழுதும் செலுத்திய பின் கறவை மாடுகள் அவர்களுக்கே சொந்தமாவதுடன் வங்கியில் செலுத்தப்பட்ட வைப்புத்தொகை யும் அதன் மீதான வட்டியும் சேர்த்து 7 வருடங்களுக்குப் பின் அவர்களுக்கு ரூபாய் 10,000 கிடைக்கவும் வழி செய்கிறது. இத் திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்படும் குடும்பங் களுக்கு வணிகக்கடன் ரூ. 5,000 வியாபாரம் செய்யும் இடத்திற்கான கடன் ரூபாய் 1,000 வீட்டுக்கடன் ரூ. 8,000, மற்றும் குடிசை இனாம் ரூ. 5,000, ஆகிய உதவிகள் வழங்கப் படுகின்றன. இவை தவிர இக்குடும்பங்களுக்கு நொக்கப்படியும் மலிவு விலையில் அரிசியும் 3 மாத காலம் வரை வழங்கப்படும்.

**கோவில்பட்டியிலுள்ள தீப்பெட்டித் தொழிற் சாலையில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பி யோருக்கு வேலை வாய்ப்பளித்தல்.**

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பங்களில் 40 குடும்பங்களுக்குத் திரு நெல்வேலி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டி தீப்பெட்டித் தொழிற்சாலையில் நிரந்தர மான வேலை வாய்ப்பளித்தலே இத்திட்டத் தின் குறிக்கோளாகும். இத்திட்டத்திலும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.5,000 வணிகக் கடனாக வழங்கப்பட்டு, தீப்பெட்டித்தொழிற் சாலையில் கூட்டுறவுச் சங்கத்தில் மூலதன மாகச் செலுத்தப்படும். இச்சங்கம் ஒவ்வொரு குடும்பத்திலும் 2 பேருக்கு நிரந்தர வேலை வாய்ப்பளிக்கும். இதன் மூலம் ஒவ்வொரு

நபருக்கும் ரூ. 250 குறைந்தபட்ச ஊதியமாகக் கிடைக்கும். கூட்டுறவுச் சங்கத்திற்கு வேலைவாய்ப்பளிக்கப்படும் ஒவ்வொரு நபருக்கும் ரூ. 50 வீதம் பயிற்சிக்கட்டணமாக 6 மாதம் வரை அளிக்கப்படும். இவ்வாறு வேலைவாய்ப்பளிக்கப்படும் குடும்பங்களுக்கும் ரூ. 5,000 வணிகக்கடன், ரூ. 8,000 வீட்டுக்கடன் மற்றும் குடிசை இனாம் ரூ. 500 வழங்கப்படும். இச்குடும்பங்களுக்கும் 6 மாத காலம் வரை ரொக்கப்படியும் மலிவு விலையில் அரிசியும் கிடைக்கும். இத்திட்டம் 1983-84, 1984-85-ல் அமல் நடத்தப்படும்.

**மின்விசை பொருத்திய சைக்கிள் ரிக்ஷா வழங்குதல்**

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 100 குடும்பங்களுக்கு மின்விசை பொருத்திய சைக்கிள் ரிக்ஷா வழங்கி வேலைவாய்ப்பளிப்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இவ்வாறு வேலைவாய்ப்பளிக்கப்படும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 5,000 வணிகக்கடனும் ரூ. 1,000 வியாபாரம் செய்யும் இடத்திற்கான கடனும் வழங்கப்பட்டு, இத்தொகையை ஏதாவதொரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் வைப்புத் தொகையாகச் செலுத்தி மேலும் அதிகக் கடன் வசதி பெற்று மின்விசை பொருந்திய சைக்கிள் ரிக்ஷா பெற்றுத் தரப்படும். இத்துறை மற்றும் வங்கியின் மூலம் வழங்கப்படும் கடன் தொகையைச் சுலபத் தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். அவ்வாறு முழுத்தொகையும் திருப்பிய பின் வழங்கப்பட்ட மின்விசை பொருந்திய சைக்கிள் ரிக்ஷா அவர்களுக்குச் சொந்தமாகிவிடும். மேலும் வங்கியில் செலுத்தப்பட்ட வைப்புத் தொகையும் அதற்கான வட்டியும் சேர்த்து பின்னர் ரூ. 10,000 அக்குடும்பங்களுக்கு வழங்கப்படும். இவ்வாறு வேலைவாய்ப்பளிக்கப்படும் குடும்பங்களுக்கும் வணிகக் கடன் ரூ. 5,000, வியாபாரம் செய்யும் இடத்திற்கான கடன் ரூ. 1,000 வீட்டுக்கடன் ரூ. 8,000 மற்றும் குடிசை இனாம் ரூ. 500 ஆகிய உதவிகள் வழங்கப்படும். இக்குடும்பங்கட்கும் ஒரு மாத காலத்திற்கு ரொக்கப்படியும், மலிவு விலையில் அரிசியும் வழங்கப்படும். இத்திட்டம் 1983-84 மற்றும் 1984-85-ஆம் ஆண்டுகளில் அமல் நடத்தப்படும்.

**மைய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ள திட்டங்கள்**

ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட பால்பண்ணைத் திட்டத்தினைக் கீழ்க்கண்ட 13 இடங்களிலும் செயல்படுத்தி இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் சுமார் 1150 குடும்பங்களைக் குடியமர்த்தி வேலைவாய்ப்பளிக்கத் திட்டங்கள் தீட்டப்பட்டு மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

இவ்வாறு வேலைவாய்ப்பளிக்கப்படவிருக்கும் குடும்பங்களுக்கும் ஏற்கெனவே பால்பண்ணைத் திட்டத்தில் குடியமர்த்திய குடும்பங்களுக்கும் உள்ளதுபோல் அனைத்து உதவிகளும் கிடைக்கும். இத்திட்டம் மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டபின் 1983-84, 1984-85-ல் செயல்படுத்தப்படவிருக்கிறது.



தாயகம் திரும்பியோருக்கு, வழங்கப்பட உள்ள மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷாக்கள்.

**திருச்செங்கோட்டில் அம்பர் சர்க்கா திட்டத்தின் கீழ் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பங்களைக் குடியமர்த்தல்**

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 30 குடும்பங்களைக் குடியமர்த்தி அம்பர் சர்க்கா வழங்கி, சுயவேலைவாய்ப்பும் நிரந்தர வருமானமும் கிடைக்கச் செய்தலே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டத்திலும் ரூ. 5,000 வணிகக்கடன் வழங்கி தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் வைப்புத்தொகையாகச் செலுத்தப்பட்டு மேலும் கடன் வசதி பெறப்பட்டு அம்பர் சர்க்கா பிரிவிற்கு வேண்டிய கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்கித் தரப்படும். திருச்செங்கோடு காந்தி ஆசிரமம் இதற்கான பயிற்சியை அளிப்பதுடன் தயாரிக்கப்பட்ட ஆடைகளை அங்காடியில் விற்பனை செய்யும் உதவியையும் நல்கும். இத்துறை மற்றும் வங்கி மூலம் அளிக்கப்படும் கடன் தொகைகள் சுலபத் தவணைகளில் திரும்பப் பெறப்படும். அவ்வாறு கடன் தொகை முழுவதும் செலுத்தப்பட்ட பின் அம்பர் சர்க்கா பிரிவு அவர்களுக்கே சொந்தமாவதுடன் வைப்புத் தொகை மற்றும் அதன் மீதான வட்டியும் சேர்த்து ரூ. 10,000 அளிக்கப்படும். இக்குடும்பங்களுக்கும் வணிகக் கடன் ரூ. 5,000 வீட்டுக்கடன் ரூ. 8,000, மற்றும் குடிசை இனாம் ரூ. 500, ஒருமாத காலத்திற்கு ரொக்கப்படி மற்றும் மலிவு விலையில் அரிசி வழங்கப்படும். இத்திட்டமும் மைய அரசின் ஒப்புதலுக்குப் பின் 1984-85-ல் செயல்படுத்தப்படவிருக்கிறது.

**மதுரை மாவட்டம் டி. கல்லுபட்டி கிராமத்தில் நேபாளி தறிநெசவு நிலையத் திட்டத்தின் கீழ் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பங்களைக் குடியமர்த்தி வேலை வாய்ப்பளித்தல்**

இத்திட்டத்தின் மூலம் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 25 குடும்பங்களுக்குத் தலா ரூ.5,000-ம் வணிகக் கடனாக வழங்கி டி. கல்லுப்பட்டி கிராமத்திலுள்ள காந்திநிகேதன் ஆசிரமத்தில் வைப்புத்தொகையாகச் செலுத்தப்படும். இந்த ஆசிரமம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு நேபாளியத் தறியும் அதற்கான மூலப்பொருட்களையும் வழங்கும். மேலும் இந்த ஆசிரமம், இலங்கை

யிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பங்களுக்கு இத்திட்டத்தின்கீழ் பயிற்சியளிக்கும். இதற்கான டயிற்சிக் கூடம் மைய அரசின் உதவியுடன் 1.50 இலட்சம் செலவில் கட்டப்படும். இத்திட்டத்தின்கீழ் குடியமர்த்தப்படும் குடும்பங்கட்கும் ரூ. 5,000 வணிகக் கடன் ரூ. 8,000 வீட்டுக்கடன், மற்றும் ரூ. 500 குடிசை இனாம் ஆகியவை வழங்கப்படுவதுடன் ஆறு மாத காலம் வரை ரொக்கப்படியும் மலிவு விலையில் அரிசியும் கிடைக்க வழி செய்யப்படும்.

மேற்கூறிய திட்டங்களைத் தவிர இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் குடும்பங்களைக் குடியமர்த்தி மறுவாழ்வளிக்க கீழே குறிப்பிட்டுள்ள திட்டங்களும் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளன.

| திட்டம் | குடியமர்த்தப் படவிருக்கும் குடும்பங்கள் |
|---|---|
| பெரியார் மாவட்ட முந்திரி பதப் படுத்தும் திட்டம் | 30 |
| சேலம் நகரத்தில் மின்விசைப் பொருத்திய சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம் | 50 |
| திருநெல்வேலி மாவட்டத்தில் நாராயணம்மாள் புரத்தல் ஒருங்கிணைப்புத் தொழில் திட்டத்தில் விவசாயப் பண்ணை, வன, மீன்வளர்ச்சி, கோழிப்பண்ணை, பால் பண்ணை மற்றும் பட்டுப் பூச்சிவளர்த்தல் ஆகிய துறைகளில் பயிற்சியும் வேலை வாய்ப்பும் அளித்தல் | 500 |
| குன்றக்குடியில் பட்டுப்பூச்சி வளர்க்கும் திட்டம் | 25 |
| குன்றக்குடியில் பாரதிகுளோரைடு தொழில் திட்டத்தை விரிவாக்குதல் | 10 |
| குன்றக்குடியில் பிளாஸ்டர் ஆப் பாரிஸ் தொழில் திட்டம் | 25 |
| குன்றக்குடியில் பாலிதின் பைகள் தயாரிக்கும் தொழில் திட்டம் | 40 |
| நெய்வேலியில் தையற்பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம் | 200 |
| மொத்தம் | 880 |



இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 87,957 குடும்பங்களுக்கு இதுவரை பல்வேறு திட்டங்களில் குடியமர்த்தி வேலைவாய்ப்பளிக்கப்பட்டதுடன் மேலும் பல திட்டங்களும் தீட்டப்பட்டு, மாநில, மைய அரசுகளின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளன. இதுவரை மொத்தம் மறுவாழ்வளிக்கப்பட்ட 87,957 குடும்பங்களில் 4,570 குடும்பங்கள் மட்டுமே பிற மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம் மற்றும் அந்தமான் நிக்கோபர் தீவு ஆகிய இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் ஏற்கெனவே வேலையில்லா நிலை அதிகமாக உள்ளபோது இவ்வாறு தாயகம் திரும்புவோருக்கும் மறுவாழ்வு வசதி செய்து கொடுக்க வேண்டியிருப்பதும் தவிர்க்க இயலாத நிலையில் உள்ளது. எனினும் இதனைத் தேசிய பிரச்சினையாகக் கருத்திற்கொண்டு, பிற மாநிலங்களும் இந்தச் சமூகப்பணியில் மேலும் அதிக அளவில் பங்கெடுத்துக்கொண்டு தாயகம் திரும்புவோருக்கு மறுவாழ்வு வசதி செய்து கொடுப்பது இன்றியமையாததாகும்.

## கடலிலிருந்து மின்விசை உற்பத்தி

கடலில் பொதிந்திருக்கும் சக்தியைப் பயன்படுத்தி மின்விசை உற்பத்தி செய்யும் சாத்தியப்பாடு பற்றிய ஓர் அறிக்கையை, சோவியத் விஞ்ஞானப் பேரவையின் கடல் இயல் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளின் குழு ஒன்று லெனின் கிராடில் வெளியிட்டுள்ளது.

உலக மாக்கடல்களிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 100 மில்லியன் / மில்லியன் கிலோவாட் மின்சக்தியை உற்பத்தி செய்ய முடியுமென்று அவர்கள் மதிப்பிடுகின்றனர். கடல் நீர் ஆழத்தின் பல்வேறு நிலைகளிலும் வெப்பநிலை வேறுபடுகிறது. இந்த வேற்றுமை அலைகள், கடல்-எழுச்சி, ஆற்று நீர் கடலில் கலக்கும் இடத்தில் ஏற்படும் அழுத்த வேறுபாடு, கடலில் ஏற்படும் நீரோட்டம் முதலிய சக்திகளைப் பயன்படுத்தி மின்விசை உற்பத்தி செய்யலாம் என்பது விஞ்ஞானிகளின் கருத்து.

—சோவியத் செய்தி நிலையம்

# நாளும் வளர்ந்து வரும் சுற்றுலா

இன்று உலகத் தொழில்களில் இரண்டாவது இடத்தைச் சுற்றுலா வகிக்கிறது. சுற்றுலா வளர்ச்சி சமூக-பொருளாதார மேம்பாட்டிற்குப்பெரிதும்உதவும் ஒரு தொழில் என்பது கடந்த பத்தாண்டுகளில்தான் உணரப் பட்டுள்ளது. தமிழக அரசு, இத் தொழில் வளர்ச்சியில் தனிக்கவனம் செலுத்தி தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கு ஆவன செய்து வருகிறது.

கடந்த நான்காண்டுகளாகப் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தமிழகம் வரும் சுற்றுலாப் பயணிகள் வேண்டும் தகவல்கள் கொடுக்கவும், வளர்ச்சிப் பணிகளைக் கவனிக்கவும் சுற்றுலாத்துறையின் களப்பணி அலுவலகங்கள் பல புதிதாகத் திறக்கப்பட்டன.

கீழ்க்கண்ட இடங்களில் புதிதாகச் சுற்றுலா அலுவலகங்களும், தகவல் நிலையங்களும் திறக்கப்பட்டுள்ளன:

சிதம்பரத்தில் 1979ஆம் ஆண்டு சுற்றுலா அலுவலகம் திறக்கப் பட்டது.

சென்னையில் 5.1.1981ஆம் நாள் சுற்றுலா அலுவலகம் திறக்கப்பட்டது.



இராமேசுவரத்தில் 21.1.1976ல் திறக்கப்பட்ட சுற்றுலா தகவல் மையம் 1.7.1983ல் சுற்றுலா அலுவலகமாக உயர்த்தப்பட்டது.

புதுதில்லியில் 11.8.1980ல் திறக்கப்பட்ட சுற்றுலா தகவல் நிலையம், 21.1.1984ல் சுற்றுலா அலுவலகமாக உயர்த்தப் பட்டது.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில்19.3.1980ல் சுற்றுலா தகவல் மையம் திறக்கப் பட்டது.

திருநெல்வேலி இரயில் சந்திப்பு நிலையத்தில் 20-11-1981-ல் சுற்றுலாத் தகவல் மையம் திறக்கப்பட்டது.

சென்ட்ரல் இரயில் நிலையத்தில் 25-5-1981ல் சுற்றுலாத் தகவல் மையம் திறக்கப்பட்டது.

தஞ்சாவூரில் 7 - 5 - 1983ல் சுற்றுலா தகவல் மையம் திறக்கப்பட்டது.

மதுரை விமான நிலையத்தில் 4-7-1883ல் சுற்றுலாத் தகவல் மையம் திறக்கப்பட்டது,

திருச்சி விமான நிலையத்தில் 23-10-1082ல் சுற்றுலாத் தகவல் மையம் திறக்கப்பட்டது.

பெரும்பாலான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பம்பாய்-தில்லி-ஆக்ரா-ஜெய்ப்பூர் என்ற முறையில் வட இந்தியாவிற்கே செல்கின்றனர். தென் இந்தியா வரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மிகவும் குறைவே. எனவே, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் இத்தகைய சுற்றுலாப் பயணத்தை மாற்றி அவர்களைத் தமிழகத்திற்கு ஈர்க்கும் நோக்கத்துடன் 1980ஆம் ஆண்டில் தில்லியில் சுற்றுலாத் தகவல் மையம் திறக்கப்பட்டது. இந்த மையம் தற்போது சுற்றுலா அலுவலகமாக உயர்த்தப்பட்டுள்ளது.

மேற்கு வங்கத்திலிருந்து ஏராளமான சுற்றுலாப் பயணிகள் தமிழகத்தில் உள்ள இராமேசுவரம், கன்னியாகுமரி, மதுரை, காஞ்சிபுரம், போன்ற புனிதத் தலங்களுக்கு தீர்த்த யாத்திரை வருகிறார்கள். இதனை மேலும் அதிகரிக்கும் நோக்கத்துடன் கல்கத்தாவில் ஒரு சுற்றுலா அலுவலகம் விரைவில் திறக்கப்பட உள்ளது.

**மாண்புமிகு செய்தி-**
**அறநிலையத்துறை அமைச்சர்**
**திரு இராம. வீரப்பன்**





ஏற்கெனவே இயங்கிவரும் சுற்றுலா அலுவலகங்களை வலுப்படுத்துவதோடு குறைந்த பட்சம் இள நிலை உதவியாளர்கள் போன்ற பதவிகள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக 1983-84 ஆம் ஆண்டு வரவுசெலவு கணக்கில் ரூ. 70,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

களப்பணி ஆற்றும் சுற்றுலா அலுவலர்கள் சுற்றுலாத்துறை மேற்கொள்ளும் மேம்பாடு, விளம்பரம் மற்றும் திட்டப்பணிகள் செயலாக்கத்தில் மிக முக்கிய பங்கேற்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மாவட்ட அளவில் அவர்கள் மாவட்ட ஆட்சியர், பிற துறை அலுவலர்கள், பயண முகவர்கள் போன்றவர்களோடு சுற்றுலா வளர்ச்சிப் பணிக்காக இணைந்து செயலாற்ற வேண்டியுள்ளது. அவர்கள் பயன்மிக்க முறையில் செயலாற்ற வேண்டுமானால், சுற்றுலாத் தொழிலில் ஏற்பட்டு வரும் நவீன மாறுதல்கள், வளர்ச்சிகள் ஆகியவற்றை நன்கு அறியச் செய்ய வேண்டுவது மிக அவசியமாகிறது. அதற்காக அவர்களுக்குப் புத்தறிவுப் பயிற்சி அளிக்கத் தீர்மானிக்கப்பட்டது. இத்திட்டத்தின் ஒரு அங்கமாக முதல் அணி சுற்றுலா அலுவலர்கள் 1983 அக்டோபர் திங்கள் வட இந்தியாவில் புதுதில்லி, ஆக்ரா, சண்டிகர், சிம்லா, ஜெய்ப்பூர் ஆகிய இடங்களுக்குப் பயிற்சிப் பயணம் சென்று வந்தனர்.

**சுற்றுலாத் துணைவர்கள்:**

சற்றுலா வளர்ச்சிக்கு உறு துணையாகப் போதுமான சுற்றுலாத் துணைவர்கள் இருப்பது இன்றியமையாதது. முக்கியமாக வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு இவர்கள் உதவி அவசியம் தேவை. ஆனால் தஞ்சை, மதுரை, திருச்சி, கன்னியாகுமரி போன்ற தென் மாவட்டங்களில் அத்தகைய வசதி இதுவரை செய்யப்படாமலேயே இருந்தது. இந்தக் குறையைப் போக்க இவ்வரசு சென்ற 1983 மார்ச்சு திங்களில் சுற்றுலாத் துணைவர்கள் பயிற்சித் திட்டம் ஒன்றினை நடத்தி 24 சுற்றுலாத் துணைவர்களுக்குப் பயிற்சி அளித்தது ஒரு முக்கிய சாதனையாகும்.

**மேம்பாடு, விளம்பரம்:**

பயண எழுத்தர்கள், பத்திரிகையாளர்கள், சுற்றுலா முகவர்கள் போன்றவர்களை விருந்தினராக வரவேற்று உபசரித்து நமது சுற்றுலா சிறப்புமிக்க இடங்களைச் சுற்றிக்காட்டி அனுப்பிவைப்பது நமது மாநிலத்திற்குச் சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்க வகைசெய்யும் மற்றொரு முக்கிய வழியாகும். அப்படி வந்து செல்பவர்கள் அவர்களுடைய நாட்டில் வெளிவரும் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் ஆகியவற்றில் நமது சுற்றுலாச் சிறப்புமிக்க இடங்களை அந்த அந்த நாட்டில் வாழும் மக்கள் காணவேண்டும் என்ற அவாவினைத் தூண்டும் வகையில் கட்டுரைகள், சிறு குறிப்புகள், புகைப்படங்கள் முதலியவற்றை வெளியிடுகிறார்கள். வானொலி, தொலைக்காட்சிகள் ஆகியவற்றிலும் சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்கிறார்கள். இத்தகைய ஏற்பாடு அங்குள்ளவர்கள் தமிழகம் வரப் பெரிதும் உதவுகின்றது.

எனவே தமிழக அரசு, இந்திய அரசு சுற்றுலாத்துறை ஏர் இந்தியா, இந்தியன் ஏர்லைன்ஸ், பயண முகவர்கள், ஓட்டல்கள் பிற தென்மாநிலங்கள் ஆகியவர்களின் ஒத்துழைப்புடன் முதன் முதலில் ''தென்னகம் நோக்கி'' என்ற திட்டத்தின்கீழ் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து 60, பயண எழுத்தர்கள், பத்திரிகையாளர்கள், புகைப்படக்காரர்கள் ஆகியோரை நமது விருந்தினராக வரவேற்று உபசரித்து தென்னிந்தியாவில் உள்ள சுற்றுலாச் சிறப்புமிக்க இடங்களை அவர்களுக்குச் சுற்றிக்காட்டி அனுப்பி வைத்தது. அதன் தொடக்க விழா 1977ஆம் ஆண்டு சென்னையில் தமிழகச் சுற்றுலாத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த விழாவில் நமது



கலாசாரம் மற்றும் சுற்றுலாச் சிறப்பிடங்கள் ஆகியவை பற்றி ஒரு கருத்தரங்கமும் ஏற்பாடு செய்யப்பட்டது. அவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் பங்கு கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். இதனால் தென்னகத்திற்கு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்தது. எனவே இந்தத் "தென்னகத்தை நோக்கி" என்னும் திட்டம் மீண்டும் 1979, 1980ஆம் ஆண்டுகளில் செயல் படுத்தப்பட்டது. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட இத்திட்டத்தினால் தென்னகத்திற்கு வரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை சுமார் 20%உயர்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேபோல உள்நாட்டுப் பத்திரிகையாளர்களும் தமிழகத்தைச் சுற்றிப்பார்க்க ஏற்பாடு செய்யப்படுகிறது. அண்மையில் திரு மனோஜ்தாஸ் என்பவர் தமிழகம் முழுவதும் சுற்றிப் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டது. இவர் பல்வேறு பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுத இருக்கிறார். அவ்வப்போது தமிழகம் வரும் அயல் நாட்டுப்பயண முகவர்களுக்கும் வரவேற்பளித்து உபசரிக்கப்படுகிறது. இப்படிச் செய்வதால் நமது வெளிநாட்டுச் செலாவணி செலவழிக்காமல் இவர்கள் மூலம் அவர்களுடைய நாட்டில் தமிழகத்தின் சுற்றுலாச் சிறப்புகளுக்கு நல்ல விளம்பரம் கிடைக்கிறது.

பயனுள்ள சுற்றுலா வெளியீடுகள் கொண்டுவருதல் மற்றொரு சிறந்த சுற்றுலா மேம்பாட்டு விளம்பரச் சாதனையாகும். எனவே, ஆண்டொன்றிற்குச் சுமார் ரூ. 3 இலட்சம் முதல் ரூ.4 இலட்சம்வரை செலவில் பல வகைச்சுற்றுலா வெளியீடுகளைக் கொண்டு வந்து அவற்றை வெளிநாடுகளில் உள்ள இந்தியச் சுற்றுலா மற்றும் ஏர் இந்தியா அலுவலகங்கள் மூலம் அங்குள்ளவர்களுக்கு விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இடைவிடாத மேம்பாட்டு முயற்சியில் பல்வேறு பத்திரிகைகளில் வெளியிடப்படும் விளம்பரம் முக்கிய அங்கம் வகிக்கிறது. அத்தகைய மேம்பாட்டுப் பணியில் குறிப்பாக வட மாநிலங்களில் சிறந்த பத்திரிகைகளில் வண்ண விளம்பரம், சாதாரண விளம்பரம் செய்வதால் அங்குள்ளவர்கள் தமிழகம் காண வருகின்றனர்.

**விழாக்கள், பொருட்காட்சிகள்:**

ஆண்டுதோறும் மலைவாசத் தலங்களில் கோடைவிழாவும் முக்கிய சுற்றுலா மையங்களில் பொங்கல் சுற்றுலா விழாவும் கொண்டாடப்படுகிறது. கடந்த சனவரியில் நடந்த பொங்கல்விழாவின்போது மாமல்லையில் மீனவர்களுக்கான கட்டுமரப் படகுப் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது. இத்தகைய விளையாட்டுப்போட்டி நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.

கடந்த மார்ச்சு திங்களில் தேரழுந்தூரில் கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கு அரசு எடுத்த விழாவில் சுற்றுலாத்துறை பங்கு கொண்டு நூலகத்திற்குப் புத்தகங்கள் வழங்கியதோடு பொம்மலாட்டக் காட்சி ஒன்றிற்கும் ஏற்பாடு செய்தது. இத்தகைய விழாக்களுக்கு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அழைக்கப்பட்டு சிறப்பாக உபசரிக்கப்படுகிறார்கள்.

மதுரையில் நடக்கும் பொங்கல் விழாவின்போது, அங்கு வருகை தந்துள்ளவெளிநாட்டுப்பயணிகள் அருகில் அலங்காநல்லூரில் நடக்கும் மஞ்சு விரட்டு வீர விளையாட்டைக் காண அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

தமிழகத்தின் மிக முக்கியமான பொங்கல் விழாவினையொட்டி கடந்த 11 ஆண்டுகளாகத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆண்டுதோறும் சென்னையில் சனவரி-பிப்ரவரி மாதங்களில் அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை அரசின் ஆதரவுடன் நடத்தி வருகிறது. தமிழகத்தின் பிற முக்கிய நகரங்களில் நடத்தப்படும் அரசு பொருட்காட்சிகளில் சுற்றுலாத்துறை பங்கு கொண்டு சுற்றுலாத்துறையின் சாதனைகளை அரங்குகள், ஒலி, ஒளிக் காட்சி மற்றும் பொம்மலாட்டக் காட்சிமூலம் விளக்குகிறது.

அண்மையில் சென்னையில் நடந்து முடிந்த 11வது அகில இந்திய சுற்றுலா மற்றும்தொழில் பொருட்காட்சியில் சுற்றுலாத்துறை நூதனமாக அமைத்த ஒலி ஒளி மற்றும் பொம்மலாட்டக் காட்சி ஆயிரக்கணக்கான மக்களின் பாராட்டுதலைப் பெற்றது.

சுற்றுலாத்துறையும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் வெளி மாநிலங்களிலும் தில்லியிலும் நடைபெறும் அனைத்திந்திய மற்றும் அனைத்து நாட்டுப் பொருட்காட்சிகளில் பங்கு கொண்டு தமிழகத்தின்சுற்றுலாச் சிறப்புகளை விளக்கும் வகையில் அரங்குகள் அமைத்து நமது சுற்றுலாச் சிறப்பிடங்களுக்கு நல்ல விளம்பரம் பெற்று வரு





கிறது.

தற்போது சென்னையில் பொருட்காட்சி நடத்தப்பட்டு வரும் தீவுத்திடலில் நிலையான பொருட்காட்சிக்குத் தேவையான ஆதாரக் கூறுகளை ஏற்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் முதல் கட்டமாக அங்கே இவ்வாண்டு நிலையான திறந்த வெளி உணவகம் திறக்கப்பட்டுள்ளது. கூவம் ஆற்றின் குறுக்கே இருபுறமும் போய் வர ஏதுவாக மூன்று பாலங்கள் கட்டவும், குடிநீர் வசதிக்காகவும் 1983-84ஆம் நிதி ஆண்டில் ரூ.10 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பாங்கில் நாளும் பெருகி வரும் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளைக் கவனித்து வரும் சுற்றுலாத்துறையின் வரவு செலவு 1975-76ஆம் ஆண்டில் ரூ. 22.7 இலட்சமாகும். ஆனால் 1983-84ஆம் ஆண்டில் இந்த வரவு செலவு ரூ. 180 இலட்சத்தினை எட்டி உள்ளது என்பது சுற்றுலாத்துறை ஆற்றிவரும் பல்வேறு சாதனைகளை எடுத்துக் காட்டும் ஒரு அளவுகோலாகும்.

எந்த ஒரு திட்டமிட்ட முன்னேற்றப் பணிக்கும் உண்மையான முறையில் தேவைக்கேற்ற வகையில் திட்டங்கள் தீட்ட அடிப்படையில் புள்ளி விவரங்கள் தேவைப்படுகின்றன. இதனை உணர்ந்த அரசு 1981ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறையில் புள்ளி விவரப் பிரிவினை ஏற்படுத்தி தேவையான புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்காகச் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 72.26 இலட்சம்தான், ஆனால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூ. 493 இலட்சமாகும். இதிலிருந்து சுற்றுலா வளர்ச்சியில் அரசின் சாதனை நன்கு விளங்கும்.

**பெருந் திட்டம்:**

மைய அரசு சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளத் தக்க அனைத்துலக முக்கியத்துவம் வாய்ந்த மூன்று மையங்களைத் தேர்ந்தெடுக்கும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க தமிழக அரசு மாமல்லபுரம், இராமேசுவரம், கன்னியாகுமரி ஆகிய மூன்று இடங்களைப் பரிந்துரைத்துள்ளது. அதேபோல் மலைவாசத் தலங்களின் ராணி எனப் போற்றப்படும் உதகமண்டலத்தின் மேம்பாட்டிற்காகவும் உலகவங்கியிடம் கடன் பெற வழி செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நான்கு இடங்களின் சுற்றுலா மேம்பாட்டிற்காக வல்லுநர்களை கொண்டு கடந்த நான்காண்டுகளில் தொலைநோக்குப் பெருந்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் கூறப்பட்டுள்ளபணிகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

மாமல்லை பெருந்திட்ட மதிப்பீடு ரூ. 5.83 கோடியாகும்.

இராமேசுவரம் பெருந்திட்ட மதிப்பீடு ரூ. 28 கோடியாகும்.

**நாளும் வளரும் சுற்றுலாத் துறை:**

கன்னியாகுமரி பெருந்திட்ட மதிப்பீடு ரூ. 16 கோடியாகும்.

உதகமண்டலம் பெருந்திட்ட மதிப்பீடு ரூ. 28 கோடியாகும்.

**பயண வட்டம்:**

பயண வட்டங்கள் என்ற அடிப்படையில் திட்டமொன்றினைத் தீட்டுமாறு மைய அரசு கேட்டுக் கொண்டது. எனவே, 1980-85 சுற்றுலாத் திட்டம் என்ற பெருந் திட்டம் ஒன்றினைக் கீழ்க்கண்ட பயண வட்டங்களைத் தழுவி வல்லுநர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டு மைய அரசுக்கு அனுப்பப்பட்டது.

1. சென்னை -மாமல்லபுரம்- திருக்கழுக்குன்றம் - காஞ்சிபுரம்- திருச்சி-தஞ்சை-புதுக்கோட்டை, மதுரை - இராமேசுவரம் -கன்னியாகுமரி - குற்றாலம் - திருவனந்தபுரம்.

2. சென்னை - கிருஷ்ணகிரி- ஒகேனக்கல் - ஏர்க்காடு -கோயம்புத்தூர் - உதகமண்டலம் -முதுமலை - மைசூர் - பெங்களூர்.

இராமேசுவரம் - மதுரை - கொடைக்கானல்-புதுக்கோட்டை திருச்சி - தஞ்சை - மாமல்லபுரம் - சென்னை.

இந்தப் பயண வட்டங்கள்ல் தமிழகத்தில் உள்ள 18 இடங்களில் தேவையான அடிப்படை வசதிகளையும் பிற சுற்றுலா வளர்ச்சிப் பணிகளையும் மேற்கொள்ள ரூ. 70 கோடி தேவையென அப்பெருந்திட்டத்தில் மதிப்பீடு செயயப்பட்டுள்ளது. இத்திட்டம் மாமல்லை, இராமேசுவரம், கன்னியாகுமரி, உதகமண்டலம் ஆகிய இடங்களையும் உள்ளடக்கியுள்ளது. இந்த நான்கு இடங்களின் மேம்பாட்டிற்கெனத் தனித்தனியே மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவை படிப்படியாக நிறைவேற்றப்படுவதால் இவை நீங்கலாக மீதமுள்ள 14 இடங்களின் மேம்பாட்டிற்காக ரூ. 34.5 கோடி இதில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது எனக் கூறலாம்.

## குடத்திலிட்ட விளக்கு:

தமிழகத்தில் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த வேறு பல இடங்கள் இன்னும் குடத்திலிட்ட விளக்காகவே இருக்கின்றன. பிச்சாவரம், ஆவுடையார் கோயில், மனோரா, ஒகேனக்கல் போன்ற இத்தகைய இடங்களின் மேம்பாட்டிற்காக நிதி நிலைக்கேற்ப படிப்படியாக வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## புதுமையான திட்டம்:

உள்ளூர் மக்களிடையே சுற்றுலா உணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் உள்ளூர் சுற்றுலாவை ஊக்குவிக்கவும் மாவட்டத்திற்கு இரண்டு மையங்கள் என்ற விகிதத்தில் 30 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவ்விடங்களில் அந்தப் பகுதி போக்குவரத்துக் கழகங்களின் உபரி நிதியிலிருந்து அடிப்படை வசதிகள் செய்து தரும் திட்டம் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழகம் தவிர வேறெந்த மாநிலத்திலும் இத்தகைய புதுமையான திட்டம் மேற்கொள்ளப்படவில்லை.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சித்தன்னவாசல், பெரியார் மாவட்டத்தில் பவானி, ஆடுதுறை, திருச்சி மாவட்டத்தில் கங்கை கொண்ட சோழபுரம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் திருமூர்த்தி மலை, திருநெல்வேலி மாவட்டத்தில் பாபநாசம் ஆகிய ஐந்து இடங்களை மாவட்ட உலாத்தலங்களாக மேம்பாடு செய்யும் பணிகள் 1983-84ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. அந்த அந்தப் பகுதி போக்குவரத்துக் கழகங்கள் வழங்கும் நிதியைத் தவிர சுற்றுலாத் துறை மையம் ஒன்றிற்கு ரூ. 2 இலட்சம் வீதம் செலவு செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

## சிறப்புப்பணிகள் சில:

பல்வேறு மையங்களில் அவ்விடங்களின் தேவைக்கேற்றவகையில் தமிழக அரசு சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொண்டுள்ள பாங்கினை விளக்கும் சிறப்புப்பணிகள் சிலவற்றை இங்கே குறிப்பிடுவது மிக அவசியமாகும்.

கடல்மல்லை எனப் பல்லவர்கள் காலம் முதல் போற்றப்படும் கலைமணம் கமழும் மாமல்லைபுரம் அனைத்துலகப் புகழ்பெற்ற ஒரு சுற்றுலா மையமாகும். அங்கே திறந்தவெளி அருங்காட்சியகம் ஒன்று அமைத்து அதன் வாயிலாக அங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அனைவரும் தமிழகத்தின் பழம்பெரும் கலாசாரப் பண்பாட்டுப் பாரம்பரியத்தை நேரில் கண்டு உணர்ந்து கொள்ளும் வகையில் திட்டம் தீட்டப்பட்டு செயல் படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ரூ.68 இலட்சம் ஆகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இராமேசுவரம் செல்லும் பயணிகள் யாவரும் மண்டபம் வழியாகவே செல்லவேண்டி இருப்பதால் அங்கு வருவோர் குறைந்த செலவில் இரவு தங்கிச் செல்ல முகாம்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டு, அதற்காக ரூ. 42.75 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதில் 1983-84ஆம் ஆண்டிற்கு ரூ. 5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.



கன்னியாகுமரி வருவோரில் பெரும்பாலோர் பேருந்துகளில் வந்து ஒரே நாளில் திரும்பி விடுகின்றனர். அத்தகைய சுற்றுலாப் பயணிகள் தங்கி ஓய்வு பெறவும் இளைப்பாறவும், பேருந்துகளை நிறுத்தவும் வசதி செய்து தரும் நோக்கத்துடன் அங்கே ஓய்வுக் கூடம் கட்டத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது சுற்றுலாத்துறையின் பங்காக இதற்கு 1983-84ஆம் ஆண்டில் ரூ. 5 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் பொழுதுபோக்கு வசதிகள் செய்து தரும் திட்டத்தின் ஒரு அங்கமாக ரூ. 15 இலட்சம் செலவில் அங்கே திறந்தவெளி கலை அரங்கம் கட்டவும் திட்டம் தீட்டப்பட்டு அதற்காக 1983-84ஆம் ஆண்டில் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

உதகமண்டலத்தில் உள்ள தொட்டபெட்டா நீலகிரிமலைத் தொடரில் உயர்ந்த சிகரம். அங்கிருந்து உதகை நகர்ப்பகுதிக்கு இரும்புக் கயிறு வழி (Rope way) மூலம் சுற்றுலாப் பயணிகள் வர ஆய்வு அறிக்கை பெறப்பட்டு பணி செய்ய முறைப்படுத்துவது பற்றி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பரிசீலித்து வருகிறது.

மேலும் உதகையில் சுற்றுலா வளர்ச்சிக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்துரைகள் அளித்துள்ளார்கள். அந்த அடிப்படையில் இதுவரை ரூ.69.5

இலட்சம் மதிப்புள்ள பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**நீர்விளையாட்டுப் போட்டிகள் :**

நீர்விளையாட்டுப் போட்டிகளுக்கும் மலையேறுதலில் ஊக்கம் அளிக்கவும் தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. கீழ்க் கடற்கரையோர நெடுஞ்சாலையில் சென்னைக்கும் மாமல்லைக்கும் நடுவில் உள்ள முட்டுக்காடு இயற்கையெழில் கொண்ட ஈடு இணையற்ற வனப்புமிகு இடமாகும். அங்குள்ள உப்பங்கழியில் உல்லாசப்படகு, நீர் சருக்கு, பாய்மரப் படகு (Wind Surfing) போன்ற பொழுதுபோக்கு வசதிகளுக்கு அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அங்கே தேவையான பூங்கா, உணவகம், உடைமாற்ற அறைகள், சிறுவர்கள் பூங்கா போன்ற மற்ற வசதிகள் செய்யவும் திட்டம் தீட்டப்பட்டு வருகிறது.

சென்னைக்கு அருகாமையில் உள்ள செம்பரம்பாக்கம் ஏரியில் பாய்மரப் படகுப் போட்டி ஒன்று ராயல் சென்னை யாட்சிச் சங்கத்தின் (Royal Madras Yatch Club) ஒத்துழைப்புடன் சென்ற ஏப்ரல் திங்களில் நடத்தப்பட்டது.

மே மாதத்தில் கொடைக்கானலில் மலை வளங் காண மலையேறுதலுக்கு ( Trekking ) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாணவர் நாட்டு நலப்பணித்திட்டத்தோடு இணைந்து, ஆசிரியர் புத்தறிவுப் பயிற்சித் திட்டத்தின்கீழ் உதகை ஏரியை அழகுபடுத்தும் திட்டமும் கோத்தகிரி இளைஞர் விடுதிக்கான பணிகளும் மாணவ மாணவியரின் நல்லுழைப்போடு நடைபெற்று வருகின்றன.

ஆண்டுதோறும் அரசு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு பங்கு மூலதனமும் கடனும் அளித்து உதவி வருகிறது. 1983-84ஆம் ஆண்டில் ரூ. 71.4 இலட்சம் பங்கு முலதனமாகவும் ரூ. 20 இலட்சம் கடனாகவும் கொடுக்கப்பட்டுள்ளது. அதோடு சுற்றுலாத்துறையின் திட்டப் பணிகள் பெரும்பாலும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாகவே நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் :**

அரசு மேற்கொண்டுள்ள சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் இரு கூறுகள் கொண்டவை. ஒன்று மேம்பாடு, விளம்பரம் மற்றும் திட்டமிட்ட வளர்ச்சிப் பணிகள் அடங்கியது. இதனைச் சுற்றுலாத்துறை நிறைவேற்றி வருகிறது. மற்றொன்று, வியாபார ரீதியில் செயல்படுத்தப்பட வேண்டிய பணிகளாகும். இந்தப் பணிகளை நிறைவேற்றவே அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. அப்போது ஐந்து சுற்றுலா மாளிகைகளை மட்டுமே கொண்டு தனி நிறுவனமாக ( Private Limited ) ஆரம்பிக்கப்பட்ட இக்கழகம் பத்தாண்டுகளில் வளர்ந்து பொது நிறுவனமாக (Public Limited). இபுபோது மாறியுள்ளது. இதன் தற்போதைய பங்கு மூலதனம் ரூ. 2.26 கோடிகளாகும். இது தவிர மேலே குறிப்பிடப்பட்டது போல் மானியமும் கடனும் வழங்கப்படுகிறது. 1971-72ஆம் ஆண்டில் அதன் வரவு செலவு ( Turn Over ) ரூ. 4.5 இலட்சமே. அது படிப்படியாக வளர்ந்து 1981-82ஆம் ஆண்டில் ரூ 201.17 இலட்சமாகவும் 1982-83ஆம் ஆண்டு ரூ. 300 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது.

அரசின் பொறுப்பில் இருந்த ஐந்து சுற்றுலா மாளிகைகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கழகம் இன்று 14 'ஓட்டல் தமிழ்நாடு' விடுதிகளை முக்கிய சுற்றுலா இடங்களில் நிறுவி நிருவகித்து வருகிறது. சுற்றுலா வளர்ச்சியில் ஏற்பட்டு வரும் நவீன மாறுதல்களுக்கேற்ப இந்த ஓட்டல்கள் யாவும் ''ஓட்டல் தமிழ்நாடு'' என்ற பொதுப் பெயரில் இயங்கி வருகின்றன. இந்த ஓட்டல்கள் யாவும் நவீன முறையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் கடற்கரை வளாகம், குடில்கள், பெருவழி தங்கும் விடுதிகள் மதுரை, கோவை ஆகிய இடங்களில் உள்ள 3 நட்சத்திர ஓட்டல்களும் அடங்கும்.



1971ஆம் ஆண்டு 253 படுக்கை வசதிகள் கொண்ட விடுதிகளை மட்டுமே தன்வசம் கொண்டிருந்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இன்று மொத்தம் 1463 படுக்கை வசதிகளைக் கொண்டு சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறப்பான சேவை செய்து வருகிறது.

**சிக்கன தங்குமிட வசதி:**

சாதாரண, நடுத்தர மற்றும் இளைஞர்களின் தேவைகளையும் அவர்களது பொருளாதார நிலையையும் கருத்தில்கொண்டு இளைஞர் விடுதிகளையும் எல்லா முக்கிய சுற்றுலா இடங்களிலும் கட்டி, குறிப்பாக இளைஞர்கள் மலையேறுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் ஊக்கமும் உற்சாகமும் கொள்ளும் வகையில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த இளைஞர் விடுதிகள் மாமல்லை, ஏரிக்காடு, உதகமண்டலம், மண்டபம், முதுமலை, இராமேசுவரம் ஆகிய இடங்களில் ஏற்கனவே திறக்கப்பட்டு விட்டன. பிற இடங்களில் இளைஞர் விடுதி கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடந்து வருகின்றன. இதில் கோடிட்டுக்

காட்ட வேண்டிய அம்சம் தேசிய இளைஞர் சமூக சேவை சங்கம் அதனுடைய பயிற்சியின் ஒரு அங்கமாக கோத்தகிரியில் இளைஞர் விடுதி ஒன்றினைக் கட்ட இருப்பதாகும்.

குறைந்த வருவாய் உள்ளவர்களிடையே சுற்றுலா உணர்வை ஏற்படுத்தி ஊக்குவிக்கும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்படும் மற்றொரு திட்டம் மாமல்லையில் ஏற்படுத்தப்பட்டுள்ள தங்குமுகாம் ஆகும்.

அங்குள்ள கடற்கரை வளாகத்தில், புதிய குடில்கள், நீச்சல் குளமும் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன. இங்கே மாநாடுகள், கருத்தரங்குகள் நடத்தத் தனி மண்டப வசதியும் உண்டு. மற்ற இடங்களிலும் மாநாடு நடத்தும் வசதி செய்யப்பட்டுள்ளது.

**போக்குவரத்து:**

ஆரம்பத்தில் 2 சொகுசுப் பேருந்துகளே பெற்றிருந்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம், தற்போது ஒரு சிறிய சொகுசுப் பேருந்து, குளிர் சாதன வசதி கொண்ட சொகுசுப் பேருந்துகள் உள்பட 20 சொகுசுப் பேருந்துகளைப் பெற்றுள்ளது. இக்கழகத்தின் பிரிவில் ஏற்பட்டுள்ள இன்னொரு சிறப்பான முன்னேற்றம், அண்மையில் குளிர்சாதனம் கொண்ட 5 டாட்சன் சிருந்துகளை இறக்குமதி செய்ததும், 3 அம்பாசிடர் சிருந்துகளை வாங்கி இருப்பதும் ஆகும்.

போக்குவரத்தைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பல விதங்களில் நாட்டில் முன்னோடியாகத் திகழ்ந்து பல சாதனைகளைச் செய்துள்ளது.

ஒரு வாரம், இரண்டு நாள்கள், ஒருநாள் என்று பல வகையான சுற்றுலாப் பயணங்களைத் தனது சொகுசுப் பேருந்துகள் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் நடத்தி வருகிறது. இதனால் தென்னிந்தியா, தமிழகம், சென்னைக்கருகாமையில் உள்ள இடங்கள், சென்னையில் உள்ள சிறப்பிடங்கள் ஆகியவற்றைத் தமிழகம் வரும் சுற்றுலாப்பயணிகள், எளிதில், குறைந்த செலவில், நிறைந்த வசதிகளுடன் குறுகிய கால அளவில் பார்த்து மகிழ முடிகிறது.

எனவே, உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளிடையே இந்தப் பயணத் திட்டங்கள் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. மாநில அரசு நடத்திவரும் சுற்றுலா வளர்ச்சிக் கழகங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஒன்றுதான் நாட்டிலேயே முதன்முதலாகத் தனது சுற்றுலாப் பயணங்களுக்கு பயணச் சீட்டுகளை விற்க சிங்கப்பூரிலும், கோலாலம்பூரிலும் முகவர்களை நியமித்துள்ளது. இது மிகவும் பெருமைப்படக் கூடிய சாதனையாகும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மற்றொரு சாதனை, கடந்த 11 ஆண்டுகளாக அரசு உதவியுடன் அது சென்னையில் நடத்தி வரும் அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியாகும். புதுடில்லியில் நடக்கும் அனைத்துலக மற்றும் தேசியப் பொருட்காட்சியைத் தவிர வேறெங்கும் இத்தகைய சிறந்த பொருட்காட்சி நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**பயணிகளும்—வசதிகளும்:**

தமிழக அரசு மேற்கொண்டு செயல்படுத்தி வரும் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் காரணமாக தமிழகம் வரும் வெளிநாட்டு, உள்நாட்டுச் சுற்றுலாப்பயணிகள் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. 1976ஆம் ஆண்டு தமிழகம் வந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் 1·35 இலட்சம், உள்நாட்டு பயணிகள் 247.07 இலட்சம். 1982ஆம் ஆண்டு வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகள் வருகை 2.29 இலட்சமாகவும், உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகை 370 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது. இது ஏழாண்டுகளில் தமிழகம் வரும் இருவகைச் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கையிலும் முறையே 69.6 மற்றும் 49.8 சதவிகிதம் உயர்ந்துள்ளதைக் காட்டுகிறது.

முக்கிய இடங்களிலெல்லாம் தங்குமிட வசதி செய்து தரப்படுகிறது.

பொருட்காட்சி, ஓட்டல்கள், திட்டப்பணிகள் நிறைவேற்றம், சுற்றுலாப் பயண ஏற்பாடு செய்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் ஆயிரக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுகிறது.

சுற்றுலா முக்கியம் வாய்ந்த நகரங்களில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான தகவல்கள் அரசு நிறுவியுள்ள சுற்றுலா அலுவலகங்கள்—செய்தி நிலையங்கள் மூலம் கிடைக்கிறது. சுற்றுலாத் துணைவர்கள் இவ்விடங்களில் இருக்கிறார்கள்.

கைவினைப் பொருள் தொழில் ஊக்கம் பெற்று வருகிறது.

கலைஞர்கள், ஓவியர்கள் போன்ற பல தரப்பட்ட விற்பன்னர்கள் ஊக்கமும் ஆக்கமும் பெறுகின்றனர். பொருட்காட்சியில் அவர்களுடைய திறமையைக் காட்ட சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது.

அதேபோல, கிராமியக் கலைகளும் ஊக்கமும் ஆக்கமும் பெற்று வருகின்றன.



# மீனவ மகளிர் நலம் பெற மேலான பணிகள்

மீனவ சமுதாயத்தில் ஆண்கள் தான் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர். ஆனாலும் பிடித்த மீன்களை விற்பனை செய்வது, அவற்றைச் சுத்தம் செய்து பாதுகாப்பது, கருவாடு தயாரிப்பது போன்ற முக்கியமான பணிகளில் ஈடுபடுவதன் மூலம் பெண்களின் பங்கு அதிக முக்கியத்துவம் வகிக்கிறது.

குடும்பப் பொறுப்பு தவிர மீன் வியாபாரத்தின் மூலம் சமூகப் பொருளாதாரத்தில் இவர்களுடைய ஒத்துழைப்பினைப் பார்க்கும்போது மீனவச் சமுதாயத்தின் ஒருங்கிணைந்த முன்னேற்றம் பெரும்பாலும்



மீனவ மகளிரின் முன்னேற்றத்திலேயே அடங்கியிருப்பதாகக் கூறலாம். இந்தக் கருத்துதான், தமிழ்நாடு மீன்வளத்துறையில் பெண்களின் முன்னேற்றத்திற்கென ஒரு பிரிவைத்தோற்றுவிக்கக் காரணமாக அமைந்தது.

சமுதாய முன்னேற்றப்பணியில் மீனவ மகளிருடைய ஈடுபாட்டை அதிகப்படுத்த, 1981ஆம் ஆண்டு ஜூலை மாதம், மீனவ மகளிர் விரிவாக்கப்பணி தமிழ்நாடு அரசு மீன்வளத்துறையின் ஒரு பிரிவாக ஏற்படுத்தப்பட்டது.

முதன் முதலில் இப்பணிக்காக சென்னையில் திருச்சினாங்குப்பம், திருநெல்வேலி மாவட்டத்தில் தருவைக்குளம், தஞ்சை மாவட்டத்தில் கரையூர்த்தெரு ஆகிய மூன்று மீனவர் கிராமங்களில், மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டன. இவை இன்று நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

1982ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் உணவு விவசாயக் கழகத்தின் வங்காள விரிகுடா திட்டத்தோடு அரசு மீன்வளத்துறையும் இணைந்து மீனவ மகளிருக்காக ஒரு பயிற்சித் திட்டத்தை ஏற்று நடத்தியது. இதில் செங்கை மாவட்டத்தில் 6 கிராமங்களில் இருந்தும் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் இருந்தும் 23 மீனவப் பெண்கள் பங்கேற்றனர்.

அரசில் உள்ள பல்வேறு துறைகள் குறித்தும் மற்றும் தனியார் நிறுவனங்கள், வங்கிகள் அவற்றின் மூலம் மக்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் சுகாதாரம், சத்துணவு, குடும்ப நலம் சமூக விழிப்புணர்ச்சி, சமூக அமைப்பு குறித்தும் அவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

பிறகு, செங்கை மாவட்டத்தைச் சார்ந்த 6 கிராமங்களிலும் மீனவ மகளிர் விரிவாக்கப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மீன்துறையைச் சார்ந்த இருவரும் உணவு விவசாயக் கழகத்தைச் சார்ந்த இருவரும் விரிவாக்கப பணியாளர்களாக உதவி இயக்குநர் (மீனவ மகளிர் விரிவாக்கப் பணி) மற்றும் சமூகப் பொருளாதார நிபுணர் மேற்பார்வையில் செயல்பட்டு வருகின்றனர். மேலும் கிராம அளவில் மேற்கொண்ட பயிற்சி பெற்ற பெண்கள், கிராமத்தின் சார்பில் இப்பணிக்காக உதவி புரிந்து வருகின்றனர். 1983-ஆம்

* கூடுதல் வருவாய் பெறுவதற்காக ஓய்வுநேரக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவ மகளிர்.



ஆண்டில் மீனவ மகளிர் விரிவாக்கப்பணி மேலும் பல கிராமங்களுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது.

மீனவமகளிர் விரிவாக்கப்பணியின் மூலம் மீனவ கிராமங்களில் ஆற்றப்பட்டுள்ள பணிகள் வருமாறு:-



* மீனவ மகளிர் – சிறுசேமிப்புத் திட்டத்தில் பங்கு பெற ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள்:**

சென்னை, செங்கல்பட்டு, திருநெல்வேலி, தஞ்சாவூர் மாவட்டங்களில் உள்ள மீனவ கிராமங்களில் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் 173 அமைக்கப்பட்டுள்ளன.

**கடன் உதவி:**

மீன் வியாபாரத்திற்காக முதலீடு செய்ய வசதியற்ற பெண்களுக்கு ரூ. 200 முதல் ரூ. 700 வரை 8 கிராமங்களில் யுனைடெட் கமர்சியல் வங்கி, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா ஆகியவற்றின் மூலம் குறைந்த வட்டி விகிதத்தில் (4%) கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

**முதியோர் கல்வி:**

மகளிர் தொண்டு நிறுவனத்தின் மூலம் பனையூர்க்குப்பம் என்னும் கிராமத்தில் முதியோர் கல்வித்திட்டம் செயல்படுத்தப் படுகிறது. இதனால் 80 பெண்கள் பயனடைந்துள்ளார்கள்.

**சேமிப்பு:**

மீனவப் பெண்களிடையே சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த மத்திய அரசின் தேசிய சேமிப்பு நிறுவனத்தின் மூலம் 6 கிராமங்களில் ஐந்தாண்டுத் தொடர் வைப்புக் கணக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பெண்கள் அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுள்ளார்கள்.

**குழந்தைகள் காப்பகம்:**

சேவா சமாஜம் என்னும் தனியார் நிறுவனத்தின் உதவியுடன் இரண்டு கிராமங்களில் குழந்தைகள் காப்பகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மீன் வியாபாரத்திலும் வேறு தொழில்களிலும் ஈடுபட்டுள்ள மீனவத் தாய்மார்களுடைய குழந்தைகள் நல்ல முறையில் பாதுகாக்கப் படுகிறார்கள்.

* குறைந்த வட்டிக்கு வங்கியிலிருந்து மூலதனக் கடன் பெறுகிறார்கள்.



**ஆரம்பப்பள்ளி:**

செம்மஞ்சேரிக் குப்பத்தில் பள்ளி வசதிக்காக உணவு மற்றும் விவசாயக் கழகத்தின் மூலம் கட்டிடம் கட்டித் தரப்பட்டு, திருப்போரூர் பஞ்சாயத்து யூனியன் மூலம் ஆரம்பப்பள்ளி செயல்படுகிறது.

**கூடுதல் வருவாய் ஈட்டும் திட்டம்:**

நைலான் வலை பின்னுதல் மூலம் வருவாய் ஈட்டும் திட்டத்தில் செம்மஞ்சேரி, பட்டிப்புலம் ஆகிய குப்பங்களில் ஆர்வமுள்ள 8 பெண்கள் ஈடுபட்டுப் பயன் பெறுகின்றனர்.

**சமூகக் கூடங்கள் அமைத்தல்:**

மூன்று கிராமங்களில் உணவு மற்றும் விவசாயக் கழகத்தின் மூலம் சமூகக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**மீன்களை ஏற்றிச் செல்ல வாகன வசதி:**

பிடித்த மீன்களைக் கடைகளுக்கு எடுத்துச் சென்று

விற்பனை செய்வதற்காக இயந்திரம் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வண்டிகள் செம்மஞ்சேரிக் குப்பத்தில் உள்ள மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊனமுற்ற ஆண்கள், குழந்தைகளுக்குத் தேவையான துணைச் சாதனங்கள், மகளிர் தொண்டு நிறுவனம் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

**சத்துணவு மற்றும் சுகாதாரக் கல்வி:**

பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத் துறையின் மூலம் 3 கிராமங்களில் சத்துணவு குறித்தும் செயல் விளக்கமும் பாடங்களும் நடத்தப்பட்டுள்ளன.

**குடும்ப நல முகாம்கள்:**

ஒவ்வொரு ஆண்டும் எல்லா மீனவ கிராமங்களிலும் குடும்ப நலத் துறையின் மூலம் குடும்ப நல முகாம்கள் நடத்தப்படுகின்றன.

**சுயவேலை வாய்ப்புத் திட்டம்:**

மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகப் பயிற்சி பெற்ற பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள் அளிப்பது மூலமாகவும் மற்றும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தினரால் நடத்தப்படும் மீன் உணவகங்களில் படித்த பெண்கள் வேலைக்கு அமர்த்தியதன் மூலமாகவும் அவர்களுக்கு வருவாய் கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

**பொதுமக்கள் ஒத்துழைப்புப் பயிற்சி முகாம்:**

மகளிர் தொண்டு நிறுவனத்தின் மூலம் நடத்தப்பட்ட பொது மக்கள் ஒத்துழைப்புப் பயிற்சி முகாம்களில் மீனவ மகளிர் பங்கேற்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**முறை சாராக் கல்வி வசதி:**

தமிழக அரசின் கல்வித் துறைப்பிரிவின் மூலம் நகரின் மீனவக் குடியிருப்புப் பகுதிகளில் 28 கல்வி மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, அதில் 28 படித்த மீனவப் பெண்கள் ஊக்குநராகப் பணி புரியும் வேலைவாய்ப்பும் ஒரு மையத்திற்கு 30 பேர் என்ற வீதத்தில் மீனவ மகளிருக்குக் கல்வி வசதியும் கொடுக்கப்பட்டுள்ளது.



* பயிற்சி பெற்ற மீனவ இளம்பெண்கள் தொடர்புப் பணியாளராகப் பணியாற்றுகிறார்கள்.

# சென்னையில் புதிய மெழுகு ஆலை

சென்னையை அடுத்துள்ள மணலியில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவனம், (மதராஸ் ரீபைனரீஸ் லிமிடெட் நிறுவனம்) புதிதாக மெழுகு ஆலை ஒன்றை 78 கோடி ரூபாய் செலவில் உருவாக்கியுள்ளது. இந்த மெழுகு ஆலையின் உற்பத்திச் சக்தி, ஆண்டுக்கு 20 ஆயிரம் டன் மதிப்பீடு.

தீக்குச்சி தயாரிப்புக்கு மெழுகு, இரண்டு வகை பாரபின் மெழுகு ஆக மொத்தம் 3 வகை மெழுகுகளை இந்த ஆலை உற்பத்தி செய்கிறது.

இரண்டு பாரபின் மெழுகு வகைகள், ஜவுளி வகைகள், மெழுகுவர்த்தி, அழகு சாதனப் பொருட்கள், தார்பாலின் துணி, மெழுகுக் காகிதம், பூட்பாலிஷ் முதலியவற்றைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் மெழுகு பிரித்தெடுக்கும் பிரிவில் கிடைக்கிற எண்ணெய் நிரம்பிய மெழுகு, புது ஆலையின் மூலப் பொருளாகும். ஒருவகை திரவத்தைப் பயன்படுத்தி, அந்த மூலப் பொருளிலிருக்கும் எண்ணெய் இந்தப் புது ஆலையில் அகற்றப்படுகிறது.

எண்ணெய் தோய்ந்த மெழுகுடன் அந்தத் திரவத்தை முதலில் கலந்து அதை 10 டிகிரி சென்டிகிரேட் அளவுக்குக் குளிரவைக்கிறார்கள். அதன் காரணமாக கிரிஸ்டல் (Crystal) உருவத்தில் மெழுகு தயாராகிறது.

அதையடுத்து இரண்டு கட்ட வடிகட்டிகள் மூலம் அந்த மெழுகு பிரித்தெடுக்கப்படுகிறது. மீதி கிடைக்கிற கரைசல் திரவம் மீண்டும் பயன்படுத்தப்படுகிறது.

திரவத்திலிருந்து வடிகட்டப்பட்ட கிரிஸ்டல் வடிவ மெழுகு, களிமண்ணுடன் கலக்கப்பட்டு, நிறம் அகற்றப்படுகிறது. மற்றொரு பகுதியில் மெழுகிலிருந்து நாற்றம் அகற்றப்படுகிறது.

பின்னர் வார்ப்படப் பிரிவுக்கு பாரபின் மெழுகு அனுப்பப்பட்டு, கட்டிகளாக வார்க்கப்பட்டு, கோணிப்பைகளில் நிரப்பப்படுகிறது.

இந்த ஆலையில் தயாராகிற மெழுகு வகைகள் அனைத்து நாட்டுத் தரத்திற்கு இணையான நல்ல தரத்தில் உள்ளன.

# பிணி அகற்றும் ஊமத்தை



**ஏ. ஆர். என். துரைராஜ்**

இது எங்கும் பயிராகக் கூடிய செடி. இதன் காய் உருண்டையாகவும், இதன் மீது முட்கள் அடர்ந்தும் இருக்கும். இதன் விதை சுர சுரப்பாக இருக்கும். இதில், கருவூமத்தை; பொன்னூமத்தை; அடுக்கூமத்தை; மருளூமத்தை என நான்கு வகைகள் உண்டு. அடுக்கு என்றால், பூவுக்குள் பூ அடுக்கினாற்போல் இருக்கும். வெள்ளைப் பூ பூக்கும் ஊமத்தை எங்கும் கிடைக்கும். அக்கால, சித்த மருத்துவர்கள் இந்த ஊமத்தையின் செடியிலுள்ள இலை, காய், பூ, விதை, சமூலம் (வேர்) ஆகிய அனைத்தும் கொண்டு, மருத்துவம் பார்த்திருக்கிறார்கள்.

**தீரும் வியாதி:**

இரைப்பு, மூச்சடைப்பு, கோழை, கீழ்வாயு, எலும்பு வீக்கம், கட்டிகள் ,கட்டிகளினால் வலி, காது வலி, காதில் உள்ள ரணம், சுவாசம், பெருமூச்சு, காசம்,வாயு, வீக்கம்,புழுவெட்டு, நரம்புச் சிலந்தி, வெறிநாய்க்கடி வெள்ளை, அக்கி, சூதக வயிற்று வலி, நீர்த்தாரை, எரிவு,கன்னம், முகம், காது இவை குடைச்சல் நீர் அடைப்பு, வாதநோய், பிளவை, கண்டமாலை, விஷநீக்கம், கரப்பான், சிரங்கு, சதை வளருதல், ஒழுகும் ரணங்கள் முதலியன குணமாகும்,

**கட்டிகள்:**

தேவையான ஊமத்தை இலையைக் கொண்டு வந்து, கொஞ்சம் விளக்கெண்ணெய் எடுத்து ஊற்றி வதக்கி, கட்டிகளின் மீது வைத்துக் கட்ட அவை பழுக்கும். தொடர்ந்து 2 நாள் செய்து வர பழுத்து உடைந்துவிடும். பிறகு 2, 3 தடவை இதே மாதிரி செய்யும் பட்சத்தில் கட்டி இருக்கும் இடம் தெரியாது.

முதலில் கொஞ்சம் ஊமத்தை இலையை எடுத்து, அம்மியில் வைத்து, பிறகு மூன்று கோழி முட்டையை உடைத்து, வெண்கருவை மட்டும் எடுத்து அந்த இலை மீது ஊற்றி நைய அரைத்து, பிறகு கட்டியின் மேலே தொடர்ந்து பூச வேண்டும். மறுநாள் காலையில், முன்பு பூசியதைச் சுத்தமாகக் கழுவிவிட்டு, மறுபடியும், தொடர்ந்தாற்போல் செய்துவரும் பட்சத்தில் கட்டி உள்ளே அமுங்கிவிடச் சாத்தியமாகிறது.

இலையை வதக்கி ஒற்றடமிட, கிழ்வாயு, எலும்புவீக்கம், கட்டிகளினாலுண்டாகும் வலி, பால் கட்டிக் கொள்வதாலுண்டாகும் நோய் ஆகியவை தணியும்.

**கட்டி, வீக்கம், குத்தல் வலி நீங்க:**

போதுமான இலையுடன் சாடி (அல்லது) தேன் விட்டு அரைத்துக் கொதிக்க வைத்து இறக்கி, இளஞ்சூட்டினால் கட்டிகள் மேற்பூச, நாளடைவில் கட்டிகள் கரையும். வீக்கத்தின் மீது பூச, வீக்கம் குறையும். வலி, குத்தல் உள்ள இடங்களில் பூச வலியையும், குத்தலையும் நிறுத்தும்.

**குறிப்பு:**

இதனால் மயக்கம் உண்டானால், மிளகு அல்லது சோம்புடன் தேன் கலந்து குடிநீராகக் கொடுக்க வேண்டும்.

**கரப்பான் குணமடைய:**

ஊமத்தை இலை, நெருஞ்சி இலை, ஊமத்தைப் பூக்கள், குப்பைமேனி இலை ஆகிய இந்த நான்கையும் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு, வகைக்கு ஐம்பது மில்லி சாறு எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும். பின், சுத்தமாக இருக்கும்-கடாயில் எல்லாச் சாறுகளையும் விட்டு, விளக்கெண்ணெய் 50 மில்லி ஊற்றி அடுப்பில் வைத்துக் காய்ச்சி, தைலப்பதத்தில் வரும் சமயம் இறக்கிச் சேமித்து வைத்துக் கொண்டு, ஒரு தேக்கரண்டி எண்ணெய்யில் ஓர் அவுன்ஸ் பசுவின் பால் ஊற்றி அருந்தவும். குழந்தைகளுக்கு என்றால் அரைத் தேக்கரண்டி எண்ணெய்யோடு ஓர் அவுன்ஸ் பசுவின் பால் ஊற்றிக் கொடுக்கலாம். காலை, மாலை கொடுக்க வேண்டும். பேதி காணலாம் ஆனால் பயம் வேண்டாம் காய்ச்சப்பட்ட தைலத்தை மட்டும் எடுத்து கரப்பான், ரணம் மீது மேலே தடவி வரலாம்.

**புழு வெட்டு:**

புழுவெட்டுக் காரணமாக சிலருக்குத் தலையில் சொட்டை விழும். புருவங்களில் முடி வளராது. ஊமத்தங்காயில் உள்ள பிஞ்சுக் காயை எடுத்து அம்மியில் வைத்து அதன் மீது வெந்நீர் ஊற்றி மைபோல் அரைத்துக் கொண்டு அதன் விழுதை, சொட்டை இருக்கும் பகுதியிலும் புருவங்களில் காணும் பகுதியிலும் நாள் தவறாமல் பூசி வந்தால் சொட்டை நீங்கி முடி வளரத் தொடங்கும்.

**திருத்தப்பட்ட சுரங்கப் பாதுகாப்புச் சட்டம்**

**18 வயதுக்குட்பட்டவர்களை "அபாயகரமான சுரங்கங்களில் வேலைக்கு அமர்த்தக்கூடாது" என்று திருத்தப்பட்ட சுரங்கப் பாதுகாப்புச் சட்டம் கூறுகிறது.**

**இச்சட்டம் 31.5.84 முதல் அமலுக்கு வந்துள்ளது.**

ஊமத்தை இலையை, 85கிராம் எடுத்து, சுத்தம் பார்த்து அம்மியில் வைத்து இடித்து, ஒரு மண் சட்டியில் இட்டு, ஒரு படி தண்ணீர் ஊற்றி நன்றாகக் காய்ச்சி ஆறிய பிறகு இளஞ் சூட்டுடன் ஒத்தடம் கொடுக்கும் பட்சத்தில் வீக்கம், எலும்பு, மூட்டு வலி ஆகியவை நீங்கி நலம் பெறலாம்.

**நாய்க் கடிக்கு:**

இந்த இலையின் சாற்றை (1 முதல் 3 துளி) கரும்புச் சாற்றிலாவது பனை வெல்லத்தில் இட்டாவது அருந்தச் சொல்லவும். பிறகு, பால்சாதம், மோர்சாதம் கொடுக்க வெறி நாய்க்கடியின் நஞ்சு அகலும்.

**குறிப்பு:**

மூன்று நாட்களுக்கு மேல் கொடுக்க வேண்டாம். இதற்குப் பத்தியம்; உப்பு, புளி, கட்டாயம் நீக்க வேண்டும்.

**விஷம் நீங்க:**

எலி, நாய் மற்றும் பல கொடூரமான ஜந்துக்கள் கடித்தால் உடனே கீழ்க்கண்ட முறையைக் கையாளலாம்.

ஊமத்தம் வேர் 4 கிராம், அதன் வித்து 4 கிராம், இவைகளை அம்மியில் வைத்து, பசுவின்பால் விட்டு அரைத்துக் கலக்கி அருந்த, மேற்படி விஷங்கள் நீங்கும்.

சுண்ணாம்புடன் ஊமத்தை இலைச்சாறு விட்டு அரைத்துக் கடிவாயில் அடிக்கடி பூச, நாய்க் கடி உள்ள விஷம் நீங்கும்.

இந்த இலைகளின் சாற்றை 5 முதல் 10 துளி வரை நாளுக்கு நாள் அதிகப் படுத்தி, தயிரில் விட்டு அருந்த, நாளடைவில் வெள்ளை நோய் நீங்கும்.

இந்த இலையினுடைய சாற்றை (1 முதல் 2 துளி வரை) காதில் விட வேண்டும். 3 நாட்களுக்குச் செய்தால், காது வலி தீரும். வீக்கமுள்ள இடங்கள் இருந்தாலும், தடவலாம்.

தேவையான இலையையும், பூவையும் சுத்தம் பார்த்து ஒரு மண் சட்டியில் இட்டு, வதக்கி எடுத்து, வீக்கம் உள்ள இடங்களில் ஒத்தடம் தொடர்ந்து கொடுத்து வந்தால் வீக்கம் தணியும்.

போதுமான இலையையும், பூவையும் சமமாக எடுத்து, சுத்தம் செய்த அம்மியில் வைத்து அரைத்து, சாறு பிழிந்து வைத்துக் கொண்டு சில துளிகள் காதில் விட, காதில் உள்ள ரணம், வலி ஆகியவை நீங்கும்.

**சுவாசம், பெரு மூச்சு, வாயு கோளாறுகள் நீங்க:**

தேவைப்பட்ட இலையைக் கொண்டு வந்து, சுத்தம் பார்த்து நிழலில் உலர்த்திய பிறகு, சுத்தம் செய்த அம்மியில் வைத்து இலேசாக அரைத்து, அத்தூளைச் சேமித்து வைத்துக் கொள்ளவும். நமக்குத் தேவையானபோது அகலமான ஒரு கரண்டியில் நெருப்பு வைத்துக் கொஞ்சம் தூளைப் போடவும், புகை வரும். அப்புகையை மூக்குப் பக்கமாக உள்ளுக்கு இழுத்தால் சுவாசம், பெருமூச்சு ஆகியவற்றில் தொடர்ந்து காணும் கோளாறுகள் நீங்கும். இந்த இலையைத் தணலில் வதக்கி ஒத்தடம் கொடுக்க வாயு சம்பந்தமான சிரமம், கட்டிகள், **வீக்கம்** யாவும் நீங்கும்.

**இரைப்பு:**

தேவைப்பட்ட இலையை உலர்த்திப் பொடி செய்து, 10 கிராம் அளவில், உள்ளுக்குச்சாப்பிட்டு, வெந்நீர் இளஞ்சூடாக அருந்தி, சிறிது சர்க்கரை வாயில் போட்டுக் கொள்ளலாம். இந்த விதமாகத் தொடர்ந்து 3 நாட்கள் 20 கிராம் 30 கிராம் என அதிக அளவில் சாப்பிட, நாளடைவில் இரைப்புக் குணமாகும்.

**எலும்பு மூட்டு, வீக்கம், வலி, நரம்புச் சிலந்தி, வெளி மூலம் ஆகியவை குணமாக:**

தேவையான இலை, அரிசி மாவு இவ்விரண்டையும் ஓர் அளவாக எடுத்துக் கொஞ்சம் நீர் விட்டு அரைத்துக் களி போல் வேக வைத்துக் கிளறி எடுத்துக் கொள்ளவும். இக்களியை எடுத்து எலும்பு மூட்டுகள், மூட்டுகளினால் உண்டாகும் வீக்கம், வலி தருகின்ற கட்டிகள், வெளிமூலம் ஆகியவற்றில் போடலாம். நரம்புச் சிலந்தி என்ற நோய்க்கு இந்தக்களி மிக நன்று.

## குறிப்பு:

(ரணம் உள்ளவர்கள் போடலாகாது)

**அக்கி:**

கொஞ்சம் இலையைக்கொண்டு வந்து அரைத்து, எருமை வெண்ணெய்யில் குழைத்து அக்கியின் மேல் தடவி வர, ரணங்கள் நீங்கும். தொடர்ந்து தடவி வந்தால், ரணங்கள் பட்டுப்போய் ஆறிப் போகும்.

**நீர் அடைப்பு:**

மூல வாயுவினால் சிலருக்கு நீரடைப்பு வருவதுண்டு. அதனை நிவர்த்தி செய்ய இந்த எளிய முறையைக் கையாளலாம்:

தேவையான இலையைக் கொண்டு வந்து, வெதுப்பி அந்த இலைக்குச் சமமாக ஏலரிசி சேர்த்து அம்மியில் வைத்து நீர் விட்டு அரைத்து, அரைத்த விழுதை அடிவயிற்றில் பற்றுப் போட வேண்டும். இந்த விதமாகச் செய்து வந்தால் நீர் அடைப்பு குணமாகும்.

**சூதக வயிற்று வலி, நீர்த்தாரை எரிவு, முகம், கன்னம், காது குடைச்சல் ஆகியவை குணமாக:**

43 கிராம் சிதைத்த விதையுடன் விளக்கெண்ணெய் 2 ஆழாக்குச் சேர்த்து 7 நாட்கள் தொடர்ந்து அரைத்தரைத்து வெயிலில் வைக்க வேண்டும். 8 ஆம் நாள் அவற்றை எடுத்து வடித்து, அடி வயிற்றில் தடவ, சூதக வயிற்று வலி, நீர்த்தாரை எரிவு நீங்கும். கன்னம், முகம், காது ஆகியவற்றில் காணும் குடைச்சலுக்கும் தடவ, நன்மை பயக்கும்.

**பிளவை, கண்டமாலை நீங்குவதற்கு:**

தேவையான, ஊமத்தையினுடைய காய்களைக் கொண்டு வந்து, பசுவின் சாணத்தில் போட்டு வதக்கி, பிறகு அடுப்பில் வைத்துக் காய்ச்சி இறக்கி, பின் நசுக்கி வில்லைபோல் தட்டி, சிறிது விளக்கெண்ணெய் எடுத்து வில்லையில் தடவி பிளவை, கண்டமாலை முதலிய வீக்கங்களில் வைத்துக்கட்ட அவை நலமாகும்.

**வாதநோய்:**

தேவையான, ஊமத்தம் இலைகளைக் கொண்டு வந்து சுத்தம் பார்த்து அந்த இலைகளுக்குச்

தகுந்த சாராயத்தை ஊற்றி 10 நிமிடம் ஊறவைத்துப் பிறகு எடுத்து வாதவலியினால் அவதிப்படுகிறவர்கள் அந்த நோய் காணப்படும் இடத்தில் தொடர்ந்து 3 நாள் வைத்துக் கட்ட, வலி நீங்கும்.

**சிரங்கு, ரணம், பிளவை, சதை வளருதல், ஒழுகும் ரணங்கள், ஆகியவை குணமாக:**

ஊமத்தை இலைச் சாற்றை, தேங்காய் எண்ணெய்யுடன் கலந்து, காய்ச்சி, சாறு ஓரளவுக்குச் சுண்டிய பின் மயில் துத்தத்தைப் பொடித்து, எண்ணெய்யில் சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்து வைக்கவும். ஊமத்தைச் சாறு 875 கிராம், தேங்காய் எண்ணெய் 350 கிராம், மயில்துத்தம் 43½ கிராம் இருக்க வேண்டும்.

மேல் பூச்சாக உபயோகிக்கவும். சீழ் வடியும் காதில் சில துளிகள் விடலாம்.

முக்கியக் குறிப்பு: (இந்த எண்ணெய்யை உள்ளுக்குச் சாப்பிடக் கூடாது)

வாதமறும் பித்த மயக்கமறு
மாநிலத்திற்
றீது கரப்பான் சிரங்கசலுங் -
கோதாய்கேள்!
மாமத்த மாகும் வறட்சியெல்
லாம்போகும்
ஊமத்தங் காய்க்கென் றுரை
(அகத்தியர் குறிப்பு)

பொருள்:

இதனால் வலிநோய், கரப்பான் கழலை, சொறி இவை நீங்கும், மயக்கமும், வெறிநோயும் உண்டாகும்)

சத்து:

ஊமத்தை சண் தாரையைப் பெருக்கும்.

## கருவூமத்தை

இது ஊமத்தையைவிட மிகுந்த வன்மையுள்ளது. சுக்கிலத்தையும், பாதரசத்தையும் கட்டும். உடலுக்கு அழகைத் தரும். பெருநோய், வியர்வை, தினவு, முனி சுரம் இவைகளைப் போக்கும்.

கருவூமத்தன் இலை ரசம் 420 கிராம், தேங்காயெண்ணெய் 840 கிராம் இந்த இரண்டையும் சேர்த்துக் காய்ச்சி, ரசம் சுண்டும் தறுவாயில் ஓமத்தூள் 35 கிராம் கூட்டி, மெழுகுப்பதத்தில் வடி கட்டி, அதில் கற்பூரம் 35 கிராம் பொடித்துக் கரைத்துப் பூசி, வெந்நீர் விட்டுத் தேய்க்க, குத்தல் குடைதல் போம்.

## பொன்னூமத்தை

புண் கிரந்தி நாள்பட்டகிரானி, கருப்பாதிசாரம், பித்த சுரம், நீங்கா விட சுரம், அதிசாரம் முதலியவற்றைப் போக்கும் குணம் இதற்கு உண்டு.

## மருளூமத்தை

குளிர்காய்ச்சல், ஜலக்கோவை அற்பவீரியமுள்ள இடங்கள், அக்கினி மாந்தம், வாததோஷம் இவை நீங்கும்.

### குறிப்பு:

மருளூமத்தைக் காய், மற்ற ஊமத்தங்காய்களைவிட உருவத்தில் சிறியதாயும் நீண்டும் இருக்கும். உருண்டிராது. நீண்டு, கறுத்துக் கனத்திருக்கும். விதைகளும் சிறியவை.

### பண்புகள்:

இதன் இலை, பூ, விதை ஆகியவை மயக்கத்தைத் தரும். அதிகமாக, வெறும் வயிற்றில் சாப்பிடும் பட்சத்தில் தொண்டை வறட்சி, தலை சுற்றல், நடை மாறுதல், கண்பார்வை மங்குதல், பயித்தியம் போல் இருப்பது, சுவாசம் குறைத்தல் முதலிய மாறுபட்ட குணங்களை உண்டாக்கி உயிருக்கு ஆபத்து விளைவிக்கும். இதன் விஷம் உடலில் இருக்கும் வரை கண்விழி விலாத்திருக்கும். எனவே, இதற்கு மாற்று என்ன செய்யலாம்?

**இதற்கு முறிவு:**

ஊமத்தையால் உண்டான நஞ்சிற்கு, தாமரைக் கிழங்கை, புளித்ததண்ணீர் விட்டு அரைத்து நோய் வன்மைக்குத் தக்க அளவு தர வேண்டும். நீலி வேர்ப்பட்டையை மேற்சொன்ன வகையில் அரைத்து உண்ண, முறியும். வாந்திக்குக் கொடுத்து வாந்தியான பிறகு அழிஞ்சில்வேர் பட்டையை எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து, நஞ்சு வன்மைக்குத் தக்க அளவு சாப்பிட்டாலும் நஞ்சுத் தன்மை குறையும்.

முறிவுக்கு

போமே வூமத்தை புசித்தால்
மரைக்கிழங்கைத்
தேமேவு காடிவிட்டுத் தின்னப்
போம்-ஆமவுரி
வேராகும் வாந்தி விழவருந்தி
வெள்ளழிஞ்சில்
வேருணச் சாற்றிலரைத் துண்.

—(அகஸ்தியர் விஷப் பிரதி)
விஷ திரட்டு

இவ்வாறு அரியதொருமருத்துவப் பொருளாக ஊமத்தை விளங்குகிறது.

## பெரியாறு-வைகை பாசனத் திட்டம்

பெரியாறு வைகை மேம்பாட்டுத் திட்டம் நடப்பிலுள்ள பெரியாறு-வைகைப் பாசனத்தை நவீனப்படுத்தும் திட்டமாகும். கசிவினால் வீணாகும் நீரைச் சேமித்து அதன் மூலம் புதிய நிலங்களுக்கு நீர்ப்பாசனத்தை விரிவாக்குவதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்காக இதுவரை 4,317.04 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. உலக வங்கியால் பரிசீலித்து ஏற்றுக் கொள்ளப்பட்ட 10,306 எக்டேர் (25,455 ஏக்கர்) கூடுதல் பாசனப் பரப்பு முழுவதும் இத்திட்டம் முடிவுற்றபின் பயனடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, இந்தியாவிலேயே நவீன சீரமைப்புப் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட முதல் பாசனத் திட்டமாகும். இது, நீரைச் சேமிப்பதில் முன்மாதிரித் திட்டமாகவும் விளங்குகிறது.



# பூனை

சிறு வயதிலிருந்தே ஆங்கில 'ரைம்'களைப் படித்து, நாம் பூனைகள் மீது அளவற்ற அன்பு செலுத்தி வருகின்றோம். குரங்கிடம் அப்பம் தந்து ஏமாந்த இரண்டு பூனைகளின் கதையை நாம் படித்துப் பரவசமடைந்துள்ளோம்.

'பூனை போல இருந்து கொண்டு காரியம் செய்கின்றான்' என்று சாதுவாக இருந்துகொண்டு விஷமம் செய்பவர்களை நாம் குறிப்பிடுகின்றோம். பூனை என்றாலே நமது நினைவுக்கு வருவது எலிகள்தாம். வீட்டில் தொல்லையாக இருந்துவரும் எலிகளை ஒழித்துக்கட்டி, நமக்கு நிம்மதியைப் பூனைகள் தருகின்றன.

பூனையிடம் கவனமும் அன்பும் மிக முக்கியம். பூனை ஒன்று நம்மிடம் இருந்தால், அவற்றின் குட்டிகளையும் நேசிக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும். பூனைகளுக்கு அதிக அளவில் பால் செலவாகும். ஆயினும் பூனைக்குட்டிகளுக்குப் பிறந்த முதல் இரண்டு மாதத்தில் தாய்ப்பால்தான் தேவை. தாய்ப்பால் பூனைக்குட்டிகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியை அளிக்கின்றது என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

5 வாரங்களுக்குப் பின்னர் இவற்றுக்குத் திட உணவு தரலாம். ஒரு நாளில் மூன்று அல்லது நான்கு முறை உணவு தர வேண்டும். வெண்ணெய் அல்லது பால், காட்லிவர் ஆயில் சில சொட்டுகள், கால் 'டீ' ஸ்பூன் கால்சியம் பவுடர், ஈஸ்ட் வடிவத்தில் வைட்டமின் 'பி' ஆகியவை தொடர்ந்து தரப்பட வேண்டும்.

வளர்ந்த பூனைகளுக்கு நாள்தோறும் இரண்டு முறை உணவு வழங்கினால் போதுமானது. எடைக்குத் தக்கபடி பவுண்டுக்கு ஒரு அவுன்ஸ் என்று உணவு வழங்கப்படவேண்டும்.

பூனையின் உடலை வருடுவது மிகவும் மகிழ்ச்சி தரக்கூடியது. இவற்றைப் பிரஷ் கொண்டு சுத்தம் செய்யாது போனால், வயிற்றுநோய் பூனைகளைத் தாக்கும். தூசி காற்று பொடிகளைப் பயன்படுத்தி ஒட்டுண்ணிகளிடமிருந்து பூனைகளைப் பாதுகாக்க வேண்டும். டிடிடி-யைப் பயன்படுத்தக்கூடாது. டிடிடி பூனைகளுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடியது.

தொந்தரவில்லாமல் வாழ, பாதுகாப்பான மூலையொன்று பூனைக்குத் தேவை. பெரிய மரப்பெட்டி அல்லது வலுவான கூடை இதற்கு ஏற்றது. தரைக்கு மேல் இவற்றை அமைத்துத் தருவதால் பாலும் காலியாகாது. அக்கம் பக்கத்தார் புகாரும் இராது!

பூனை பசி மறந்து, கண்ணில் நீர் தெறிக்க வாந்தியெடுத்தாலோ, வேறு எந்த உடல் நலக் குறைவைக் காட்டினாலோ உடனடியாகப் பிராணி மருத்துவரைக் கலந்து ஆலோசிக்க வேண்டும்.

பூனை தனது காதுகளைச் சுரண்டிக்கொண்டோ, தலையை உலுக்கிக் கொண்டோ இருந்தால் அது 'காங்கர்' எனும் நோயினால் அவதிப்படுவதாக நிச்சயித்துக் கொள்ளலாம். புறக்கணித்தால், பூனைக்குக் காது கேளாமல் போகும்.

பூனை மிகவும் மெல்லிய உணர்வுகளைக் கொண்டது. சத்தம் அல்லது தொந்தரவுகள்னால் இவை சுலபமாகப் பாதிக்கப்படுகின்றன. பூனையின் கழுத்தில் ரிப்பன் போன்ற எதையும் கட்டக்கூடாது. கழுத்தைப் பிடித்துப் பூனைகளைத் தூக்கக்கூடாது. சரியான முறையில் கையாண்டால் பூனைகள் நம்முடனும், நமது குழந்தைகளுடனும் எப்போதும் விளையாடிக் கொண்டிருக்கப் பிரியப்படும். நமது அன்பு மற்றும் பரிவைப் பிரதிபலிக்கும் குணம் பூனைகளுக்கு உண்டு.

பூனை இருக்கும் வீட்டில் அழகும் களிப்பும் நிலவுகின்றன. வீட்டிலுள்ள குழந்தைகளை இவை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்கின்றன. எலித்தொல்லை உள்ள இடங்களில் பூனைக்கு வரவேற்பு அதிகம். எனவே எலிகளை விரட்ட நமது வீடுகளில் பூனை அவசியம். எனினும், பூவைப் பாதுகாப்பதுபோல, பூனைகளை நாம் சரியான முறையில் பாதுகாக்க வேண்டும்.

**—இந்திய அரசு பத்திரிகைத் தகவல் அலுவலகம்.**

**நீண்ட பயணம்!**

சூரியனை நோக்கி மணிக்கு 60 மைல் வேகத்தில் ஒரு காரில் பிரயாணம் செய்தால் நீங்கள் சூரியனைச் சென்றடைய 176 ஆண்டுகள் ஆகும். —திரா.

கலைக்கதிர்



# திருக்குறள் படி

—பல்லவன்

சிறுபொழு தேனும்
குறள்படிப்பாய்-அதனால்
சிந்தனை வளம்பெற்று
உரம் பெறுவாய்!

தோன்றிய நூற்களில்
புகழொடு தோன்றும்.
தேன்தமிழ் குறளிதைத்
திசையெலாம் ஏந்தும்!

குறுகிய உணர்வினைக்
குறள்நெறி சாய்க்கும்!
இருள்மிகு உளங்களில்
திருவிளக் கேற்றும்!

முயற்சியை ஊக்கியே
திருவினை யாக்கும்!
அயர்ச்சியைப் போக்கியே
அறிவினைச் சேர்க்கும்!

எவ்வழி நல்வழி
என்பதைச் சொல்லும்!
அவ்வழி நம்வழி
அறவழி செல்வோம்!

## கி.பி. 2ஆம் நூற்றாண்டு பானை ஓடுகள்

தமிழ்ப் பல்கலைக் கழகம் கல்வெட்டியல் துறையின் தொல்லியல் பிரிவு கடந்த இரு மாதங்களாக தஞ்சைக்கருகில் உள்ள வல்லம் கோட்டைப் பகுதியில் அகழ்வாராய்ச்சி செய்ததில் வல்லத்தின் பழமையைப் பற்றிய சில புதிய செய்திகள் கிடைத்துள்ளன. கி.பி. இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழி (அல்லது பிராமி) எழுத்தில் எழுதிய சில பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இதே காலத்தைச் சேர்ந்த தட்டையான, வரிகளுள்ள கூரை ஓடுகளும் கிடைத்துள்ளன. இந்த ஓடுகள் சோழர் காலத்தில் வழக்கொழிந்து விட்டன என்று தெரிகிறது. கிறித்துவுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படும் எலும்பு அம்பு முனைகள் சில தமிழ்நாட்டில் முதன் முதலில் இங்குதான் கிடைத்துள்ளன.



## விளையும் பயிர்

தஞ்சாவூர், மன்னர் சரபோஜி கல்லூரியில் பி.காம்., இறுதி யாண்டு பயிலும் திரு இராம. ஜெயராமன் கதை, கட்டுரை எழுதுவதில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார். இவரது எழுத்துக்கள் சில பத்திரிகைகளில் வெளி வந்துள்ளன. ஓவியம் வரைவதிலும் திறமைமிக்க இவர், பல பரிசுகளையும் பெற்றுள்ளார்.

## பொது அறிவுத் துணுக்குகள்

ஸ்டெதாஸ்கோப்பைச் செய்தவர் டாக்டர் ரெனிலெக் எனும் பிரெஞ்சுக்காரர்.

'ஷேப்டி' பின்னைக் கண்டு பிடித்தவர் அமெரிக்கரான வால்டர்ஹண்ட்.

இங்கிலாந்தின் வரலாற்றைக் கண்டுபிடித்து எழுதியவர் மெக்ஹண்ட்காலே.

சீனாவின் முந்தைய பெயர், காதே.

உலகின் மிகப்பெரிய பள்ளிக் கூடம் நியூயார்க்கில் உள்ள டிவிட் கிளிண்டன் உயர்நிலைப் பள்ளி,

'புயல் கடல்' என்னும் மிகப் பெரிய கடல், சந்திரனில் உள்ளது.

ஈகிள் என்ற கிரகம் சூரியனை விட 9,000 மடங்கு அதிக வெப்பமுடையது.

உயில் எழுதும் வழக்கத்தை ஏற்படுத்தியவர்கள் ரோமானியர்கள்.

எகிப்தில் பருத்திக்கு 'வெள்ளைத் தங்கம்' என்று பெயர்.

முதன் முதலாக இராக்கெட்டுக்கள் கி.பி. 1806 போலோன் என்னுமிடத்தில் நடந்த போரின்போது பயன் படுத்தப்பட்டன.

உலகின் மிகப்பெரிய சிலை இரஷ்யாவில் உள்ள தாய்நாடு என்னும் பெயர் பெற்ற சிலையாகும்.

இந்தியாவின் தேசிய காலண்டர் விக்ரம சகாப்தம் எனும் பெயர் பெற்றது. இதனை உருவாக்கியவர் பட்டாச்சாரிய விக்ரமர்.

சீனமொழித் தட்டச்சு இயந்திரத்தில் மொத்தம் 1,500 எழுத்துக்கள் உள்ளன.

—ச. பிரபாகரன்
(பௌதிகம்) இளம் அறிவியல்முதலாண்டு
புட்பம் கல்லூரி
பூண்டி.
தஞ்சாவூர் மாவட்டம்.

# பிலிப்ஸ்

# தோற்றத்தில் எல்லா பல்புகளும் ஒன்றுதான்.




# ஆனல், பிலிப்ஸ் எனும்போது தரம் பளிச்சிடும்.

தரத்திற்கு உறுதி தருவ்து இப்பெயர், நீடித்திருக்கும்
பளிச்சிடும் வெளிச்சம் தரும் பல்பினைப் பெறவும்
இப்பெயர் சொன்னல் போதும். உங்கள் பணத்திற்குத்
தகுந்த மதிப்பு தருவதும் இதுவே.

பிலிப்ஸ் பல்புகள். எமது பெயர் கொண்டவை
உமது சோதனையில் வெல்லும்.

PEI-1264

**[illegible] ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய வீடுதோறும் விளங்கும் நம்பகமான பெயர்**

# சைக்கிள் பந்தயத்தில் தங்கப் பதக்கம் பெற்றவர்!






ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு துறையில் ஆசை இருப்பது இயல்புதானே?

எழுத்தில், பேச்சில், விளையாட்டில், ஓவியத்தில் இப்படிச் சிறந்து விளங்க வேண்டும் என்று கனவு காண்பவர்களும், அந்தக் கனவு நனவாகாதா என்று ஏங்குபவர்களும் ஏராளம் உண்டு.

முயன்றால் முடியாதது எதுவும் இல்லை!

ஆர்வமும் முயற்சியும் உழைப்பும் இருந்தால் எதிலும் வெற்றி பெறலாம்.

செல்வி சுகுமாரிக்கு ஆர்வமெல்லாம் சைக்கிள் பந்தயத்தில்! ஆம். அதிலே சிறந்து விளங்கி, தமிழ்நாட்டுக்குப் பெருமை தேடித்தர வேண்டும் என்பதுதான் இவரது கனவெல்லாம்.

1984 ஜூன் திங்கள் 8, 9 தேதிகளில், சென்னை மருத்துவக் கல்லூரி மைதானத்தில், மாநில அளவிலான சைக்கிள் சாம்பியன் போட்டி ஒன்று நடந்தது. இந்தப் போட்டியைத் தமிழ்நாடு சைக்கிள் சங்கம் நடத்தியது.

இந்தப் போட்டியில்தான் செல்வி எஸ். சுகுமாரி கலந்து கொண்டு, 3000 மீட்டர் சைக்கிள் பந்தயத்தை 5 நிமிடம் 20.5 நொடிகளில் முடித்து முதல் பரிசான தங்கப் பதக்கத்தைப் பெற்றார். அது மட்டுமல்ல, 1600 மீட்டர் சைக்கிள் பந்தயத்திலும், 1000 மீட்டர் சைக்கிள் பந்தயத்திலும் இரண்டாவது இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றார். 25 கிலோ மீட்டர் மெரீனா கடற்கரைச் சாலைப் பந்தயத்திலும் இரண்டாவதாக வந்து வெள்ளிக் கோப்பையைப் பரிசாகப் பெற்றார்.

சென்னை மாநகராட்சி வருவாய்த்துறையில் பணியாற்றும் செல்வி சுகுமாரிக்கு வயது 21. இந்த இளம் வயதில் இவர் உலகநாடுகள் பலவற்றில் நடந்த சைக்கிள் பந்தயங்களில் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றுள்ளார்.

''1978லிருந்தே நான் இம்மாதிரியான போட்டிகளில் கலந்து கொண்டுள்ளேன். சைக்கிள் பந்தயத்திற்கென்றே தனி சைக்கிள் உள்ளது. ஆனால் அப்போது நான் சாதாரண சைக்கிளை ஓட்டி 4வதாக வந்தேன். அதுதான் நான் கலந்து கொண்ட முதல் போட்டி. பிறகு நடந்த பல பந்தயங்களில் 3வதாக வந்தேன். அதிலிருந்து தொடர்ந்து முயற்சி செய்தேன். வெற்றியும் பெற்றேன்'' என்று கூறும் செல்வி சுகுமாரி 1979ல் ஐதராபாத்தில் தேசிய அளவில் நடந்த சைக்கிள் பந்தயங்களில் கலந்து கொண்டார். 1979ல் ஜபல்பூரில் தேசிய அளவில்



நடந்த சைக்கிள் பந்தயத்தில் கலந்து கொண்டு, 1 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றார். ராஜஸ்தானிலுள்ள பிகானீரில் தேசிய அளவில் நடந்த போட்டியிலும் இவர் கலநது கொண்டார்.

1980ல் கேரளாவில் தென் மண்டலங்களுக்கான போட்டியில் 2 வெள்ளிப் பதக்கங்களையும், ஒரு வெண்கலப் பதக்கத்தையும் பெற்றார். 1982ல் பம்பாயில் நடந்த போட்டியில் 2 வெள்ளிப்பதக்கங்கள், ஒரு வெண்கலப் பதக்கம், 1982 ஏப்ரலில் பாங்காக்கில் நடந்த அனைத்துலக ஏசியன் சைக்கிள் சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொண்டு 5வது இடத்தைப் பெற்றார். இதே ஆண்டில் இலண்டனில் உலகச் சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொண்டுள்ளார், இதே ஆண்டில் டெல்லியில் நடந்த போட்டியில் 2 வெள்ளிப் பதக்கங்கள், ஒரு வெண்கலப் பதக்கம் பெற்றார். 1983ல் பிலிப்பைன்ஸில் உள்ள மணிலாவில் நடந்த 11வது ஏசியன் சைக்கிள் சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொண்டார்.

''சைக்கிள் ரேசுக்கென்றே தனியாகச் சைக்கிள் உள்ளது. அதன் விலை சுமார் 7000 ரூபாய். இந்தச் சைக்கிள்களை மேலைநாட்டிலிருந்தே தருவிக்க வேண்டியிருக்கிறது. அதனால் செலவு அதிகம் பிடிக்கிறது. அதன் உதிரி உறுப்புகளின் விலையும் மிக அதிகமாக உள்ளது. ஆகவே நம்நாட்டிலேயே அம்மாதிரியான சைக்கிள்களைத் தயாரித்தால் எவ்வளவோ நன்றாக இருக்கும்'' என்று கருத்துத் தெரிவிக்கும் செல்வி சுகுமாரிக்கு, சொந்தத்தில் ஒரு நல்ல ரேஸ் சைக்கிளே இல்லையாம்!

—பேட்டி 'கிரிஜா'.

# கோதுமையின் சிறப்பும் பயன்களும்



**டாக்டர் இராசம்மாள் பா. தேவதாஸ்**

**இயக்குநர், அவினாசிலிங்கம் மனை இயல் கல்லூரி கோயம்புத்தூர்.**

உலகில் பெருமளவில் பயன்படுத்தப்படும் தானியங்களுள் முக்கியமான ஒன்று கோதுமையாகும். ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ரஷியா ஆகிய நாடுகளிலும், நம் நாட்டில், பஞ்சாப், ஹரியானா, உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் குறிப்பாகவும் வடஇந்தியா முழுவதிலும் பொதுவாகவும் கோதுமை அதிகமாக உபயோகிக்கப்படுகிறது. குளிர்ப்பிரதேசங்களில் கோதுமை பெருமளவு பயிர்செய்யப்படுவதால் அந்நாடுகளில் வாழும் மக்கள் அனைவரும் கோதுமையினால் செய்யப்படும் ரொட்டி, அடை, சப்பாத்தி போன்ற உணவுகளைத்தான் அதிக அளவில் உண்கிறார்கள்.




**கோதுமையின் அமைப்பு:**

ஒவ்வொரு கோதுமை மணியிலும் தவிடு (Bran) முளைக்கரு (Germ) என்டோஸ்பெர்ம் (Endosperm) எனப்படும் நடுவிலுள்ள மாவுப்பகுதி ( Aleurone Layer ) என்னும் தவிடுப்பகுதி என்ற நான்கு முக்கியப் பாகங்கள் உள்ளன.

**தவிடு:**

தவிடு தானியத்தின் வெளிப்பகுதியிலுள்ள மரக்கலர்ப் பகுதியாகும். இது தானியத்தில் பன்னிரண்டு சதம் உள்ளது. அதிக அளவில் செல்லுலோசும், தாது உப்புக்களும் நிறைந்துள்ள பகுதி இது. 'பி' இன வைட்டமின்களும் சில தாதுஉப்புக்களும் இதில் உள்ளன.

*(Aleurone Layer) :*

தானியத்தின் தவிட்டுப்பகுதிக்கு அடுத்தபடியாக அமைந்துள்ள இது ஒரே ஒரு செல் (cell) வரிசையால் ஆனது. இதில் புரதச் சத்து அதிகமாக உள்ளது. பாஸ்பரஸ் என்னும் தாது உப்பும் உள்ளது.

**மாவுப்பகுதி:** *(Endosperm)*

மாவுப்பகுதி தானியத்தில் 85 சதவிகிதமாகும். மாவுப்பொருளும் புரதச் சத்துக்களும் நிறைந்த இது தானியத்தின் 'எரிபொருள்' சேமிப்பு நிலையம் (Store house energy) எனப்படும்.

**முளைக்கரு (Germ) :**

தானியத்தின் கீழ்ப்பகுதியில் முளைக்கரு அமைந்துள்ளது. தானியத்தில் 1 அல்லது 2 சதம் முளைக்கரு ஆகும். முளைவிடும் தானியத்தின் உயிர்நாடியும் இதுவே. (Heart of the grain ) இதில் ஒரு தாவரம் வளருவதற்குத் தேவையான எல்லாச் சத்துக்களும் காணப்படுகின்றன. புரதச்சத்து, மாவுச்சத்து, தையாமின் மற்றும் பலவகை 'பி' இன உயிர்ச் சத்துக்கள், கொழுப்பு, உயிர்ச்சத்து 'இ' இரும்புச்சத்து போன்றவையும், இப்பகுதியில் உள்ளன.

**Scutelleum:**

இந்தப் பகுதி தானியத்தின் மாவுப்பகுதியையும், முளைக்கருவையும் பிரிக்கிறது. இது தானியத்தின் ஒரு பகுதியானாலும், இதில் பெருமளவு தயாமின் என்னும் 'பி' இன உயிர்ச்சத்து உள்ளது.



**கோதுமையிலுள்ள சத்துப் பொருட்கள் சக்தி (கலோரிகள்)**

100 கிராம் கோதுமை மாவு 350 கிலோ கலோரி சக்தியினைத் தருகிறது. மாவுப் பொருள் உடலில் ஜீரணிக்கும்போது கலோரி கிடைக்கிறது.

**புரதச் சத்து:**

புரதச்சத்து பெருமளவு தானியத்தின் மாவுப்பகுதியில் உள்ளது. கோதுமையின் வகையைப் பொறுத்து புரதச்சத்து மாறுபடுகிறது. கடினமான கோதுமை வகைகளில் 12 லிருந்து 15 சதவிகிதம் வரை புரதச்சத்து உள்ளது. ஆனால் மிருதுவான கோதுமை வகைகளில் 8லிருந்து 11 சதவிகிதம் வரை யிலும் புரதச்சத்து உள்ளது. கோதுமை மாவில் 'Gluten' எனப்படும் புரதம் பெருமளவில் உள்ளது. இதில் gliadin, glutenin எனப்படும் இருவகைப் புரதங்கள் உள்ளன. இவை பொதுவாக நீரில் கரையாது. நீரில் கரையும் புரதங்களான albumin, globutin போன்ற வகைகள் கோதுமை மாவில் குறைவான அளவில்தான் உள்ளன, குளூட்டன்(gluten) என்னும் புரதம் கோதுமை மாவை நீர்விட்டு நன்கு பிசைந்தால் ரப்பர் போன்ற இழுபடும் தன்மையுள்ள ஒரு பொருளாகக் கிடைக்கும். அரிசிமாவு, சோள மாவு போன்றவற்றில் இத்தகு இழுபடும் தன்மையுள்ள குளூட்டன் கிடைக்காது. ஆகவேதான் பூரி, ரொட்டி, பிஸ்கட் போன்ற தயாரிப்புகளுக்கு மைதா மாவை உபயோகிக்கிறார்கள். மைதா மாவு



தவிடு நீக்கி மாவு பிசைந்து நொதித்தலுக்கு வைக்கப்படும்பொழுது கார்பன் - டை-ஆக்ஸைடு வெளிவரும். அப்பொழுது மாவு தனது கொள்ளளவில் அதிகமாகும். அது சமயம் இந்த gluten வலைபோன்று விரிந்து கொடுக்கும். சூட்டடுப்பில் (backing oven) வைக்கப்பட்டு சூடு செய்யப்படும் பொழுது இந்த வாயு ( $CO_2$ ) மேலும் விரிவடைந்து ரொட்டி, பன் போன்ற பொருள்கள் மிருது வாக இருப்பதற்குக் காரணமாகிறது.

கோதுமைப்புரதத்தில் (Lysine) லைசின் எனப்படும் முக்கியமான அமினோ அமிலம் குறைவாக உள்ளது. ஆகவே தற்சமயம் மைதாவில் லைசின் அமினோ அமிலத்தைச் சேர்த்து அதை ரொட்டிக்கு உபயோகிக் கிறார்கள்.



## கொழுப்புச் சத்து (Fat)

கோதுமை மாவில் கொழுப்புச் சத்து 1.7 சதவிகிதம் தான் முளைக்கருப்பகுதி யிலிருந்து கிடைக்கிறது.

## மாவுச்சத்து (Carbo hydrate):

முழு கோதுமை மாவில் 72 சதவிகிதம் மாவுச்சத்து உள்ளது.

## உயிர்ச்சத்துக்கள் :

பெரும்பாலும், தயாமின், ரைபோ பிளேவின், நயசின் போன்ற 'பி' இன உயிர்ச் சத்துக்கள் கோதுமை மாவில் உள்ளன. ஆனால் மைதா மாவில் குறைவாகக் காணப் படுகின்றது. கராட்டின் என்னும் உயிர்ச்சத்து 'ஏ' பொருளும் முழுக் கோதுமையில் ஓரளவு உள்ளது.

## தாது உப்புக்கள் சுண்ணாம்புச்சத்து :

கோதுமை மாவில் சுண்ணாம்புச்சத்து, 100 கிராம் அளவில் 40 மில்லி கிராம் உள்ளது. ஆனால் மைதாவில் அது 20 மில்லி கிராம் தான் உள்ளது. கோதுமை பொதுவாகவே சுண்ணாம்புச்சத்து குறைவான ஒரு உணவுப் பொருள் ஆகும்.

## இரும்புச்சத்து:

முழு கோதுமையில் இரும்புச்சத்து கணிச மாக உள்ளது (11.5 மி.கி. / 100 கி)

## பாஸ்பரஸ்:

கோதுமை மாவில் அதிக அளவு பாஸ் பரஸ் உள்ளது.

## பைட்டேட்:

பைட்டேட் என்னும் பொருள் தவிட்டில் அதிகமாக உள்ளது. அது சுண்ணாம்புச் சத்து, இரும்புச்சத்து போன்றவை உடலில் நன்கு பயனாவதைத் தடுக்கிறது. ஆகவே கோதுமை யின் முழுப்பயன் கிடைப்பதற்குப் பைட் டேடை நீக்க வேண்டும். அட்டவணையில் பலவிதக் கோதுமைப் பொருட்களிலுள்ள சத் துக்களைக் காணலாம்.



அட்டவணை

பலவித கோதுமைப் பொருட்கள்.
(100 கிராமில் உள்ளவை).

| உணவு Foodstuff | சக்தி (Kcal) | புரதம் (g) | கொழுப்பு (g) | சுண்ணாம்பு சத்து (mg) | இரும்பு (mg) | கராட்டின் (ug) | தயாமின் (mg) | ரைபோ பிளேவின் (mg) |
|---|---|---|---|---|---|---|---|---|
| ரவை (Wheat ravai) | 348 | 10.4 | 0.8 | 16 | 1.6 | ... | 0.12 | 0.03 |
| புழுங்கல் கோதுமை (Bulgar wheat) | 346 | 8.2 | 1.6 | 37 | 4.9 | | 0.74 | 1.11 |
| முழுகோதுமை பச்சையாக (Wheat whole) | 346 | 11.8 | 1.5 | 41 | 4.9 | 64 | 0.45 | 0.17 |
| கோதுமைமாவு (Wheat flour) | 341 | 12.1 | 1.7 | 48 | 11.5 | 29 | 0.49 | 0.29 |
| மைதாமாவு (Maida flour) | 348 | 11.0 | 0.9 | 23 | 2.5 | 25 | 0.12 | 0.07 |
| கோதுமை முளை (Wheat germ) | 397 | 29.2 | 7.4 | 40 | 6.0 | ... | 1.40 | 0.54 |

**கோதுமையின் உபயோகங்கள்:**

முழுகோதுமையைப் பெரும்பாலும்யாரும் அரிசியைச் சமைப்பது போன்று அப்படியே உபயோகப்படுத்துவதில்லை. பொதுவாக கோதுமை அரைக்கப்பட்டு மாவாகவோ ரவையாகவோ பயன்படுகிறது. ரோலர் மில் மூலம் பல்வேறு பகுதிகளாக அரைக்கப்பட்ட கோதுமை கிடைக்கிறது. அரைத்தலின்போது ஜீரணித்தலுக்குக் கடினமான செல்லுலோஸ் உமிப்பகுதிகள் நீக்கப்பட்டு மாவுகிடைக்கிறது. ஒரு குறிப்பிட்ட அளவு கோதுமையிலிருந்து எவ்வளவு மாவு கிடைக்கிறது என்பதை Extraction Rate என்று கூறுகிறார்கள். அதிகமான Extraction Rate என்றால் பெருமளவு தவிடு இருக்கிறது என்று அர்த்தம். மாவின் நிறமும் மாறுபட்டு, Brown நிறமாக இருக்கும். Extraction Rate குறைவாக இருந்தால் மாவு வெண்மையாகவும், தவிடுப்பகுதி குறைவாகவும் இருக்கும். அடுமனைத் தொழிலுக்குப் பெரும்பாலும் அதிக வெண்மையானமாவைத் தேர்ந்தெடுக்கிறார்கள். புல்கர் கோதுமை எனப்படுவது முதலிலேயே ஆவியில் வேகவைக்கப்பட்ட புழுங்கல் கோதுமையாகும்.

மாவு என்பது ஒரு பொதுவான வார்த்தை. கோதுமை மாவில் தவிடு அதிகமாகவும், மைதாவில் தவிடு குறைவாகவும் இருக்கும். முழுகோதுமை பகுதிகளாக அரைபடும்பொழுது கோதுமை ரவை (சம்பா ரவை) கிடைக்கிறது. அதுவே மேலும் தவிடு நீக்குவதற்கு முறையாக அரைக்கப்பட்டால் வெள்ளை ரவை கிடைக்கிறது.

கோதுமையில் சுண்ணாம்புச் சத்து குறைவாக இருப்பதால், கோதுமை மாவுடன் கால்சியம் கார்பனேட் சேர்த்துச் சத்துமிகச் செய்கிறார்கள். தவிட்டுப் பகுதியில் தரமிக்க புரதச்சத்து அடங்கியுள்ளது. ஆகவே அரவை மில்லில் பிரிக்கப்படும் தவிடு பகுதியைத் தற்சமயம் மாவுடன் சேர்த்து உபயோகிக்க முயன்று வருகிறார்கள். மேலும் தவிட்டில் உள்ள செல்லுலோஸ் மலச்சிக்கலைத் தவிர்க்க உதவுகிறது.

மைதா மாவு ரொட்டி, பன், கேக், பிஸ்கட் மற்றும் பலவகை அடுமனைப் பதார்த்தங்கள் செய்வதற்கும், கோதுமை மாவு, பூரி, சப்பாத்தி, பரோட்டா போன்றவை செய்வதற்கும், மாக்கரோனி (Macaroni) ஸ்பகட்டி (Sphaghetti) நூடில்ஸ் (Noodles) சேமியா போன்றவை செய்யவும், ரவை, உப்புமா, கேசரி, பாத், கிச்சடி, பொங்கல் இன்னும் பலவகை கார இனிப்பு வகைப்பொருட்கள் செய்வதற்கும் பயன்படுகின்றன. அரிசியை விட அதிக அளவு புரதம் உள்ள கோதுமை நம் தினசரி உணவிலும் பள்ளிகளிலும், வளர்ச்சித் திட்டங்களிலும் உள்ள ஊட்ட உணவு சத்துணவுத் திட்டங்களிலும் பயன்படுத்துவது நல்லது.



### 1. பருப்பு புல்கா (சப்பாத்தி)

தேவையான பொருட்கள் :

| | | |
|---|---|---|
| பாசிப்பருப்பு | ... | 125 கிராம் |
| கோதுமைமாவு | ... | 150 கிராம் |
| வெண்ணெய் | ... | 30 கிராம் |
| மிளகாய்த்தூள் | ... | ருசிக்கேற்ற அளவு |
| மஞ்சள்பொடி | ... | ஒரு சிட்டிகை |
| உப்பு | ... | தேவையான அளவு |
| கொத்துமல்லித்தழை | | ஒரு சிறிது |
| வெங்காயம் | ... | 1 |
| பச்சைமிளகாய் | ... | 1 |
| எண்ணெய் | ... | தேவையான அளவு |

செய்முறை :

1. பருப்பை நன்கு கழுவிவிட்டு 15 நிமிடம் ஊறவைக்கவும்.
2. மஞ்சள் தூள் உப்பு கலந்துபருப்பை இளஞ்சூட்டில் சிறிது நீரில் நன்கு வேகவைக்கவும்.
3. வெங்காயம், பச்சை மிளகாய், கொத்துமல்லித்தழை போன்றவற்றைப் பொடிப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.
4. வெந்து உலர்ந்த பருப்பின் மீது நறுக்கிய வெங்காயம், மிளகாய் கொத்துமல்லி போன்றவற்றையும் மிளகாய்த் தூளையும் சேர்க்கவும்.
5. கோதுமை மாவைச் சலித்து நன்கு நீர் விட்டு மாவாகப் பிசைந்து கொள்ளவும்.
6. வெண்ணெய், உப்பு போன்றவற்றையும் சேர்த்துப் பிசையவும்.
7. பிசைந்த மாவைச் சிறு உருண்டையாகப் பிரித்துக் கொள்ளவும்.
8. உருண்டைகளைத் தட்டிக்கொண்டும் ஒவ்வொரு உருண்டையின் நடுவிலும் ஒரு தேக்கரண்டி அளவு பருப்புக் கலவையை வைத்து மூடவும்.
9. மூடிய உருண்டையை சப்பாத்திப் பலகையின் மேல் வைத்து நன்கு உருட்டித் தேய்த்துக் கொள்ளவும்.
10. சூடான தோசைக் கல்லில் எண்ணெய் தடவி அதில் தேய்த்துப் புல்காக்களை, இரண்டு புறமும் தங்க நிறம் வரும்வரை வேகவைத்து எடுத்துப் பரிமாறவும்.

### 2. கோதுமை ரவை அல்வா:

தேவையான பொருட்கள் :

| | |
|---|---|
| கோதுமை ரவை | 200 கிராம் |
| சர்க்கரை அல்லது வெல்லம் | 150 கிராம் |
| பால் | 200 மில்லி லிட்டர் |
| நீர் | 200 மில்லிலிட்டர் |
| உலர்ந்த திராட்சை | 10 கிராம் |
| முந்திரிப் பருப்பு | 20 கிராம் |
| ஏலக்காய் | 2 |
| நெய் அல்லது எண்ணெய் | 50 கிராம் |





செய்முறை:

1. சர்க்கரையுடன் பாலையும், நீரையும் கலந்து கொதிக்க விட்டுச் சர்க்கரைப் பாகைத் தனியாக எடுத்து வைக்கவும்.

2 நெய்யில் கோதுமை ரவையை நன்கு வறுத்தெடுக்கவும்.

3. தங்கநிறமாக ரவை வந்தவுடன், காய்ச்சி வைத்த பாகை அதனுடன் சேர்க்கவும்.

4. உலர்ந்த திராட்சை, முந்திரி, ஏலக்காய்ப் பொடி ஆகியவற்றையும் கலந்து இளம் சூட்டில், நீர் வற்றும் வரை கிளறிக் கொண்டே வேக வைக்கவும். கால்மணி நேரமாவது நன்கு கிளற வேண்டும்.

5. ஹல்வாவை நெய் தடவிய தட்டில் ஊற்றி தேவையான அளவு வெட்டி பரிமாறவும்.

**கோதுமை சாம்பார் சாதம்**

| பொருட்கள் | எடை கி. | அளவு மி.லி. | கலோரிகள் கி.க. | புரதம் கி. |
|---|---|---|---|---|
| கோதுமை ரவை | 60 | 96 | 208 | 7.1 |
| துவரம் பருப்பு | 20 | 24 | 67 | 4.4 |
| பீன்ஸ் | 10 | ... | 16 | 0.7 |
| முருங்கைக்கீரை | 25 | ... | 23 | 1.7 |
| உப்பு, கடுகு | ருசிப்படி | | | |
| எண்ணெய் | ½ தேக்கரண்டி | | | |
| தண்ணீர் | 1100 மி.லி. | | | |



செய்முறை :

1. துவரம் பருப்பை 2 கப் தண்ணீரில் வேக வைக்கவும்.

2. பருப்பு வெந்தவுடன் நறுக்கிய பீன்ஸ், முருங்கைக் கீரை ஆகியவற்றையும் சேர்த்து வேக வைக்கவும்.

3. கோதுமை ரவையை வேக வைத்துக் கொள்ளவும்.

4. கோதுமை ரவையுடன், பருப்புக் கலவை. யையும் உப்பையும் சேர்க்கவும்.

5. வாணலியில் எண்ணெய் விட்டுக் காய்ச்சி கடுகைச் சேர்த்துத் தாளிக்கவும்.







**கோதுமை இனிப்புப் பொங்கல்**

| பொருட்கள் | எடை கி. | அளவு மிலி. | கலோரிகள் கி.க | புரதம் கி. |
|---|---|---|---|---|
| கோதுமை ரவை | 50 | 80 | 173 | 5.9 |
| கடலைப்பருப்பு | 25 | 50 | 93 | 5.2 |
| வெல்லம் | 20 | ... | 77 | ... |
| நிலக்கடலை | 5 | ... | 28 | 1.5 |
| தண்ணீர் | 1100 மி.லி. | | | |

செய்முறை:

1. கடலைப்பருப்பை வேக வைக்கவும்.

2. வெந்தவுடன் அதில் கோதுமை ரவையையும் பொடி செய்த வெல்லத்தையும் சேர்க்கவும்.

3. ரவை வெந்தவுடன் நன்றாகக் கிளறி அடுப்பிலிருந்து இறக்கவும்.

4. பொடி செய்து வறுத்த நிலக்கடலையை கோதுமைப் பொங்கலுடன் கலக்கவும்.

**கோதுமை காய்கறி சாதம்**

| பொருட்கள் | எடை கி. | அளவு மி.லி. | கலோரிகள் கி.க. | புரதம் கி. |
|---|---|---|---|---|
| கோதுமை ரவை | 60 | 96 | 208 | 7.2 |
| துவரம் பருப்பு | 20 | 24 | 67 | 4.4 |
| கேரட் | 30 | ... | 15 | 0.3 |
| பீன்ஸ் | 20 | ... | 32 | 1.4 |
| முட்டைக்கோஸ் | 25 | ... | 7 | 0.5 |
| எண்ணெய் | ½ தேக்கரண்டி | | | |
| தண்ணீர் | 1400 மி.லி. | | | |

செய்முறை:

1. பருப்பை வேக வைக்கவும்.

2. பருப்பு வெந்தவுடன் கேரட், பீன்ஸ், முட்டைக்கோஸ் ஆகியவற்றைச் சேர்த்து வேக வைக்கவும்.

3. ரவையைத் தனியாக வேக வைக்கவும்.

4. வெந்த ரவையுடன் பருப்பு, காய்கறிக் கலவையைச் சேர்த்துக் கிளறவும்.

5. வேண்டிய அளவு உப்பைச் சேர்க்கவும்.

6. தாளித்து இறக்கவும்.

# வேலைவாய்ப்பு

**மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்**

**திரு எம். விஜயசாரதி**

**தொ**ழில் நுட்பம் அறிந்தவர்களுக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும், தொழில்ரீதியில் தகுதி பெற்றவர்களுக்கும் உரிய தனி வேலைவாய்ப்பகங்கள் ஐந்து உட்பட இம்மாநிலத்தில் முப்பத்தொன்பது வேலைவாய்ப்பகங்கள் உள்ளன.

**உடல் ஊனமுற்றோருக்கான தனி வேலைவாய்ப்பகம்:**

உடல் ஊனமுற்றோரின் தனிப் பிரச்சனைகளுக்குத்தீர்வு காணும் பொருட்டு மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு பிரிவாக நான்கு பிரிவுகளைக் கொண்ட தனி வேலைவாய்ப்பகம் ஒன்று சென்னையில் செயல்பட்டு வருகிறது. உடல் ஊனமுற்றவர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்காக மத்திய அரசிடமிருந்து முழு உதவி பெற்று கோயம்புத்தூரிலுள்ள வேலைவாய்ப்பகத்தில் தனிப்பிரிவு ஒன்று அமைக்கப்பட்டது.

**வாழ்க்கைத் தொழிலுக்கு வழி காட்டுதல்:**

வாழ்க்கைத் தொழிலுக்கு வழி காட்டும் பிரிவுகள் புதுக்கோட்டை, தருமபுரி ஆகிய மாவட்ட வேலை வாய்ப்பகங்களில் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது எல்லா மாவட்டங்களிலும் வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டும் பிரிவுகள் உள்ளன.

1959ஆம் ஆண்டு பதவி காலியிடங்களை கட்டாயமாக வேலைவாய்ப்பகத்திற்குத் தெரிவித்தல் சட்டத்தைச் செயற்படுத்துதல்.

30.9.1982ஆம் நாள் நிலவரப்படி இச்சட்டத்தின் செயல் வரம்பின் கீழ் மொத்தம் 13,186 நிறுவனங்கள் இருந்தன. 30.9.1983ஆம் நாள் நிலவரப்படி 14,111 நிறுவனங்கள் உள்ளன. வேலைவாய்ப்பகங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட பதவி காலியிடங்களின் எண்ணிக்கையும், பின்னர், இந்நிறுவனங்களில் நிரப்பப்பட்ட பதவிக்காலியிடங்களின் எண்ணிக்கையும் வருமாறு:

1959ஆம் ஆண்டு வேலைவாய்ப்பகங்கள் (வேலைக் காலி இடங்களைக் கட்டாயமாக அறிவித்தல்) சட்டம் - அமலாக்கப்பட்ட விவரங்கள்.

1.1.1982 முதல் 31,12.1982 வரை அறிவிக்கப்பட்ட காலி இடங்கள் 88,800. நிரப்பப்பட்ட காலி இடங்கள் 64,681

1.1.1983 முதல் 30.8.1983 வரை அறிவிக்கப்பட்ட காலியிடங்கள் 60,277. நிரப்பப்பட்ட காலி இடங்கள் 52,381

**வேலைவாய்ப்பற்றோர் இடருதவித் திட்டம்:**

ஐந்தாண்டுகளுக்கும் மேலாக வேலைவாய்ப்பகப் பதிவேடுகளில் பெயரைப் பதிவு செய்துள்ளவர்களும், பெற்றோரின் மாத வருமானம் ரூ. 2,000க்குக் குறைவாக உள்ளவர்களுமான படித்த வேலைவாய்ப்பு அற்றவர்களுக்கு இடருதவித் தொகை வழங்கும் அரசின் திட்டம் 1.7.1980லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் (காலண்டர்) எய்திய சாதனை தொடர்பான விவரங்கள் வருமாறு:

**வேலையற்றோர் உதவித் திட்டம்**

31.12.1983 அன்று நிலவரப்படி பயனடைந்தவர்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1.7.1980 முதல் 31.12.83 வரை பயனடைந்த தகுதி வாய்ந்தவர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை—49,555.

பரிசீலனை செய்து ஒப்பளிப்பு அளிப்பதற்காக வட்டாட்சியர்களுக்கு அனுப்பப்பட்ட பூர்த்தியான விண்ணப்பங்களின் எண்ணிக்கை—29,993.

வட்டாட்சியரால் அனுமதி அளிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை—20,648.

டிசம்பர் 1983 வரை பயனடைந்த தகுதி வாய்ந்தவர்என அடையாளப்படுத்தப்பட்ட பார்வையிழந்தவர்களின் எண்ணிக்கை—335.



பரிசீலனை செய்து ஒப்பளிப்பு அளிப்பதற்காக வட்டாட்சியர்களுக்கு அனுப்பப்பட்ட பார்வையற்றோர்களின் பூர்த்தியான விண்ணப்பங்களின் எண்ணிக்கை — 335.

வட்டாட்சியரால் அனுமதி அளிக்கப்பட்ட பார்வையற்றோர் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை—82.

*1980-81, 1981-82, 1982-83* மற்றும் *1983-84*ஆம் ஆண்டுகளுக்கான செலவு குறித்தவிவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:



| ஆண்டு | செலவு ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| *1980—81* | *22.04* |
| *1981—82* | *75.29* |
| *1982—83* | *81.58* |
| *1983—84* (டிசம்பர் *1983*வரை) | *39.59* |

**சுயவேலை வாய்ப்பு:**

தேசிய வேலைவாய்ப்புப் பணி நிறுவனத்தின் கடமைகள் விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்து நியமனம் செய்வதுடன் முடிந்து விடக்கூடாது; ஆனால் சுய வேலைவாய்ப்புக்கு வழிகாட்டுதல், பயிற்சியளித்தல், விண்ணப்பதாரர்களைத் தயார் செய்தல் ஆகியவற்றையும் கவனிக்கவேண்டும் என்பது தற்போது பெரிதும் உணரப்பட்டு வருகிறது. மத்திய அரசிடமிருந்து முழு உதவிபெற்று கடந்த ஆண்டில் வேலூரிலுள்ள வேலை வாய்ப்பகத்தில் தனி வேலைவாய்ப்புப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலர் சுயவேலையில் விருப்பம் உள்ள நபர்களுக்கு அறிவுரையும் வழியும் காட்டுவார்; இதற்கு வேண்டிய வங்கி உதவியும் ஏற்பாடு செய்கிறார்.

கிராம இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தொழில் பயிற்சி நிலையங்களிலும் இவற்றைப் போன்ற ஏனைய நிறுவனங்களிலும் பயிற்சி பெற்ற அனைவருக்கும் சுயவேலை வாய்ப்பு முயற்சிகளை மேற்கொள்வதற்காக நிதி உதவி அளிக்கும் புதிய இயக்கத்தின் பயனாக சுயவேலைவாய்ப்பு பெருகியுள்ளது.

மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் இதற்கென அமைக்கப்பட்ட பணிக்குழுவானது இப்பயிற்சியாளர்களுக்கு நேர்முகத் தேர்வு ஒன்றினை நடத்தி தகுதியுள்ளவர்களின் பெயர்களை வணிக வங்கிகளுக்கு அனுப்பி நிதி உதவி வழங்குமாறு பரிந்துரை செய்கிறது. இந்நிதிஉதவிரூ.*3,000* முதல் ரூ*10,000* வரை வழங்கப்படுகிறது. கிராம இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் *31.3.1983*ஆம் நாள் வரையில் தொழில் பயிற்சி நிலையங்களில் பயிற்சிபெற்றுள்ள *10,031* பேருள் இதுவரையில் *6,500* பேர் ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டு வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர். இது வரையில் *2,000*க்கும் மேற்பட்டவர்களுக்கு *1* கோடி ரூபாய் வரையில் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

**குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்புத் திட்டம்:**

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க பொதுவாக நிலவும் வேலையில்லாப் பிரச்சினைகளுக்குத்தீர்வுகாணும் முயற்சியில் ஒரு பகுதியாக குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தினை இந்த அரசு ஏற்கனவே ஒரு கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளது. கிராமங்களில் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்கள் குறித்து மாநில அளவில் ஆய்வு நடத்தியதில் சுமார் *15* இலட்சம் பேர் சுயவேலைவாய்ப்பிற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று தெரிய வருகிறது.

அரசு, பொதுத்துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்பு நிறுவனம் அனுப்பியவர்களிலிருந்து வேலைக்கு ஆள் எடுக்கும்போது ஏனையத் தகுதிகள் சமமாயிருப்பின் வேலையில்லாக் குடும்பங்களிலிருந்து வருபவர்களுக்குச் சலுகை கொடுக்கவேண்டுமென்ற அரசு சமீபத்தில் ஆணை வெளியிட்டுள்ளது. வேலை வாய்ப்பில்லாக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதற்கான சான்றிதழை வருவாய்த்துறை வழங்கும்.

இம்மாநிலத்திலுள்ள அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகளையும் படிப்படியாகக் கணக்கீட்டுப் பொறி மயமாக்குவதென அரசு திட்டமிட்டுள்ளது. சென்னை வட்டாரத்திலுள்ள ஐந்து வேலை வாய்ப்பு அலுவலகங்களின் பணிகளைக்கணக்கீட்டுப் பொறிமயமாக்குவதற்காக *1984-85*ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் *6.5* இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்களிலும் அடுத்த ஆண்டுகளில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

**தொழிற்பயிற்சி நிலையங்கள்:**

**இம்மாநிலத்தில் மகளிருக்கென்று தனியாக 3 தொழிற்பயிற்சி நிலையங்கள் இருப்பது உட்பட மொத்தம் 35 தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளன. அவற்றில் பயில்வோரின் எண்ணிக்கை 14,272 பேர். 1982ஆம் ஆண்டில் 8,264 மாணவ, மாணவியர் சேர்க்கப்பட்டிருக்க, 1983ஆம் ஆண்டில் 9,189 மாணவ, மாணவியர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.**

1983 - 84இல் கோயம்புத்தூர், மதுரை, வட சென்னை ஆகிய இடங்களில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் மூன்றாவது முறை மாற்றுப் பணியை அரசு கொண்டு வந்தது. 1984-85ல் சேலத்திலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் மூன்றாவது முறை மாற்றுப்பணியைக் கொண்டு வரத்தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால், மேலும் 200 மாணவ மாணவியர் சேர்த்துக் கொள்ளப் படுவர். இதன் பொருட்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழிற்பயிற்சி நிலையங்களில் நவீன இயந்திரங்கள், சாதனங்களை அமைக்க வேண்டியதன் பொருட்டு, 1984-85ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1961ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டத்தின் கீழ் தொழில் பழகுவோர் பயிற்சி:

இச்சட்டத்தின்படி, தொழில் பழகுவதற்காக மாநிலத்தொழில் பழகுவோர் குழுவால் அனுப்பப்படுகிறவர்களுக்குத் தொழிலதிபர்கள் பயிற்சி அளிக்கவேண்டும். தொழில் பழகும் காலம் தொழிலைப் பொறுத்து 6 மாதத்திலிருந்து 4 ஆண்டுகள் வரை உள்ளது. பயிற்சியில் தேறிய பின்னர் அதற்கான தேசியச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

பல்வேறு தொழிற் பயிற்சி நிறுவனங்களில் தொழில் பழகுதல் தொடர்பான பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.



இவை அருகாமையிலுள்ள தொழிற்சாலைகளில் பயிற்சி பெறும் தொழில் பழகுவோரின் தொழில் நுட்பக்கல்வித் சேவையை நிறைவு செய்கிறது. 1983-84ல் ஓசூரில் தொழில் பழகுதல் தொடர்பான பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டது. இதனையும் சேர்த்து இம்மாநிலத்தில் தற்போது மொத்தம் 9 தொடர்புப் பயிற்சி நிலையங்கள் உள்ளன.

**வாழ்க்கைத் தொழில் உயர்பயிற்சித் திட்டம்:**

இத்திட்டம், ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டம், அனைத்து நாடுகள் தொழிலாளர் நல நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன் சில தொழிற் பயிற்சி நிலையங்களில் செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில், இத்திட்டம், அம்பத்தூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் செயலாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் பணிபுரியும் தொழில் நிறுவனங்கள் இத்திட்டத்தைப் பெரிதும் பாராட்டியுள்ளன. இத்திட்டம், மதுரையிலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் விரைவில் செயலாக்கப்படும்.

தமிழ்நாடு கிராமப்பகுதி இளைஞர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், கிராமப் பகுதி இளைஞர்களுக்குப், பொறியியல் தொழில்களிலும், பொறியியல் சார்ந்த தொழில்களிலும், 28 தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. கடந்த ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்றவர்கள் புதிய திட்டத்தால் பயனடைந்துள்ளனர்.

**அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்:**

தமிழக அரசு நிறுவனமான அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் 1956ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட ஒரு நிறுவனமாக, 1978ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30ஆம் நாளன்று நிறுவப்பட்டது.

இந்நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம், ரூ.


## "தமிழரசு"

## சந்தா விவரம்

தமிழ் இதழ்—

ஓர் ஆண்டிற்கு ரூ. 18/-

அரையாண்டிற்கு ரூ. 9/-

விவரங்களுக்கு :

சர்குலேஷன் மானேஜர்,
" தமிழரசு "
சென்னை - 600 002.


50 இலட்சமாகும். செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 10 இலட்சமாகும். அந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:

பயிற்சி பெற்ற, ஓரளவு பயிற்சி பெற்றவர்களுக்கு அயல் நாடுகளில் வேலை வாங்கித் தருதல்.

அயல்நாடுகளில் பணியாற்றும் பணியாளர்கள் அனுப்பும் வருவாயைத் தக்கவாறு முதலீடு செய்தல்.

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் கூட்டுத் தொழில் நிறுவனங்களை நிறுவுதல்.

இந்தியப் பொருள்களின் ஏற்றுமதியை மேம்படுத்துதல்.

தற்போது, பணியாளர்களுக்கு அயல்நாடுகளில் வேலை வாங்கித் தரும் பணியை இந்நிறுவனம் தீவிரமாகக் கவனித்து வருகிறது. அயல் நாடுகளில் வேலை பெற விரும்பும் பணியாளர்களை இந்நிறுவனம் பதிவு செய்து கொள்கிறது. 31.12.1983ஆம் நாளன்றுள்ளபடி, இந்நிறுவனத்தில் பதிவு செய்து கொண்டுள்ளவர்களின் எண்ணிக்கை 18,069 பேர் ஆகும்.

இந்நிறுவனம் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஈராக், லிபியா தெற்கு ஏமன் ஆகிய நாடுகளுக்கு இதுவரையில் 926 பேரை அனுப்பியுள்ளது. அவர்கள் மூலமாக இந்தியாவிற்கு அந்நியச் செலாவணி வகையில் ஒவ்வோர் ஆண்டும் ரூ. 1.75 கோடி கிடைப்பதாக மதிப்பிடப்படுகிறது.



# சுப்பிரமணிய சிவா வாழ்க்கைக் குறிப்புகள்

தொகுத்தது : ரகமி

## ஜூலை 23 சுப்பிரமணிய சிவா நினைவு நாள்

பெயர்: சுப்பிரமணியன.
பிரபலமான பெயர்கள் : சுப்பிரமணிய சிவம்; ''சிவா''

தந்தை : பி. ஆர். ராஜம் ஐயர். தாயார் : நாகலட்சுமி அம்மாள் (எ) நாகம்மாள்.

பிறந்த இடம் : மதுரை மாவட்டம் 'பெத்தலை கொண்டா' எனப்படும் வத்தலக்குண்டு.

பிறந்த ஆண்டு : 1884 அக்டோபர் 4. (தாரண வருஷம் புரட்டாசி 20-ஆம் நாள்;)

பெற்றோர்களால் இடப்பெற்ற பெயர் : 'சுப்பராமன்' (எ) சுப்பிரமணியன்.

உடன் பிறந்தவர்கள் : வைத்தியநாத சர்மா என்ற ஒரு தம்பி, தைலாம்பாள், ஞானாம் பாள் என்ற இரு சகோதரிகள். (இந்த இரு சகோதரிகளுக்கு முன் ஒரு ஆண் குழந்தை பிறந்து இறந்து விட்டதாம்.)

*1885—1892 :*

குடும்பநிலை காரணமாக குழந்தை சுப்பிர மணியன் தனது 6 வயது வரையில் தன் தாயாருடன் அய்யம்பாளையத்தில் கிராம மணியம் வேலை பார்த்து வந்த பாட்டனார் அனந்தய்யர் வீட்டில் வசித்ததோடு, அங்கு திண்ணைப் பள்ளியில் கல்வி பயின்றார்.

*1893 :*

சுப்பிரமணியனின் 9ஆம் வயதில் உபநயனம் நடந்தது. பின்னர் பெற்றோர்களுடன் மதுரைக்குச் சென்றார்.

*1894—1895:*

மதுரை கட்டுச் செட்டி மண்டபத்திலுள்ள பள்ளியிலும் சேதுபதி உயர்நிலைப் பள்ளி யிலும் கல்வி பயின்றார்.

*1895—1898 :*

குடும்பத்தில் மேலும் வறுமையின் காரண மாக ராஜம் ஐயர் தனது குடும்பத்தோடு திருவனந்தபுரம் சென்று அங்கு 'ஊட்டுப்புரை' மூலம் ஜீவித்தனர். மகன் சுப்பிரமணியன், அங்குள்ள ஹைஸ்கூலில் சேர்க்கப்பட்டார்.

**சுப்பிரமணிய சிவாவின் மூன்று விதமான தோற்றங்கள்**

தாடி மீசையின்றி



ஸ்வதந்தரானந்தர்



தாடி மீசையுடன்



சிவா – தனது குஸ்தித் தோழர்களுடன்



*1899:*

பள்ளியில் படிக்கும்போதே 15 வயதான சுப்பிரமணியனுக்கும் 9 வயதான சிறுமி மீனாட்சிக்கும் திருமணம் நடந்தது.

*1900:* திருவனந்தபுரத்திலிருந்த மாணவன் சுப்பிரமணியன் தனது பள்ளி நண்பர்களுடன் கோயமுத்தூரிலுள்ள டவுன் ஹைஸ்கூலிலும் புதியமைக்கேல் காலேஜிலும் மெட்ரிகுலேஷன் வரை படித்தார். பள்ளியில் மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் வாக்குவாதங்களிலும் வீண் கலாட்டாக்களிலும் சடுபட்டார். முரட்டு சுபாவமுள்ள தோழர்களுடன் நெருங்கிப் பழகிய சுப்பிரமணியனுக்கு முகத்தில் மீசை வைத்துக் கொள்ளும் பழக்கமேற்பட்டது.

**1900 ஜூன்:**

கோடை விடுமுறைக்கு திண்டுக்கல்லிலுள்ள உறவினர்களிடம் சென்ற சுப்பிரமணியன், அங்கு ‘சுப்பையா ஸ்வாமிகள்’ என்ற ஸ்ரீஓத ஸ்வாமிகளை தரிசித்து நெருங்கிப்பழகினார். ஸ்வாமிகள் ஒரு சித்தராவார்.

**1901 :**

படிப்பு முடிந்த சுப்பிரமணியன், உறவினர்கள் சிபாரிசின் பேரில் சிவகாசி போலீஸ் சூபரெண்ட்டெண்ட் ஆபீஸில் மாதம் 10 ரூபாய் சம்பளத்தில் வேலையில் சேர்ந்தார். ஒரே ஒருநாள் உத்தியோகம் பார்த்தார்; அவ்வேலையை ராஜினாமா செய்து விட்டு மீண்டும் திருவனந்தபுரத்திற்கே சென்றார்.

**1902 :**

திருவனந்தபுரம் கொட்டாக்கரை சட்டம்பி நவநீதகிருஷ்ணய்யரிடம் குஸ்தி, சிலம்பம், மற்றும் பல வித்தைகளை நன்கு பழகி ஊரிலுள்ளவர்களை வம்புக்கு இழுத்து அவர்களிடம் குஸ்தி, அடி, உதையில் ஈடுபட்டார்.

**1903 :**

ஸ்ரீசதானந்த ஸ்வாமிகளுடன் பழக்க மேற்பட்டது. ஸ்வாமிகள், சுப்பிரமணியன் என்ற பெயருடன் ‘சிவம்’ என்ற பெயரையும் சேர்த்து ‘சுப்பிரமணிய சிவம்’ என்று கூப்பிட்டு வந்தது; நாளடைவில் இவர் ‘சிவம்’ என்றும் சிவா என்றும் அழைக்கப்பட்டார். சுப்பிரமணிய சிவமும் திருவனந்தபுரத்தில் ‘‘தர்ம பரிபாலன சமாஜம்’’ என்ற ஸ்தாபனத்தை திறுவி, அதன் மூலம் ஆன்மீக விஷயங்களைப் பரப்பினார்.

**1906 : ஏப்ரல் :**

திருவனந்தபுரத்தில் ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த தாகூர்சானின் சொற்பொழிவினால் சிவத்திற்கு நாட்டுப் பற்றும், சுதந்திரப் பற்றும் மேவிட்டது. தமது ‘தர்ம பரிபாலன சமாஜம்’ மூலம் பல இளைஞர்களை ஒன்று சேர்த்து சுதந்தரப் போராட்டத்தில் பெரிதும் ஈடுபட்டார். ஆங்கிலேய ஆட்சியாளர்களை எதிர்த்துப் பிரசங்கங்கள் செய்த இவரை சமஸ்தான அதிகாரிகள் திருவனந்தபுரத்தை விட்டு வெளியேற்றினர்.

**1906** அக்டோபர்:

தூத்துக்குடியில் ‘‘சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி’’ நிறுவப்பட்டு, இதற்கு வ.உ. சிதம்பரம் பிள்ளை செயலாளராக நியமிக்கப்பட்டார்.

**1907 :**

வடஇந்தியாவில் வங்காளப் பிரிவினைத் தகராறு, சுதேசிகள் நாட்டு வெடிகுண்டுகளைத் தயாரித்து ஆங்கிலேயர்கள் மீது வீசியடித்துக் கொல்வது, விபின்சந்திரபால், மற்றும் லோகமான்ய திலகரின் பிரசங்கங்கள் ஆகியவை சிவாவை உற்சாகப்படுத்தி விழிப்படையச் செய்தன. ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக ஊர் ஊராகப் பிரசங்கங்கள் செய்யத் தொடங்கினார்.

**1907 :**

திருநெல்வேலி மாவட்டத்தில் வ.உ. சிதம்பரம் பிள்ளைஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் பிரச்சாரம் செய்த சமயத்தில், தூத்துக்குடியில் சுப்பிரமணிய சிவம், வ.உ.சிதம்பரம் பிள்ளையையும் மகாகவி சுப்பிரமணிய பாரதியையும் சந்தித்தல். சிவாவின் பிரசங்கங்களைக் கேட்ட கவி பாரதி அவரை ''என் வீர சிவாஜியே!'' எனச்சொல்லி, கட்டித்தழுவிப் பாராட்டினார்.

**1907 :**

சிவாவின் தந்தை ராஜம் ஐயர் காலமானார்.

**1907 நவம்பர்:**

சென்னை கடற்கரையில் பிரஸிடென்சி காலேஜுக்கு எதிரில் விபின் சந்திரபால் பிரசங்கம் நிகழ்த்திய இடத்திற்கு சிவா 'திலகர் கட்டம்' எனப் பெயரைச் சூட்டினார்.

**1907 டிசம்பர்:**

சூரத் காங்கிரஸ் மாநாட்டில் லோகமான்ய திலகரின் தலைமையிலான தீர்மானங்களைச் செயல்படுத்த வ. உ. சிதம்பரம் பிள்ளை, மகாகவி பாரதியார் மற்றும் பலருடன் சிவாவும் பெரிதும் பாடுபட்டார்.

**1908 ஜனவரி 9:**

திருநெல்வேலிப் பகுதிகளில் 'சுதேசி ஆதரவு' பற்றிப் பிரசாரங்கள் செய்தார்.

**ஜனவரி 12:**

சுயராஜ்ஜியம் அடைவதற்கான பிரசாரங்களைச் செய்ததோடு அதற்கான தொண்டர்கள் படையை அமைத்து, அவர்களுக்குப் பயிற்சியும் தந்தார்.

**ஜனவரி 13 :**

அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், தென்காசி, திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் சுதேசியம் பற்றிப் பிரசாரம் செய்தார்.

## நோய்க்குச் சிகிச்சை

1922-ல் சிறையில் சிவத்திற்கு உடல் நிலை சற்று அதிகமாக இருக்கவே, சிறைச்சாலை வைத்திய அதிகாரிகள் சற்றுக் கவலை கொண்டு, இவரை விடுதலை செய்ய வேண்டும் என அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்தனர். சிவம் ஜனவரி 12-ஆம் தேதி விடுதலை பெற்று, சில நாட்கள் சென்னையில் தங்கினார். சென்னையில் ராயப்பேட்டை, பைகிராப்ட்ஸ் ரோட்டிலுள்ள டாக்டர் வி. ஆர். சுந்தரம் அவர்களிடம் மருந்து சாப்பிட்டு வந்தார்.

ஆதாரம் : ரா. ஸ்ரீநிவாஸவரதன் எழுதிய ''சுப்ரமணிய சிவம்'' என்னும் நூல்.

பிப்ரவரி.

சிவம், தமது வங்காள நண்பரும் சிட்டகாங்கைச் சேர்ந்தவருமான சந்திர வார்க்கர் என்ற தலைவருடன் தூத்துக்குடிக் கடற்கரையில் நிகழ்த்திய பிரசங்கங்களில் 'வெள்ளையனே வெளியேறு!' என்பது குறிப்பிடத்தக்கது.

**பிப்ரவரி 17 :**

தூத்துக்குடிக் கடற்கரையில் வ. உ. சி. யும் சிவாவும் இணைந்து 'சுயராஜ்ய சங்கம்' ஏற்படுத்தி, சுதேசி இயக்கத்தைதீவிரப்படுத்தினர். இதில் குருநாதய்யரும் இடம்பெற்றிருந்தார்.

**பிப்ரவரி 19, 21, 23:**

சுயராஜ்ய சங்கத்திற்கு ஆங்கிலேயர்களால் ஏற்படும் ஆபத்துக்களைத் தடுத்து முறியடிக்கத்தயாராக இருக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி சிவா பிரசங்கங்கள் செய்தார்.

**பிப்ரவரி 24, 25, 26:**

லாலாலஜ்பத்ராய், அஜித்சிங் இவர்கள் மீது ஆங்கிலேய அரசு அநீதியாக நடந்து கொண்டிருப்பதை வ. உ. சி. யும் சிவாவும் தீவிரமாகக் கண்டித்தனர்.

**பிப்ரவரி 28:**

தூத்துக்குடியில் ஆங்கிலேயர்கள் நடத்தி வந்த ''கோரல் காட்டன் மில்ஸ்'' தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது, தொழிலாளர்களின் கூட்டத்தில் வ. உ. சி. யும், சிவாவும் பேசினர். இந்தக் கூட்டங்களுக்கு ஆங்கிலேயர்கள் தடை உத்தரவு போட்டனர். தடையை மீறி ஒரு கூட்டம் தூத்துக்குடிக் கடற்கரையிலும் மற்றொரு கூட்டம் தனியார் வீடு ஒன்றிலும் ரகசியமாக நடந்தன. சிவம் இரண்டிலும் கலந்து கொண்டார்.

**பிப்ரவரி 29:**

திருநெல்வேலி ஜில்லா மாஜிஸ்டிரேட் சுமார் 30 பேர்கள் அடங்கிய ஆங்கிலேய இந்தியப் பிரமுகர்களிடம் நடத்திய பேச்சு வார்த்தையில் ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்து நடப்பவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கைகள் எடுக்கப் போவதைப் பற்றி மாஜிஸ்டிரேட் எச்சரிக்கை விடுத்ததை எதிர்த்து, வ. உ. சி. யும் சிவாவும் ஆட்சேபணை செய்தனர்.

**மார்ச்சு 1, 3 :**

தூத்துக்குடிக்கடற்கரையில் வ. உ. சி யும், சிவாவும் சுயராஜ்ஜியம் பற்றி நீண்ட பிரசங்கங்கள் செய்த பின்னர் மூவாயிரம் பேர்களுக்கு மேல் கூடியிருந்த ஜனத்திரளில் ''உங்களுக்குத் தேவை சுயராஜ்ஜியமா ஆங்கிலேய ஆட்சியா '' என்றதற்கு, மக்கள் ''சுயராஜ்ஜியமே தேவை!'' எனக் குரல் கொடுத்தனர்.

மார்ச்சு 4, 5, 6, 7:

தூத்துக்குடியில் நடந்த கூட்டத்தில் சிவா, மார்ச்சு 9-ஆம் தேதி விபின் சந்திரபால் சிறையிலிருந்து விடுதலையாகி வரும் நாளை வெகு விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்ததோடு, 'சுயராஜ்ஜியம்' என்ற பெயரில் ஒரு பத்திரிகையையும் வெளியிட ஏற்பாடு செய்தார்.

மார்ச்சு 8:

மார்ச்சு 9-ந் தேதி நடக்க இருக்கும் ஊர்வலம் மற்றும்பொதுக்கூட்டத்திற்கு தடை உத்தரவு போடப்பட்டு அதற்கான உத்தரவு வ. உ.சி. சிவா, இருவரிடமும் பட்டுவாடா செய்யப் பட்டது.

மார்ச்சு 9:

திருநெல்வேலி கோர்ட்டில் வ. உ. சி. யும், சிவாவும் ஆஜரானார்கள்.

மார்ச்சு 10:

மறுபடியும் திருநெல்வேலி கோர்ட்டில் வ.உ.சி யும் சிவாவும் ஆஜரானார்கள்.

மார்ச்சு 12:

திருநெல்வேலிஜில்லா மாஜிஸ்டிரேட் விஞ்ச் துரை முன்பு வ. உ. சி. யும் சிவாவும் ஆஜராயினர். ''பரிபூர்ண சுயராஜ்ஜியம் நமது பிறப்புரிமை! அதனை அடைந்தே தீருவோம்! வந்தே மாதரம்!'' என கோஷமிட்டதை அடுத்து இருவரும் கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டைச் சிறைக்கு அனுப்பப் பட்டனர்.

மார்ச்சு 13:

வ. உ. சி., சிவா, இருவரையும் கைது செய்ததனால் திருநெல்வேலி முழுவதும் கலவரம் மூண்டது. இதனை அடக்க போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 4 பேர்கள் தலத்திலேயே மாண்டனர்.

மார்ச்சு 15 முதல் ஜூன் 30 வரை:
வ. உ. சி., சிவா இவர்கள் மீது வழக்குகள் போடப்பட்டன. விசாரணை நடந்தது.

ஜூலை 7:

நீதிபதி பின்ஹோ வ. உ. சிதம்பரம்பிள்ளைக்கு தீவாந்தர தண்டனையும், சுப்பிரமணிய சிவாவிற்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் விதித்துத் தீர்ப்புக்கூறினார்.

நவம்பர் 4:

சென்னை உயர்நீதிமன்றத்தில் தண்டனை குறைப்பு.

1908—1912 நவம்பர் 2:

சுப்பிரமணிய சிவம் சிறைத்தண்டனையை அனுபவித்த பின்னர் விடுதலையானார்.

**சிவாவின் சீடர்கள்**

(1) சிவகிரிசங்கரன் (2) 'கோட்டை' ரங்கநாதய்யங்கார் (எ) ரங்காச்சாரி (3) மதுரை சுந்தரபாரதி (4) திருக்கோவிலூர் குமாரசாமி (5) 'கல்கி' சதாசிவம் (6) எவரெஸ்ட் சுந்தரம் (7) மதுரை தியாகராஜசிவம் (8) கிருஷ்ணகுந்து (9) கே. ஆர். சீனிவாச ஆழ்வார். (10) மதுரை பத்மாசனி அம்மாள் (11) மதுரை சிதம்பர பாரதி (12) சங்கரன் கோவில் ந. சோமையாஜுலு (13) மதுரை ஸ்ரீநிவாச வரதய்யங்கார்.

1912 நவம்பர்:

சிறையிலிருந்து வெளிவந்த சிவம், மனைவி மீனாட்சியுடன் சென்னை மயிலாப்பூரில் தங்கியிருந்தார்.

1913 ஏப்ரல்:

சென்னையில் சிவம் ''ஞானபாநு'' என்ற மாதப் பத்திரிகையைத் தொடங்கி ஆசிரியராக இருந்தார். மனைவி மீனாட்சி அம்மாள் நிர்வாகியாக இருந்தார்.

1915 மே 15: சிவாவின் மனைவி மீனாட்சி அம்மாள் காலமானார்.

1916:

சிவா, ''பிரபஞ்சமித்திரன்'' என்ற வாரப் பத்திரிகை தொடங்கி, அதில் 'நாரதர்' என்ற புனை பெயரில் கட்டுரைகளை எழுதி வந்தார்.

1919:

'இந்திய தேசாந்திரி' என்ற வாரப்பத்திரிகையைத் தொடங்கிய சிவத்தின் உடல், நோய் வாய்ப்பட்டதனால் சென்னை திருவல்லிக் கேணியில் தங்கினார்.

1920:

சென்னையில் டிராம்வே தொழிலாளர்கள் நடத்திய வேலை நிறுத்தத்தில் சிவம் தொழிலாளர்களுக்காக ஓயாமல் உழைத்தார். மதுரை 'ஹார்வி மில்' வேலை நிறுத்தத்தில் பிரபல தொழிற்சங்கத் தலைவர்களான ஸ்ரீஜார்ஜ், ஜோஸப் வேண்டுகோளின்படி சில நாட்கள் மதுரையில் தங்கினார்.

1920 ஆகஸ்டு:

கல்கத்தாவில் லாலா லஜ்பதிராயின் தலைமையில் நடந்த ஒத்துழையாமை இயக்கம் சம்பந்தமாக நடைபெற்ற விசேஷ காங்கிரஸ் மகாசபைக்கு பிரதிநிதியாகச்சென்றுவந்தார். ஆம்பூரில் நடைபெற்ற 'கிலாபத்' மாநாடு, விழுப்புரம்அரசியல் மாநாடு ஆகியவற்றுக்குச் சென்று உரையாற்றினார். தவிர புதுக் கோட்டை சமஸ்தானத்திற்கெதிராக அங்கு டவுன் ஹாலில் நடைபெற்ற கூட்டத்தில் பேசினார்.

**1921 ஜனவரி 14 :**

சந்நியாசியைப் போல காஷாய உடையைத் தரித்த சிவம் அன்று முதல் ''ஸ்வதந்திரானந்தர்'' என்ற பெயரையும் பூண்டார்.

**1921 அக்டோபர் 28:**

ராஜ நிந்தனை காரணத்திற்காக சிவம் இரண்டாம் முறையாகக்கைதாகி மதுரை ஜில்லா நீதிபதி முன் ஆஜர் செய்யப்பட்டார்.

**1921 நவம்பர் 17 முதல் 1922 ஜனவரி 12வரை:**

வழக்கில் விசாரணைகள் நடந்து 2 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், ரூ. 500- அபராதமும் விதிக்கப்பட்டன. அபராதம் செலுத்தத்தவறினால் மேலும் 6 மாதங்கள் கடுங்காவல் தண்டனை எனத்தீர்ப்புக் கூறப்பட்டது. பின்னர் ''சிவம்' உறுதிமொழி எழுதிக்கொடுத்ததின் பேரிலும், அவருடைய உடல் நிலையின் காரணமாகவும் எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்பட்டார்.

**1922 ஜூன்**

காசியில் சிவாவின் தாயார் நாகலட்சுமி அம்மாள் காலமானார்.

**1922 நவம்பர் 27:**

'சிவம்' மூன்றாம் முறையாகக் கைதாகி ஜாமீனில் விடுதலை பெற்றார்.

**1923**

சாத்தூரில் நடைபெற்ற அரசியல் மாநாட்டில் கலந்து கொண்டார்.

**1923 ஜூன் 22:**

பாப்பாரப்பட்டியில் சிவம் பாரதமாதாகோவிலுக்கு அஸ்திவாரக்கல்லைதேசபந்து சித்தரஞ்சன் தாஸ் தலைமையில் நாட்டினார்.

**1923 செப்டம்பர்:**

சேலத்தில் நடைபெற்ற 29வது தமிழ்மாகாண மாநாட்டில் கலந்து கொண்டார் சிவம்!

**1923 அக்டோபர்:**

'சிவா' கிருஷ்ணகிரி,பாப்பாரப்பட்டி, கோயம்புத்தூர், மற்றும் பல இடங்களுக்குச் சென்று சுதேசிய பிரசாரத்தில் பெரிதும் ஈடுபட்டார்.



சிவாவின் சமாதி

**1924 ஜனவரி:**

சிவாவின் உடலில் வந்துள்ள தீராத வியாதியைக் காரணம் காட்டி அவரை ரயிலில் பிரயாணம் செய்யக் கூடாதென்று தடைவிதித்து அதற்கான உத்தரவையும் அவரிடம் அளித்தனர்.

ஜூலை

திருவல்லிக்கேணி கடற்கரையில் அவர் நிகழ்த்திய இரு பிரசங்கங்களில் ஆட்சேபகரமான விஷயங்கள் கலந்திருப்பதாகக்காரணம் காட்டி சிவாவின் மீது அரசாங்கம் வழக்குத்தொடர்ந்தது.

செப்டம்பர் 11:

திருவல்லிக்கேணியில் 'சிவம்' தான் தங்கியிருந்த இருசப்ப கிராமணிதெருவிற்கு அருகாமையிலுள்ள விளையாட்டு மைதானத்தில் ''கவி பாரதியாரின் நினைவு நாளை'' வெகு சிறப்பாகக் கொண்டாடினார்.

அக்டோபர் - நவம்பர்

சென்னை எழும்பூர் கோர்ட்டில் சிவம் ''போல்ஸியம்'' என்பதைப்பற்றி விவாதித்தார். மீண்டும் கைதாகி ஜாமீனில் வந்து வழக்காடினார்.

**1925 ஏப்ரல்:**

சிவம் ஈரோடு, பவானி, உடுமலைப்பேட்டை, தாராபுரம், பழனி, திண்டுக்கல், சோழவந்தான் மார்க்கமாக மாட்டுவண்டிகளில் பிரயாணம் செய்து மதுரையை வந்தடைந்தார். இச்சமயம் அவருடைய உடல்நிலை சரியில்லாமல் அவதிப்பட்டார்.

**1925 மே:**

மதுரையில் ''இந்தியாவின் சுதந்தர யுத்த தினம்'' கொண்டாடினார்.

**1925 ஜூலை 22:**

சிவாவின் உடல்நிலை மிக மோசமாகிவிடவே மதுரையிலிருந்து, பாப்பாரப்பட்டியைஅடுத்த பாரத புரத்திற்குத் தமது ஆப்த நண்பர் திரு. சுந்தரபாரதியுடன் வந்து சேர்ந்தார்.

ஜூலை 23:

பாரத நாட்டின் சுதந்தரத்திற்காகத்தன்னையும் தன் வாழ்நாளையும் அர்ப்பணித்துக் கொண்ட சுப்பிரமணியசிவம் 1925 ஜூலை 23 வியாழக்கிழமை விடியற்காலை 5 மணிக்கு மறைவெய்தினார். அப்போது அவருக்கு வயது 41.

ஆதாரங்கள்:

சுதேசமித்திரன்; ஹிந்து; தினமணி; சிவா குடும்பத்தைச் சேர்ந்த திரு.சபாபதி சர்மாவின் குறிப்புகள்; இந்திய-சோவியத் கலாச்சாரக் கழகம் அரூர், வெளியிட்டுள்ள ச.ரா. இரமாநந்தன் தொகுத்த ''சிவாவின் கடிதங்கள்'', ஆவணக்காப்பக வெளியீடான, 'Tinnevelly Riots Conspiracy And Ashe Murder' நூல் குறிப்புகள்).




## பொது நம்பகங்களும் அறக்கட்டளைகளும்

ஆசிரியர்: சோ. சேசாசலம், பி.ஏ., பி. எல்.

வெளியீடு : சபாநாயகன் பதிப்பகம்

கிடைக்குமிடம்: புனிதா இல்லம், சி. 413, பெரியார் நகர் சென்னை-600 082.

விலை ரூ. 7, பக்கம் : 176

'அறஞ்செய விரும்பு' என்று ஔவைப் பாட்டி அறிவுரை பகர்ந்த காலத்திற்கு முன்பிருந்தே தர்ம கைங்கர்யங்களில் ஈடுபடும் பழக்கம் - பண்பு தமிழகத்தில் இருந்து வருகிறது. அகில இந்திய அளவில் ஆய்ந்து பார்த்தால்-வேதகாலத்திலேயே அறக்கொடைகள் இருந்து வந்துள்ளன. பிறருக்கு உதவ வேண்டும் என்ற பெருநோக்கத்தாலும், பாவத்தைப் போக்க வேண்டும் என்ற பயத்தாலும் அறக்கொடைகள்-அறக்கட்டளைகள் உருவாக்கப் பட்டன.

அறக்கட்டளைகளும் பொது நம்பகங்களும் எவ்வாறு உருவாகின என்பதை ஆய்வு முறையிலும் - அவற்றைப் பாதுகாப்பதற்குரிய வழி முறைகள் - சட்ட ரீதியான அனுமதிகள் ஆகியவை குறித்தும் விரிவாக எளிய இனிய நடையில் இந்நூலாசிரியர் எழுதியிருக்கிறார்.

'இந்து சமயம் மற்றும் அற நம்பகங்களைப் பற்றிய முழுமையான ஒரு சட்டத் தொகுப்பை-இதுவரை இந்திய நாடாளுமன்றம் மேற்கொள்ளவில்லை' என்று நூலாசிரியர் தெரிவித்திருப்பதிலிருந்து-தான் எடுத்துக்கொண்ட பொருளைக் குறித்து - மிக நுட்பமாக அவர் ஆய்வு செய்துள்ளமை புலப்படுகிறது.

மடங்களும் மகந்த்களும் செயல்படுவதற்குரிய விதிமுறைகள், நம்பகங்கள் அமல்படுத்தப்படும் முறைகள் ஆகியவை குறித்தும் விரிவாகத் தெரிவித்திருக்கிறார்.

இந்து சமயக் கட்டளைகள் பற்றி மட்டுமின்றி முகம்மதிய சமயக் கட்டளைகள் பற்றியும் எழுதியுள்ள நூலாசிரியர், கட்டளைகளுக்கும் இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கும் உள்ள தொடர்பையும் - தொடர்பில்லா நிலையையும் படிப்போர் மனத்தில் பதியும்படி தெரிவித்திருக்கிறார்.

நூலாசிரியர் ஒரு வழக்கறிஞரின் நெறி நின்று பல்வேறு மாநில நீதிமன்றங்களில் நடைபெற்ற வழக்குகளைச் சான்று காண்பித்திருப்பது சுவையாக உள்ளது.

சட்டக் கல்வியைத் தமிழில் படிக்க விரும்பும் ஆர்வலர்களுக்கு இந்நூல் நல்வழி காட்டியாக விளங்குகிறது என்று சொல்லலாம்.

—எஸ். எஸ். சுந்தரம்

## அண்ணாவின் கதை இலக்கியம்

ஆசிரியர்: டாக்டர் இரா.சேது

வெளியீடு: பூம்புகார் பிரசுரம், 63 பிராட்வே, சென்னை-108

விலை : ரூ.15•90 பக்கம் : 336

"20ஆம் நூற்றாண்டுச் சமுதாய மறுமலர்ச்சிக்கு அண்ணாத்துரையின் சிறுகதை, புதினங்களின் கொடை'' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து, டாக்டர் பட்டம் பெற்ற இந்நூலாசிரியர் தமது ஆய்வு நூலை 'அண்ணாவின் கதை இலக்கியம்' என்ற தலைப்பில் நூலாக வெளிவரச் செய்திருக்கிறார்.

அண்ணா அவர்கள் சிறந்த சிறுகதை ஆசிரியர் - புதின ஆசிரியர் என்பதும் - சமுதாய சீர்திருத்த நோக்கத்தில் தமது எழுத்தோவியங்களை உருவாக்கினார் என்பதும் உலகறிந்த செய்திகள். ஆனால் அவை ஆய்வு முறையில் -சான்றுகளுடன் தெரிவிக்கப்படும்போது நமக்கு பிரமிப்பு ஏற்படுகிறது.

சிறுகதைகளிலும், புதினங்களிலும் அண்ணா தெரிவித்துள்ள சமுதாய சீர்திருத்தக் கருத்துக்கள் - பெண் உரிமை பேணப்படல் வேண்டும் என்ற கொள்கை ஆகியவற்றை மிக நுட்பமாக ஆய்வு செய்து தெரிவிக்கிறார் நூலாசிரியர்.

கலை கலைக்காகவே என்று பொதுவாகச் சிலர் சொல்வதுண்டு. ஆனால் கலை மக்களுக்காக என்ற புதிய கொள்கை அண்மைக்காலத்தில் ஏற்பட்டுள்ளது. அதைப் போலவே கதை - பொழுது போக்கிற்காக என்று சிலர் கருதுவதுண்டு; ஆனால் கதை - போதனை புரிவதற்காக என்பதைத்தான் உலகு ஒப்புக் கொள்கிறது. சீர்திருத்த நோக்கம் இல்லாத கதைகளில் கூட - அன்பின் வலிமை - நட்பின் உயர்வு போன்ற ஏதேனும் ஒரு கொள்கை - நீதியாகச் சொல்லப்படுவதுண்டு. எனவே கதை கதைக்காக மட்டுமல்ல -போதனைக்காக! இந்தக் கொள்கை அண்ணா அவர்களின் நெஞ்சில் வேரூன்றியுள்ள செய்தியை ஆய்வு முறையில் நூலாசிரியர் தெரிவித்துள்ளார்.

கதைகளின் உட்பொருளில் மட்டுமல்ல - தலைப்புகளில் கூட அண்ணா பல்வேறு உத்திகளைப் புகுத்தியுள்ளார் என்பதை நூலாசிரியர் தெளிவாக்கியிருக்கிறார். பாத்திரங்களுக்கு அவர் சூட்டும் பெயர்களின் பொருத்தம் குறித்தும் வியந்து போற்றியிருக்கிறார்.

சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களை அடிப்படையாக வைத்து அண்ணா கதைகளை எழுதியமைக்குரிய காரணங்களையும் பின்புலங்களையும் ஆய்வு செய்யமுற்பட்ட நூலாசிரியர் - தமிழகத்தின் இரு நூற்றாண்டு வரலாற்றைப் படிப்போரின் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார்.

பல மொழிகளில் தோன்றிய மறுமலர்ச்சிகளையும் தமிழ்இலக்

கியத்தில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியையும் ஒப்பியல் முறையில் எடுத்துக் காட்டி, அண்ணா அவர்களால்தான் அந்த மறுமலர்ச்சி தமிழ் இலக்கியத்தில் ஏற்பட்டது என்பதைச் சான்றுகளுடன் நிறுவியுள்ளார்.

அண்ணா - கதையை எப்படித் தொடங்குகிறார், எப்படி முடிக்கிறார் என்பது குறித்தும்சொல்லியுள்ள ஆய்வுரை - படிப்போர்க்கு இன்பம் பயக்கிறது. அண்ணாவின் கதைகளில் 60 விழுக்காடு பின்னோக்கு முறையிலே அமைந்துள்ளன என்பதையும் விளக்கியுள்ளார். அண்ணாவின் எழுத்து நடை, காலத்திற்கேற்ப மாறி வந்துள்ள செய்தியைப் படம் பிடித்துக் காட்டுகிறார். மொத்தத்தில் அண்ணாவின் கதை ஆற்றலையே ஓர் ஓவியமாக்கியுள்ளார் நூலாசிரியர் என்று கூறலாம்.

அண்ணாவின் கதைகள், கட்டுரைகள். மேடைப் பேச்சு ஆகியவற்றிலிருந்து பற்பல நறுக்குகளை ஆங்காங்கே கொடுத்திருக்கும் நூலாசிரியர், பற்பல நூலாசிரியர்களிடமிருந்து மேற்கோள்களைக் காட்டியிருப்பது பாராட்டுக்குரியது.

பின் இணைப்பு என்ற பகுதியில் அண்ணாவின் சிறுகதைகள் புதினங்கள் - நூல்கள் ஆகியவற்றின் பட்டியல்களை விரிவாகத் தொகுத்து வெளியிட்டிருப்பது பயனுள்ள - பாராட்டுக்குரிய பணியாகத் திகழ்கிறது. நூலாசிரியரின் உழைப்பு - பக்கத்துக்குப் பக்கம் காட்சி தருகிறது. இனிய நடை நூலுக்கு மேலும் சிறப்பூட்டுகிறது.

## சொர்க்கத்தில் இயேசுவின் சீடர்கள் (ஒரு பேட்டி)

ஆசிரியர் : மா. சேஷையா
வெளியீடு : மாணிக்கம் பதிப்பகம்,
73, மந்தைவெளித் தெரு,
சென்னை-600 028
விலை ரூ. 20 பக்கம் 216

இயேசுவின் சீடர்கள் பன்னிருவரில் ஒருவரை நீக்கி ஏனைய பதினொருவரின் வாழ்க்கை வரலாற்றை இந்நூல் தெரிவிக்கிறது.

வாழ்க்கை வரலாற்றைக்கட்டுரையாக வழங்கும் பாணியிலிருந்து விலகி பேட்டி முறையில் எழுதியிருக்கும் புதிய உத்தி, சுவை நல்குகிறது.

### தமிழ்நாட்டில் 83 புதிய தொழில் நிறுவனங்கள்

**1984** மே மாதத்தில் தமிழ்நாட்டில் பொதுத்துறை நிறுவனங்கள் 11, தனியார் நிறுவனங்கள் 72 தொழில் தொடங்குவதற்குப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றின் மூலதனங்கள் முறையே ரூ. 363 லட்சம், ரூ. 686.51 லட்சம் ஆகும். பொதுத்துறை நிறுவனங்களில் ஒன்று ஏறக்குறைய ரூ 150 லட்சம் முதலீட்டில் தொடங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

-இந்தியப் பத்திரிகைத் தகவல் அலுவலகம்

பல்வேறு அரிய தகவல்களையும் செய்திகளையும் ஆங்காங்கே உரையாடலின் வாயிலாகத் தெரிவித்திருக்கிறார் நூலாசிரியர். இயேசுவின் சீடர் பன்னிருவரில் மூன்று ஜோடிப்பேர் சகோதரர்கள் என்னும் செய்தி இதுவரை சாதாரணமாகப் பலரும் அறிந்திராத செய்தி ஆகும்.

பைபிள் என்னும் வேத நூலின் கருத்துக்களையும், இயேசுவின் பொன் மொழிகளையும் இந்நூலில் பற்பல இடங்களில் வழங்கியிருக்கிறார் நூலாசிரியர். கிறிஸ்துவ சமயத்தைச் சாராதவர்களும் விரும்பிப் படிக்கும் வகையில் மதப்பிரச்சாரமின்றி அருட் செயல்கள் குறித்தே இந்நூல் எடுத்தோதுகிறது. இனிய எளிய நடை நூலின் தனிச் சிறப்பாகும், வரலாற்று நிகழ்ச்சிகளையும் புராணம் எனக் கருதப்படும் பழைய நிகழ்ச்சிகளையும் படிப்போர் மனத்தில் பதியும் படி எழுதியிருக்கும் நூலாசிரியர் பாராட்டுக்குரியவர்.

— தமிழ்ப்பித்தன்

## மலரும் பூக்கள்

ஆசிரியர் : ரா. பொன்ராசன்
வெளியீடு : பாவலர் இல்லம்,
குன்றக்குடி-623 206
விலை : ரூ. 5. பக்கம் 68

நாளைய தலைமுறைகளான இன்றைய குழந்தைகள் ஆடிப் பாடி மகிழ்வதற்கேற்ற எளிய இனிய பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

முதல் எதிரி சோம்பல், அதை மறந்து விடாதே-அறிவிருப்போன் உழைப்பதற்குப் பயப்படமாட்டான்-எந்தச் சூழல் இருந்த போதும் சிறந்த மனிதர் தங்கள் இதயத்தாலே உயர்ந்து நிற்பர் என்பன போன்ற கருத்துக்கள் ஒவ்வொரு பாட்டிலும் உள்ளன.

மொத்தம் 42 பாடல்கள் உள்ளன. எல்லாப் பாடல்களுமே கவிஞரின் குழந்தை உள்ளத்தைப் பிரதிபலிக்கின்றன. பள்ளிக் குழந்தைகள் படித்துப் பயன்பெற வேண்டிய நல்லநூல், இந்த மலரும் பூக்கள்.

## ஒன்று நீ ஒன்றே ஒன்று

ஆசிரியர் : கவிஞர்
முருகுவண்ணன்,
வெளியீடு : தமிழ் நெறி மன்றம்
8, துளசிங்க முதலி தெரு,
சென்னை-600 011,
விலை : ரூ 2 பக்கம் : 28

ஒன்று எனத் தொடங்கி ஒன்றே என முடியும் இந்நூலில், 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற திருமூலர் வாக்கினை நினைவுபடுத்தும் வண்ணம் 'ஒன்று நீ ஒன்றே ஒன்று' என்று தத்துவக் கருத்துக்களை இலைமறை காய் போன்று இனிய நடையில் எடுத்தியம்புகிறார், கவிஞர்.

இந்நூலுக்குப் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், திரு நா.நா. முருகவேள் மற்றும் பல அறிஞர் பெருமக்கள் அணிந்துரை நல்கியுள்ளனர்.

— பி.வி.ஜி.

### சுப்பிரமணிய சிவம் எழுதிய நூல்கள்

- சச்சிதானந்த சிவம்
- மோக்ஷ சாதன ரஹஸ்யம்
- ராமாநுஜ விஜயம்
- சங்கர விஜயம்
- ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் சரித்திரமும் உபதேசங்களும்
- விவேகானந்தரின் சரித்திரமும் உபதேசங்களும்
- நெட்டாஜி வீர ரத்தின பாஜிப்பிரபு
- அருள் மொழிகள்
- வேதாந்த ரஹஸ்யம்
- பகவத் கீதா சங்கிரகம்

# நுழைவுத் தேர்வு முறையே சிறந்தது!

**ஆ. சட்டநாதன்**
**பிற்பட்டோர் நலக் குழுவின் முன்னாள் தலைவர்**

நுழைவுத் தேர்வு, நகர்ப்பகுதிகளில் வாழும் மாணவர்களுக்கும் உயர் சாதி மாணவர்களுக்கும் மட்டுமே பயன்ளிக்கும்; கிராமப் பகுதிகளில் வாழும் மாணவர்களுக்கும், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும் பயனளிக்காது என்று கூறப்படுகிறது. மாதிரி (Sample Survey) அடிப்படையில் உரிய முறையில், மாணவர்களின் கருத்தைக் கேட்டறிந்தால் கூட மேற்கூறிய இக்கண்டனம் தவறான வாதமாகும் என்பது வெளிப்படையாகத் தெரியவரும்.

ஐம்பது ஆண்டுகளாகத் தேர்வுகளின் வாயிலாகவும் நேர்முகத் தேர்வுகளின் வாயிலாகவும் மாணவர்களைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் பெறப்பட்ட அனுபவத்தைக் கொண்டு பார்த்தால், நன்முறையில் நடத்தப்படும் தேர்வு முறையானது, மாணவர்களின் திறமையைச் சோதிப்பதற்கு, நேர்முகத் தேர்வு முறையைக் காட்டிலும் சிறந்த முறையாகும் என்று நான் கூறுவேன்.

நேர்முகத் தேர்வில், தேர்வு நடத்துபவர்கள் மாணவர்களின் திறனைப் பல கோணங்களிலிருந்தும் மதிப்பிடுகின்றனர். தேர்வு நடத்துவோரில் ஒருவர் செய்த மதிப்பீட்டிற்கும், பிறிதொருவர் செய்தமதிப்பீட்டிற்கும் இடையே 50%முதல் 80% வரை மதிப்பெண்களில் வேறுபாடு காணப்படுகிறது. இத்தகைய இனங்களில் ஒரு நியாயமான முறையைக் கடைப்பிடிப்பது, நாம் கருதுவதற்கு மாறாக மாணவர்களுக்கு அதிக அளவில் பாதகம் விளைவிக்கலாம்.

நேர்முகத் தேர்வு நடத்துவோர் குழுவில் அங்கம் வகிப்போரைத் தனித்தனியாகவும் மொத்தமாகவும் பணம், சலுகை, அரசியல் செல்வாக்கு, சொந்த சாதி உணர்வு ஆகியவற்றால் ஈர்த்து விடலாம். நேர்முகத் தேர்வில் அளிக்கப்படும் மதிப்பெண்கள் ஒருசில மாணவர்களுக்கு உயர்த்தப்படுகின்றன என்பதும் எழுத்துத் தேர்வில் நன்முறையில் எழுதிய, நன்முறையில் நடத்தப்படும் நேர்முகத் தேர்வில் நன்முறையில் பதில் அளித்த மாணவர்களுக்குங்கூட பாதகம் விளையும் அளவிற்கு ஒரு சில மாணவர்களுக்கு ஆதரவு காட்டப்பட்டுள்ளது என்பதும் பொதுவான கண்டனமாகும்.

நேர்முகத் தேர்வுக் குழுவில் இடம் பெறும் உறுப்பினர்களில் ஒருவர் அல்லது இருவர் ஒரு மாணவருக்கு ஆதரவு அளிப்பது என்று தீர்மானித்திருந்தால் அம்மாணவருக்கு அதிக மதிப்பெண்களை அளிக்கலாம். அல்லது ஒரு மாணவருக்கு ஆதரவு காட்டக் கூடாது என்று தீர்மானித்துவிட்டால் தொடக்கத்திலேயே கடினமான கேள்விகள் ஒன்றிரண்டைக் கேட்பதன் மூலம் அம்மாணவரை அதைரியப்படுத்தி அவருக்கு அதிக மதிப்பெண்கள் அளிக்காமல் இருக்கலாம் என்பதை என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து உறுதியாகக் கூறுகிறேன்.

பொதுவாக கிராமப் பகுதிகளைச் சேர்ந்த அல்லது பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு நேர்முகத் தேர்வின் போது பல இடர்ப்பாடுகள் உள்ளன என்பதைக் கருதிப் பார்க்க வேண்டும். இம்மாணவர்கள், நகர்ப்பகுதிகளையும் உயர் சாதியையும் சேர்ந்த மாணவர்களைப் போன்று தங்களுடைய தோற்றம் (Personality) முதலிய தனிப்பட்ட இயல்புகளை வளர்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள். அம்மாணவர்களின் பொது அறிவு சராசரியாகக்குறைவாகவே இருக்கும். அம்மாணவர்கள் தங்களது கருத்தை வெளியிடும், அதிலும் குறிப்பாக ஆங்கிலத்தில் வெளியிடும் திறன் மிகவும் குறைவே. தொழில் நுட்பப் பாடங்களில் கூட இம்மாணவர்களின் அறிவு, புத்தகங்களின் வாயிலாகப் பெற்ற அறிவுதான். இவர்கள் நேரடியாகக் கவனிப்பதன் மூலமும் அனுபவத்தின் மூலமும் அறிவு பெற அதிக வாய்ப்பில்லை. சாதாரணமாக இம்மாணவர்கள் ஏனைய மாணவர்களைக் காட்டிலும் மிகவும் பயந்த சுபாவம் உடையவர்களாவர். இக்குறைபாடுகளைத் தேர்வு நடத்துவோர் கருணையுடன் அணுகவேண்டுமென்று எதிர்பார்ப்பது முறையானதுமல்ல; நேர்மையானதுமல்ல; இதுதான் ஊழலுக்கு வழி வகுக்கிறது.

சரியான விடையைக் கண்டறியும் முறை (Objective Type) யிலான தேர்வுத் தாள்கள்முக்கியமாக மேல்நிலைப்பள்ளித் தேர்வுக்குரிய பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம். ஆனால், கிராமப் பகுதிகளைச் சேர்ந்த, பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களிடையே காணப்படும் குறையை நிவர்த்தி செய்ய கிராம, உயிரியல், தொழில்நுட்பவியல், வேளாண்மை ஆகியவை குறித்து அவர்கள் எந்த அளவிற்குத் தெரிந்துள்ளார்கள் என்பதைச்சோதிக்க அவை குறித்துச் சில கேள்விகளைக் கேட்கலாம்.

தேர்வு முறையானது இயன்ற அளவிற்குத் தெளிவாக இருக்க வேண்டும். அளிக்கப்பட்ட தகவலை அடிப்படையாகக் கொண்டே 'கணக்கிடுபொறி' அட்டவணையிடப்பட்ட தேர்வு முடிவுகளை அளிக்க இயலும். பிறிதொரு விடைத்தாளை அளிப்பதன் மூலம் தேர்வு நடத்துபவர்களை வசப்படுத்துவது அல்லது கணக்கிடு பொறிக்கு இறுதியாக அளிக்கப்படும் தகவலைத் தயாரிக்கும் எழுத்துப் பணியாளரை வசப்படுத்துவது என்ற முறையின் மூலம் மட்டுமே இத்தேர்வு முறையில் தலையிட முடியும். இத்தகைய தலையீடு ஏற்படாவண்ணம் உறுதி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


"கோ-ஆப்டெக்ஸ் ஆடைகள்" என
பார்த்தாலே தெரிகிறது
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி



தமிழரசு

Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண். M. 8676

